விலை: 30
பக்கங்கள்: 28

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 33 கதிர் 307 புரட்டாதி 13ஆம் நாள் சனிக்கிழமை 29 செப்ரெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## அரசியல் கைதிகள் மைத்திரிக்கு கடிதம்

கொழும்பு, செப். 29

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள 10 தமிழ் அரசியல் கைதிகளும் தமது விடுதலை தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் அந்தக் >> 25

### மருத்துவ உதவிகளையும் நேற்று முதல் புறக்கணித்து

# அரசியல் கைதிகள் தீவிர போராட்டம்

கொழும்பு, செப்ரெம்பர் 29

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள 10 தமிழ் அரசியல் கைதிகளும் நேற்றுக் காலையிலிருந்து மருத்துவத்தையும் புறக்கணித்துள்ளனர். அவர்களின் உடல்நிலை ஏற்கனவே மோசமாகவுள்ள நிலையில், மருத்துவ வசதிகளையும் புறக்கணித்துப் போராட்டத்தைத் தீவிரமாக்கியுள்ளனர். 9 ஆண்டு காலமாகச் சிறைச்சாலைக்குள் >> 23

## அரசியல் கைதிகளின் விடுதலைக்காக யாழ்ப்பாணத்தில் இன்று கவனவீர்ப்பு

*எதிர்வரும் நாள்களில் பல இடங்களில் ஏற்பாடு*

யாழ்ப்பாணம், செப். 29

நீண்ட காலமாகச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாண நகரில் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

மு.ப.11.30 மணியளவில் >> 24

see more news in
newuthayan.com

## அரசியல்வாதிகள் வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றக் கோருவது இன்னொரு போருக்கே

### இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, செப். 29

வடக்கு மாகாணத்திலிருந்து இராணுவத்தை அகற்ற வேண்டும் என்று தமிழ்த் தலைமைகளும் புலம்பெயர் அமைப்புக்களும் கோருவது இன்னொரு போரை ஆரம்பிப்பதற்காகவே. ஆனால் அங்குள்ள தமிழ் மக்களில் 80 சதவீதமானோர் இராணுவம் வெளியேறுவதை விரும்பவில்லை. இவ்வாறு இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வழிபாட்டு நிகழ்வைத் தொடர்ந்து >> 25

## கோத்தபாய ராஜபக்சவின் பாதுகாப்புக்கு ரூபா 35 லட்சம் நாளொன்றுக்குச் செலவு

*சட்டம் ஒழுங்கு பிரதி அமைச்சர் தகவல்*

கொழும்பு, செப். 29

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் பாதுகாப்புக்காக ஒரு நாளைக்கு 35 லட்சம் ரூபா செலவிடப்படுவதாக, சட்டம் ஒழுங்கு பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவித்தார். >> 24

## ரணிலைத் தேடி வந்த ஆபத்து

*மயிரிழையில் தப்பினார்!*

கொழும்பு, செப். 29

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க விபத்திலிருந்து உயிர் தப்பியுள்ளார் என்று கொழும்பு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோர் தொடர்பான கொலை >> 25

## மாகாணசபை கலையும் வரையில் அமைச்சரவைப் பிரச்சினை தீராது!

*முதலமைச்சரின் மேன்முறையீடு ஒக். 19க்கு ஒத்திவைப்பு.*

கொழும்பு, செப். 29

வடக்கு மாகாண அமைச்சரவை தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளைக்கு எதிராக வடக்கு மாகாண முதலமைச்சர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கு அடுத்த மாதம் 19ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஆயுள் காலம் ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகின்றது.

உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்ததைக் காரணமாகக் குறிப்பிட்டு மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய இடைக்காலக் கட்டளையை முதலமைச்சர் நடைமுறைப்படுத்தவில்லை. >> 24

## அடுத்த வடமாகாண சபை ஒருமித்திருப்பது அவசியம்

*கல்வி இராஜாங்க அமைச்சர் அறிவுரை*

யாழ்ப்பாணம், செப். 29

வடக்குக்காகவே 13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. எதிர்காலத்தில் ஒன்றுபட்ட வடக்கு மாகாண சபையை உருவாக்கி அதன் செயற்பாடுகளை அதிகரித்து 13க்கு அப்பாலும் கொண்டு செல்லக் கூடியவாறு >> 22

*மாகாணசபையைத் தொடர்ந்து*

## யாழ். மாநகர சபை அமர்வில் பட்டியலிடப்பட்ட மோசடிகள்

### நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேயர் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

சபை பொறுப்பேற்கப்பட்ட பின்னர் நடைபெற்ற ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான பட்டியல் யாழ்ப்பாணம் மாநகர சபை இலஞ்ச ஊழல் விசாரணைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டது.

அதை ஆராய்ந்த மேயர் அனைத்துக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் முழுமையான விசாரணைகள் நடத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் >> 24

## சதீஸின் வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப். 29

வல்வெட்டித்துறை நகர சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கியமைக்கு எதிராக, கூட்டமைப்பு உறுப்பினர் க. சதீஸ் தாக்கல் செய்த >> 24

## மணிவண்ணனின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 29

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் வி.மணிவண்ணனுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்குள் நிரந்தரமாக >> 22

## புலிகளுக்கு எதிராகப் போரிட்டமைக்காக ராணுவத்தினர் தண்டிக்கப்படமாட்டார்கள்

*அமெரிக்காவில் வைத்துக் கூறினார் நாட்டின் தலைவர் மைத்திரிபால*

நியூயோர்க், செப். 29

புலிகளுக்கு எதிராகப் போரிட்டார்கள் என்ற குற்றத்துக்காக எந்தவொரு இராணுவத்தினருக்கு எதிராகவும் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்படவில்லை. அவர்களுக்குரிய மதிப்பு போரின்போது கொடுக்கப்பட்டதைப்போன்று இப்போதும் கொடுக்கப்படுகின்றது. போருக்குப் புறம்பாக இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலேயே நாம் விசாரணை நடத்துகின்றோம். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குபற்றச் சென்ற அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அமெரிக்காவிலுள்ள இலங்கையர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். நேற்றுமுன்தினம் இடம்பெற்ற >> 24

## தமிழ், சிங்கள மொழிப் பிரச்சினை ஊவா சபையில் அமளி துமளி

கொழும்பு, செப். 29

ஊவா மாகாண சபை அமர்வின் நிகழ்ச்சி நிரலில் ஏற்பட்ட குளறுபடி மற்றும் மொழிப் பிரச்சினை ஆகியவற்றினால் சபை அமர்வில் பெரும் அமளிதுமளி இடம்பெற்று சபை அமர்வும் சில மணி நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

ஊவா மாகாண சபை அமர்வு நேற்றுக் காலை சபைத் >> 23

# கொலைச் சதி விவகாரத்தை திசை திருப்ப இந்தியா முயற்சி

## சாடுகின்றது கூட்டு எதிரணி

கொழும்பு, செப். 29

அரச தலைவர் மற்றும் கோத்தபாய ராஜபக்ச கொலைச் சதித் திட்டத்தை அரசு சாதாரணமாகஎடுக்கக்கூடாது. நாட்டின்தேசியத்தலைவர்கள்கொல்லப்பட்ட வரலாறு உள்ளது. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்ற இந்தியத் தூதரகத்தின் அறிவிப்பு விசாரணையைத் திசை திருப்பும் திட்டமாகவும் இருக்கலாம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாற்று அணியின் செய்தியாளர்சந்திப்புநேற்றுமுன்தினம்கொழும்பில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அரச தலைவர் மற்றும் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரைக்கொலைசெய்யச்சதித்திட்டம்மேற்கொள்ளப்பட்டமைதொடர்பாகவிசாரணைகள்நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டபோதும். அது தொடர்பாகஅசமந்தப்போக்கேகாணப்படுகின்றது.

இந்தச் சதித் திட்டத்தின் பின்புலத்தில் பொலிஸ் மா அதிபர், பிரதிப் பொலிஸ் மா அதிபர் அரசியல் பின்னணி இருக்குமாக இருந்தால் இவ்வாறு கொண்டு செல்ல முடியாது.

இந்தச் சதித் திட்டம் தொடர்பான விசாரணையில் எவ்வாறானமுடிவுகள்வெளிவரும்என்றஅச்சத்தில் ஐக்கிய தேசியக் கட்சியினர் உள்ளனர். இந்தச்சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர்நாலக்கசில்வாபொலிஸ்மாஅதிபரின்நெருங்கிய நண்பராக இருக்கின்றார். பொலிஸ் மா அதிபர் தலைமை அமைச்சருக்கு மிகவும் நெருக்கமாக இருக்கின்றார். அதனால் கொலைச் சதித் திட்டம் தொடர்பில் சாதாரணமாகக் கருதாமல் பரந்தளவிலான விசாரணைகளை மேற்கொள்வது நாட்டின் பாதுகாப்புக்கு நல்லதாகும்.

சதித்திட்டம் தொடர்பாக முறையான விசாரணை இடம்பெற்றால் தலைமை அமைச்சர் மற்றும் பொலிஸ்மாஅதிபர்சிக்கிக்கொள்வார்கள். சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டிருக்கும் இந்தியர் மனநிலைபாதிக்கப்பட்டவர் என இந்தியத் தூதரகம் தெரிவித்திருக்கின்றது. இந்த அறிவிப்பும் விசாரணையைதிசைதிருப்பும்செயலாகவும்இருக்கலாம். அதனால் கொலைச் சதித்திட்டம் தொடர்பான விசாரணை முறையாக இடம்பெறவேண்டுமாக இருந்தால் சட்டம் ஒழுங்கு அமைச்சை விசாரணை முடிவுக்கு வரும்வரைக்கேனும் அரசதலைவர் தனக்கு கீழ் கொண்டுவரவேண்டும் - என்றார்.

(ந-71)

# மறைத்து வைத்த திறப்பை எடுத்து வீட்டில் கொள்ளை

## நான்கரைப் பவுண் நகை அபேஸ்

வவுனியா, செப். 29

வவுனியா, பூவரசங்குளத்தில் வீட்டுக்குள் புகுந்து நான்கரைப் பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் காலை வீட்டைப் பூட்டிவிட்டுத்திறப்பை மறைவாக வைத்து விட்டு வீட்டு உரிமையாளர்கள்வெளியேசென்றுள்ளனர். வீட்டுக்கு வந்த திருடர்கள் திறப்பை எடுத்துத் திறந்து நகைகளைக் கொள்ளையிட்டுவிட்டு மறுபடியும் வீட்டைப் பூட்டித் திறப்பை வைத்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் பூவரசங்குளம்பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ந-110)

# மகிந்தகொலைவிவகாரத்தில் இந்தியாவைகோர்க்கமுயற்சி

## கூட்டுஎதிரணிக்குவந்தசந்தேகம்

கொழும்பு, செப். 29

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அண்மையில் இந்தியாவுக்குச் சென்று அந்த நாட்டுடன் இராஜதந்திர ரீதியிலான உறவுளைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார். இந்த நிலையில்மகிந்தராஜபக்சமற்றும் அவரதுகுடும்பத்தினரைகொலை செய்யும் சதி முயற்சியில் இந்தியாவைப்பயன்படுத்திக்கொள்வதற்கு அரசு முயற்சிக்கிறதா என்கின்ற சந்தேகம் எழுந்துள்ளது என்று கூட்டுஎதிர்க்கட்சிதெரிவித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் பொரளைஎன்.எம்.பெரேராநிலையத்தில்நடைபெற்றது. அதில்நாடாளுமன்ற உறுப்பினர் ஷெஹான் சேமசிங்க கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச , முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரைக் கொலை செய்வதற்குச் சதித் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அதுதொடர்பாக பொலிஸ்மாஅதிபர்மற்றும்பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக தசில்வா மீதும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள இந்தியத் நாட்டவர் தொடர்பாக இந்திய தூதரகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்தியத்தூதரகம் விசாரணை மேற்கொண்டு அறிக்கை வெளியிடுவதற்கு முன்னர் அரசு விசாரணை மேற்கொண்டு அறிக்கை வெளியிட்டிருக்க வேண்டும். ஆனால் அரசு அதைச்செய்யவில்லை. பொலிஸ்மா அதிபரைப் பாதுகாப்பதற்கு அரசு தொடர்ந்தும் நடவடிக்கை எடுத்தது வருகிறது.

பொலிஸ் மா அதிபர், சட்டம் ஒழுங்கு பிரதி அமைச்சர் நளின் பண்டார மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் ஆகியோரைப் பயிற்சிக்கு அனுப்புவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. எனவேபொலிஸார், அரசுமற்றும் தலைமைஅமைச்சரும்இணைந்துதான் கொலைச் சதியை மேற்கொண்டிருப்பது தெளிவாகிறது.

பொலிஸ் மா அதிபர் பதவி விலக வேண்டும். அல்லதுஅவரைபதவி விலக்கநடவடிக்கைஎடுக்கவேண்டும். பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் சட்டமா அதிபர் திணைக்களம் என்பவற்றின் ஆதரவிலேயே கூட்டு அரசைக் கொண்டு செல்ல முடிகிறது. அதனால்தான் அந்தத் தரப்பினரை பதவி விலக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதாக இல்லை.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச மற்றும்ராஜபக்சகுடும்பத்தினரின் பாதுகாப்பை உறுதிசெய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றார்.

(ந-71)

# ஆட்சியை மீளக் கைப்பற்றுவது மகிந்தவால் இயலாத காரியம்

## ஹிருணிகா கூறுகின்றார்

கொழும்பு, செப். 29

குற்றவாளிகளையும் மோசடியாளர்களையும் தன்வசம் வைத்துக் கொண்டு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச மீண்டும் ஆட்சி பீடம் ஏறும் முயற்சிகளை மேற்கொள்வது சாத்தியமற்ற விடயம்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச் சந்திர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொதாவில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவதுப:

மகிந்த ராஜபக்ச கடந்த காலங்களில் குற்றவாளிகளைத் தன்வசம் வைத்திருந்ததால்தான் பெரும் விளைவுகளைச் சந்தித்தார். அதன்தொடர்ச்சியே தற்போதும் நடைபெறுகின்றது. தேசிய அரசைப்பயனற்றதுஎன்றும்தூற்றும் எந்தத்தகுதியும்எதிர்த்தரப்பினருக்குக்கிடையாது என்றார். (ந)

# கட்டுப்பாடு இழந்த மூடுந்து கடைக்குள்புகுந்தது

## இரு இளைஞர்கள் படுகாயம்

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணம், நகரில் உள்ள பெரிய கடை வீதியில் நேற்று மதியம் நடந்த விபத்தில் இரு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

காங்கேசன்துறை வீதியில் இருந்துபெரியகடைவீதிக்குள் பயணித்தஹைஏஸ் ரகவாகனம் கட்டுப்பாட்டை இழந்து கடை ஒன்றுக்குள் புகுந்தது. கடைக்கு முன்புறம் நின்றிருந்த இரு இளைஞர்களை அந்த மூடுந்து மோதியதில் அவர்கள் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்து வமனையில் சேர்க்கப்பட்டனர். விபத்துத்தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார்மேற்கொண்டுள்ளனர். (ந-110)



# இதுவரை காலமில்லாத அளவு தொடருந்து விபத்து அதிகரிப்பு

## விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளத் திட்டம்

கொழும்பு, செப். 29

இதுவரைகாலமும்இல்லாதளவுதொடருந்து விபத்துகள்நாட்டில்அதிகரித்துள்ளன என்று வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபைத் தலைவர் சிசிர கோதாகொட தெரிவித்துள்ளார்.

ரயில் விபத்துக்கள் தொடர்பாக நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது;

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் தொடருந்தில் மோதி 241பேர் உயிரிழந்துள்ளனர். அந்தவகையில் மூன்று நாள்களுக்குஒருமுறைதொடருந்தில்மோதி ஒருவர்உயிரிழக்கின்றார்என்றுஆய்வுஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

தொடருந்துவிபத்துக்களைத்தடுப்பதுதொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவுள்ளதுடன் நவீன முறைகளையும் கையாளத்திட்டமிட்டுள்ளோம்.

அதேவேளை தொடருந்து மோதுண்டு உயிரிழக்கும் யானைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளன என்றுள்ளது.

(ந)

## உரிய அதிகாரிகளால்

# மாநகரிலுள்ள சட்டவிரோத கட்டடங்களை அகற்ற முடியாவிட்டால் நாம் அகற்றுவோம்

## சபையில் இப்படிக் கருத்தும் வாதங்களும்

யாழ்ப்பாணம், செப். 29

**யாழ்ப்பாண மாநகர சபைக்குள் அகற்றப்பட வேண்டிய சட்டவிரோத கட்டடங்களை அதிகாரிகளால் அகற்ற முடியவில்லை என்றால் வெளிப்படையாகக் கூறுங்கள்; நானும் உறுப்பினர்களும் இணைந்து அந்த கட்டடங்களை அகற்ற உதவி செய்கின்றோம் என்று மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வு சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. சபை உறுப்பினர் திருமதி யோகேஸ்வரி சட்டவிரோதமாகக் கட்டப்பட்ட மதிலை அகற்றப் பல தடவைகள் சபையில் கதைத்தும் இன்றுவரை அகற்றப்படவில்லை என்று சுட்டிக்காட்டினார். இதற்குப் பதில் வழங்கும்போதே முதல்வர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது,

எமது சபையின் எல்லைக்குள் உள்ள சட்டவிரோத கட்டடங்கள் சிலவற்றை உடனடியாக அகற்றுமாறு உத்தரவிட்டும் இன்றுவரை அகற்றப்படவில்லை. எனவே அதிகாரிகளால் வாகனங்களைக் கொண்டே உடைக்க முடியாது விட்டால் கூறுங்கள். நான் சபை உறுப்பினர்களை அழைத்துக் கொண்டு அப்புறப்படுத்த முடியும். அப்படி நடந்தால் அதிகாரிகள் உங்களுக்கு வேலைகள் இல்லாது போய்விடும். எனவே அதிகாரிகள் உங்களுக்கு ஏதாவது பிரச்சினைகள், அழுத்தங்கள் இருந்தால் கூறுங்கள் - என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த சபையின் ஆணையாளர்,

மாநகர சபையின் காணிக்குள் சட்டவிரோத கட்டடங்கள் இருந்தால் அறிவுறுத்தலை வழங்கிவிட்டு நாம் அதனை அகற்ற முடியும். ஆனால் தனியார் காணிக்குள் உள்ள கட்டடங்களை அகற்றுவதாயின் நாம் நீதிமன்றின் ஊடாகவே அதனைச் செய்ய முடியும். அவ்வாறான வழக்குகள் பல நிலுவையில் உள்ளன - என்றார்.

இதற்குப் பதில் அளித்த உறுப்பினர் ரெமிடியஸ்,

முன்னைய காலம் வேறு இப்போதைய காலம் வேறு. காணி சம்பந்தமான வழக்குகள் நீதிமன்றுக்கு வந்தால் ஒரு வருடத்துக்குள் முடிவுறுத்தப்படுகின்றன. எனவே சட்டவிரோத கட்டடங்கள் தொடர்பில் துணிந்து வழக்குத் தாக்கல் செய்யமுடியும். எனினும் அப்பாவிகளான ஏழை மக்களின் வயிற்றில் அடிக்காது அவர்களுக்கு எந்தவகையில் எவ்வாறான விடயத்தைச் செய்யலாம் என்பதைப் பாருங்கள். மாநகர சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் சிலர் கட்டட அனுமதியின்போது கையூட்டல் பெறுவதாகத் தகவல் கிடைத்துள்ளது - என்றார்.

அதன்பின்னர் கருத்துத் தெரிவித்த உறுப்பினர் பிலிப்,

சில அதிகாரிகள் கட்டட அனுமதியைக் கொடுக்காது அலைக்கழிப்பதாகவும் அறிகின்றோம். இதனால் ஒரு குடும்பத்தின் திருமண நிகழ்வுகூட நிறுத்தப்பட்டுள்ளது. அதாவது திருமணம் நிச்சயிக்கப்பட்ட பெண் வீட்டார் சீதனமாக வீடு ஒன்றைக் கட்டித் தருவதாக மணமகன் வீட்டுக்குக் கூறியுள்ளனர். அதன்படி வீடு கட்ட அனுமதி கோரி பல மாதங்கள் கடந்தும் அனுமதி கிடைக்காததால் குறித்த திருமணப் பேச்சு முறிந்தது. திருமணம் நடைபெறவில்லை - என்றார்.

இதற்குப் பதிலளித்த மாநகர ஆணையாளர்,

அதிகாரிகளை எழுந்தமானமாக யாரும் குறைகூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. அதிகாரிகள் தவறுவிட்டால் எழுத்து மூலமாக முறைப்பாடு தாருங்கள். நாம் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கின்றோம். பொதுவாக வீடுகள் அனுமதிக்கு வந்தால் அனைத்து விடயங்களும் நேர்த்தியாகவும் முழுமையாகவும் இருந்தால் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது. விண்ணப்பத்தில் ஏதாவது குறைகள் இருந்தால் அவை நிவர்த்தி செய்தே அனுமதி வழங்கப்படும் - என்றார். (4,8)

## முதல்வருக்கான தங்குமிடத்துக்கு உறுப்பினர்கள் கடும் எதிர்ப்பு!

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாண மாநகர சபை முதல்வருக்கான பிரத்தியேக தங்குமிடத்தைப் பெறுவதற்கு ஈ.பி.டி.பியினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மாநகர சபை உறுப்பினர்களும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாநகர சபையின் 6 ஆவது அமர்வு சபை மண்டபத்தில் மாநகர முதல்வர் இ. ஆனோல்ட் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இந்த அமர்வில் தமக்கான தங்குமிட விவரங்களை விலை மதிப்பீட்டுத் திணைக்களம் தந்துள்ளது. அவர்கள் தமது அறிக்கையில் மாதாந்த வாடகைக் கொடுப்பனவாக 30 ஆயிரம் ரூபாவும் குறித்த தங்குமிடத்தைச் சீர் செய்ய 2 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாவும் தேவை என்று அறிவித்துள்ளனர். இதனைச் சபைக்குத் தெரியப்படுத்துகின்றேன் என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான ரெமிடியஸ், திருமதி ப.கோகேஸ்வரி ஆகியோர் மாநகர சபைக்கு என்று நிரந்தமான தங்குமிடம் இருந்தால் மட்டுமே சபையின் நிதியை அதற்குப் பயன்படுத்த முடியும். இதனைவிடுத்து சபைக்கு உரித்து இல்லாத தங்குமிடத்துக்கு சபையின் நிதியைப் பயன்படுத்த முடியாது. அவ்வாறு நடந்தால் சபை உறுப்பினர்களே தங்கள் சொந்த நிதியைச் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். எனவே எமது கடசியினர் யாரும் இதற்கு ஆதரவு இல்லை. எமது எதிர்ப்பைப் பதிவு செய்கின்றோம் என்றனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த முதல்வர், இங்கு யாரும் கட்சி ரீதியாகக் கதைக்க முடியாது. அனைத்துமே ஏனைய மாநகர முதல்வர்களுக்கு உள்ள விடயங்களையே நாம் இங்கும் கேட்கின்றோம். அத்துடன் எந்தச் சட்டத்துக்கும் முரணாக நாம் இதனைக் கேட்கவில்லை. இதனை விளங்காது எதிர்ப்பவர்கள் யாராயினும் ஒவ்வொருவராகப் பதிவிடலாம் என்றார். இதன்போது சபையில் இருந்த ஈ.பி.டி.பியினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னியினரும் தங்களின் எதிர்ப்பைப் பதிவு செய்வதாகத் தெரிவித்தனர். (4,8)

## பலவித அறிவிப்புகளைக் கூறி நடைமுறைப்படுத்துகிறது சபை

### முதல்வர் ஆர்னோல்ட் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைக்குள் வாழும் மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு பல அறிவிப்புகளை மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாண மாநகர சபையின் 6 ஆவது அமர்வு சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த அமர்வில் சபை அறிவித்தல்களை அறிவிக்கும்போதே இவ்வாறான அறிவித்தல்களை விடுத்துள்ளார். அவர் தனது அறிவித்தல்களில்,

யாழ்ப்பாணப்பொது நூலகத்தில் தென்னாபிரிக்காவின் முன்னாள் அரச தலைவர் நெல்சன் மண்டேலாவின் உருவச்சிலை அமைக்கப்படும்.

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வர்த்தக நோக்கில் அல்லது சேவை நோக்கில் நிரந்தரமற்ற தங்குமிட சேவை மேற்கொள்பவர்கள் அடுத்த மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டும். இது தொடர்பில் பத்திரிகைகள் ஊடாகவும் அறிவிக்கப்படும். மாநகர சபை எல்லைக்குள் உணவுகள், தின்பண்டங்கள் விற்பனை செய்வோர் சபையிடம் முறையாகப் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கான கால எல்லையும் அடுத்தமாதம் 30 ஆம் திகதி நிர்ணயிக்கப்படுகின்றது. பண்ணைக் கடற்கரையில் உள்ள சிற்றுண்டிச் சாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளைத் தூய்மையாக வைப்பதற்கும் மக்களுக்கான சிறந்த பொழுதுபோக்கு இடமாக அமைவதற்கும் ஏற்ற கருத்திட்ட முன்மொழிவுகள் பகிரங்கமாகக் கூறப்படுகின்றன.

யாழ்ப்பாண நகரக் கடைகளில் வியாபாரிகள் கடையின் எல்லைக்கு வெளியேயும் பொருள்க



ளைக் காட்சிப் படுத்துகின்றனர். இதனால் நடைபாதையால் செல்பவர்கள் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே விற்பனையாளர்கள் அவ்வாறான செயல்களை நிறுத்த வேண்டும். மீறும் சந்தர்ப்பத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். சபை அமர்வுகளில் அறிக்கைகள் இனிவரும் காலங்களில் உறுப்பினர்களுக்கு மின் அஞ்சல் ஊடாகவே அனுப்பப்படும். ஏனெனில், அறிக்கை பிரதியிட அதிக செலவீனம் ஏற்படுகின்றது. இதனைக் கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது - என்றார். .(4,8)



வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்தின் வருடாந்த மாதிரிச்சந்தை நேற்று இடம்பெற்றது. ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை ஊக்கிவிக்கும் நோக்குடன் இந்தச் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது. வித்தியாலயத்தின் கலையரங்க மண்டபத்தில் தரம் 1தொடக்கம் 5 வரைக்குமான மாணவர்கள் இந்தச் செயற்பாட்டில் ஈடுபட்டனர். சந்தையைப் பார்க்க அயற்பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், கிராமமக்கள் பலர் வந்திருந்தனர். (70)

## யாழ்ப்பாண மாநகர சபையில்

# மராமத்துக் குழுவின் தலைவராக உறுப்பினர் ஜெயசீலன் நியமனம்

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாண மாநகர சபையில் மராமத்துக் குழுவின் தலைவராக சபையின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் ஜெயசீலன் செயற்படுவார் என்று நேற்று மாநகர சபை அமர்வில் அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாநகர சபை அமர்வு நேற்று இடம்பெற்றது. இந்த அமர்வில் மராமத்துக் குழுவின் தலைமைப் பதவி வெற்றிடமாக உள்ளது. அதனைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நிரப்ப வேண்டும் என்று மாநகர முதல்வர் வேண்டுகோள் விடுத்தார்.

இந்த நிலையில் சபையின் தேநீர் இடைவெளியின் பின்னர் சபைக்குத் தெரிவிப்பதாக உறுப்பினர் ஜெயசீலன் கூறினார்.

பின்னர் சபை அமர்வின் இறுதியில் தாம் மராமத்து குழுவின் தலைவராக வருவதுடன் எமது கட்சியில் இருந்து ஒரு உறுப்பினரைக் குறித்த குழுவுக்கு உள்வாங்குவது எனவும் சபையில் கூறினார். இதனால் இதுவரை மராமத்து குழுவில் இருந்த சிக்கல்கள் அகன்றுள்ளன.

யாழ்ப்பாண மாநகர சபையின் (மராபத்து) வேலைப்பகுதிக் குழுவின் தலைவராக அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மணிவண்ணன் தலைவராகச் செயற்பட்டார்.

உறுப்புரிமை தொடர்பில் நீதிமன்றில் இடம்பெறும் வழக்குக் காரணமாக மணிவண்ணன் சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்ள இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்தப் பதவி வெற்றிடமாக இருந்தது. (4,8)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 29
சைவத்தமிழ்திருமுறையழகுஎன்னும் நூல்வெளியீட்டுநிகழ்வு குப்பிளான்சிவ பூமிஆச்சிரமத்தில்இன்றுஇடம்பெறவுள்ளது.
குப்பிளான் கன்னிமார் கௌரிஅம்பாள் ஆலய பரிபாலன சபையின் தலைவர் சோ.பரமநாதன் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெறுகின்றன.
ஆசியுரையைசிவசிறிகுமாரராஜகுருக்கள்வழங்கவுள்ளார். வரவேற்புரையை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.விஷ்ணுகரன் வழங்கவுள்ளார். வாழ்த்துரையைதெல்லிப்பழைஅள்மிகுதுர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுகன், குப்பிளான் சைவ மகா சபையின் தலைவர் தா.கணேசலிங்கம் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ம)

## இந்து அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்குக் கற்கை

யாழ்ப்பாணம், செப். 29
இந்துசமய அலுவல்கள் திணைக்களத்தின்கீழுள்ளஇந்துசமயகலாசாரகற்கைகள்நிறுவனத்தின்சிறிலசிறிஆறுமுகநாவலர் பயிற்சி நிறுவனத்தால் வடமாகாணத்துக்கான அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான வகுப்பு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. ஏற்கனவே பதிவுசெய்தவர்கள் இதில் பங்கெடுப்பார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## நீர்வேலி கந்தசுவாமி கோயில் கார்த்திகை உற்சவம் இன்று

யாழ்ப்பாணம், செப். 29
நீர்வேலிகந்தசுவாமிகோயிலின்கார்த்திகை உற்சவமும்இரண்டாவது சனிஸ்வரர் வழிபாடும் இன்று இடம்பெறும். மாலை 4 மணிக்கு சிறப்பு பூசைகள், அபிசேகம் என்பன இடம்பெற்று திருக்கார்த்திகைத்திருவிழா நடைபெறும். (ம-17)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 29
யாழ்ப்பாணம் தெல்லிப்பழை பனை தென்னைவளஅபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கத்ததின் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமைகாலை11மணிக்குகாரியாலய மண்டபத்தில் சங்கத் தவைவர் நா.கணேசன்தலைமையில்நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தின ராக யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திஉதவிஆணையாளர் பொ.மோகன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-63)

## விளையாட்டு விழா

அருள்மிகுசாமுண்டாதேவிசமேத ஞானவைரவர் ஆலய அறநெறிப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுவிழாநாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.
அறநெறிப் பாடசாலையின் அதிபர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் பாடசாலையின் முன்றிலில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. தலைமை விருந்தினராக நல்லூர் பிரதேச சபை உபதவிசாளர் இராஜமனோகரன் ஜெயகரன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக ராஜா கிறீம் ஹவுஸ் உரிமையாளர் சி.சண்முகானந்தன், கிராம அலுவலர் புஸ்பசிங்கம் ரேகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். மதிப்புறுவிருந்தினராகநல்லூர்பிரதேச செயலக இந்து கலாசார உத்தியோகத்தர் நகுலா ரபேந்திரராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ம)



யாழ்ப்பாணம் சித்தன்கேணி சிறிகணேச வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா, பரிசளிப்பு விழா, நிறுவனர் தின விழா மற்றும் நூல் வெளியீடு ஆகிய நிகழ்வுகள் மிகவும்சிறப்பாகநடைபெற்றன. இந்தநிகழ்வில்மலையகமக்கள்முன்னணியின் தலைவரும்தமிழ்முற்போக்குகூட்டணியின்பிரதித்தலைவரும்கல்விஇராஜாங்க அமைச்சருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஸ்ணன் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டார். இவருடன்யாழ்ப்பாணக்கோட்டகல்விப்பணிப்பாளர்நோபட் உதயகுமார், பழைய மாணவர் கா.மகாதேவா ஆகியோரும் கலந்து கொண்டனர். (ம)



கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. அதிபர்நா.கருணாகரன்தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிருபா சாரதி பயிற்சிப் பாடசாலை அதிபர் அ.கிருபாகரன் கலந்துகொண்டார். (ம-159,9)

### வலி.கிழக்கில்

# வாழைக்குலைகள்திருடப்படுவது அண்மைக்காலமாக அதிகரிப்பு

### சந்தேகத்தில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,செப்.28
வலிகாமம்கிழக்குப்பிரதேசத்தில் வாழைக் குலைகள் திருட்டுச் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன என்று வாழைக்குலை உற்பத்தியில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் அதிருப்தி தெரிவித்தனர். நீர்வேலி, கோப்பாய், உரும்பிராய், சிறுப்பிட்டி ஆகிய பகுதிகளில் அண்மைக்காலமாக வாழைக் குலைகள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றனஎன்றும்தெரிவிக்கப்படுகிறது.
வாழைக்குலை திருட்டு சம்பவத்தில் ஈடுபட்ட குழுவொன்று கடந்த வியாழக்கிழமை ஊர் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டும் உள்ளது. குறித்த குழு கோப்பாய்ப் பிரதேசத்தில் உள்ள வாழைத்தோட்டத்தில் இரவுவேளையில்வாழைக்குலைகளை களவாக வெட்டிக் கொண்டுசென்றசமயம்பொது மக்கள் அவதானித்துவிட்டு திருடர்களைத் துரத்தியுள்ளனர். திருட்டுக்குழுவைச்சேர்ந்த ஒருவர் அகப்பட்டுக்கொள்ள ஏனையவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். அகப்பட்டவர்கோப்பாய்பொலிஸாரிடம்ஒப்படைக்கப்பட்டார். "வாழைகளை நாள்தோறும் சிறப்பாகப் பராமரித்து அவற்றின் அறுவடையைப்பெறும்காலத்தில்குலைகளை திருடர்கள் வெட்டிச் சென்றுவிடுகின்றனர். வாழை மரங்கள் நிறைந்துள்ள பகுதிகளில் மாலைப் பொழுதுகளில் செல்லும் திருடர்கள் முற்றிய குலைகள் எங்கெல்லாம் உள்ளன என்பதை இனங்கண்டு அவற்றை காவுகொண்டு விடுகின்றனர்.
நாள்தோறும் பல ஆயிரங்கள் இவர்களால்நஷ்டப்படவேண்டியுள்ளது" என்று வாழையை பயிர்செய்யும் விவசாயிகள் கவலைதெரிவித்தனர். (ம-17)

## லயன்ஸ் கழக நிர்வாகிகள் பதவியேற்பு

கொடிகாமம் செப். 28
வரணி லயன்ஸ் கழகத்தின் நடப்பு வருட நிர்வாகிகள் பதவியேற்புநிகழ்வுநாளை மாலை 4 மணிக்கு நடைபெறும்.
கழகத் தலைவர் எஸ்.ஜெயசங்கர் தலைமையில் நுணாவில் அமெரிக்க இலங்கை திருச்சபைக்கு அருகில் உள்ள மண்டபத்தில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பன்னாட்டு லயன்ஸ் கழக 306பி1 மாவட்ட நிறைவேற்று அலுவலர்இ.ஜெயபாலன்கலந்துகொள்வர். (ம-9,159)

## நூல்வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 29
தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியிடும் மாதவி உமாசுதசர்மாவின் 'அவளும் நானும்' கவிதைத் தொகுதி நூல்வெளியீடு நாளை இடம்பெறவுள்ளது.
ஹம்சியா மஹாலில் (ராஜா கிறீம் ஹவுஸ்) நாளை காலை 9 மணிக்கு நடைபெறும் இந்த நிகழ்வுக்கு வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகரும் எழுத்தாளருமான க.சிவகரன் தலைமை தாங்குகிறார்.
மானிப்பாய் சத்தியசாயி பாடசாலையின் அதிபர் கலா சுந்தரேசன் அறிமுக உரையையும், யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளரும் கவிஞருமான இ.த.ஜெயசீலன் மதிப்பீட்டுரையையும், எழுத்தாளர் மு.மயூரன் கருத்துரையும் வழங்கவுள்ளனர். (ம)



'ஒளிரும் வாழ்வு' அமைப்பின் அறிவுச்சோலை கல்விப் பிரிவில் கல்வி கற்கும் 150 மாணவர்களுக்கு காலணிகளும்இரண்டுமாணவர்களுக்குதுவிச்சக்கரவண்டியும்புதுக்குடியிருப்புபிரதேசத்தில்வசிக்கும் 40 பெண் தலைமை குடும்பங்களிற்கு உடுதுணியும் பண உதவித்தொகையும் கடந்த 18ஆம் திகதி வழங்கப்பட்டது. புலம்பெயர்தமிழர்செரீனாஎன்பவரால்வழங்கப்பட்டநிதியிலிருந்தேமேற்படிஉதவிகள் செய்யப்பட்டுள்ளன. (ம-159)

# கைதடிஅரசமுதியோர்இல்லத்தில்பன்னாட்டுமுதியோர்வாரநிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப். 29
'இல்லத்தின் சிறப்பு மூத்தோரின் இருப்பு' என்ற தொனிப்பொருளில் கைதடி அரச முதியோர் இல்லம் இம்முறை பன்னாட்டு முதியோர் வாரத்தைக் கடைப்பிடிக்கவுள்ளது. அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம்7ஆம்திகதிவரைக்கும் இந்த பன்னாட்டு முதியோர் வார நிகழ்வுகளை சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனஎன்றுஇல்லத்தின் அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்தார்.
இந்த முதியோர் வாரத்தில் கைதடி அரச முதியோர் இல்லத்தில் மூத்தோர் மதிப்புறுத்தல், சமூக ஆர்வலர்கள் மதிப்பளித்தல் போன்ற நிகழ்வுகளும்இடம்பெறவுள்ளன. அதனைவிட பாடசாலை மாணவர்கள் மற்றும் நாட்டின் பிரபல கலைஞர்கள்பங்குபெற்றும்கலை நிகழ்வுகள்தினமும்மாலை 6.30 மணிக்குஇல்லத்தின்கலைஅரங்கில் இடம்பெறும். முதியோர்வார நிகழ்வுகள் தினமும் இரு கட்டங்களாக நடத்தப்படும். இந்த நிகழ்வுகளை வடக்கின் சகல மாவட்டங்களையும் சேர்ந்த மூத்தோர்கள் பார்வையிடுவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-17)

## தொகுதிவாரியான வேலைத்திட்டங்களுக்கு முறையான மதிப்பீடுகள் மிகவும் அவசியம்

### யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் வேதநாயகன் கருத்து

யாழ்ப்பாணம். செப். 29
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகாரங்கள் அமைச்சால் தேர்தல் தொகுதி வாரியாக அனுமதிக்கப்பட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் பிரதேச செயலாளர்கள் அதற்கான முறையான மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் பிரதேச செயலாளர்களைக் கோரியுள்ளார்.

துரித கிராம அபிவிருத்தி திட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார் அவர்.

"தேர்தல் தொகுதி வாரியாக பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வகையில் கருத்திட்டங்கள், தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரங்கள் அமைச்சினால் அனுமதிக்கப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் வேலைத் திட்டங்களின் முன்னேற்றங்கள், விவரங்கள் அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைப்பதுடன் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படவேண்டும்" என்றும் மாவட்டச் செயலகத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-50)

## வலி.தென்மேற்கில் உரமானியத்துக்கு படிவங்கள் பெறப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 29
வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் மற்றும் காரைநகர் கமநல சேவைகள் பிரிவுக்கு உட்பட்ட வகையில் பெரும்போக உரமானியத்துக்கான படிவங்கள் முழுமையாக விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்டுள்ளன.

இவ்வாறு பெறப்பட்ட படிவங்களின் தொகுப்பு ஊடாக விரைந்த வகையில் மக்களுக்கான உரமானியம் கமநல சேவைகள் நிலையங்கள் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பெரும்போக அதிகாரி கே.கோகுலன் அறிவித்துள்ளார். (ம-50)

### யாழ்ப்பாணக் குடாநாட்டில்


# டெங்குக்கு எதிராக துரித நடவடிக்கை!

யாழ்ப்பாணம். செப். 29
யாழ்ப்பாணக் குடாநாட்டில் டெங்குக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மழைகாலம் ஆரம்பிக்கப்படவுள்ளதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று யாழ்ப்பாண மாநகர பதில் முதல்வரும் பிரதி முதல்வருமான து.ஈசன் தெரிவித்தார்.

"வடிகால்களில் தேங்கியிருக்கும் சேறுகள் மற்றும் கழிவுகள் அனைத்தும் அகப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகளுக்கென சிறப்பாக நியமிக்கப்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் மழைக்காலத்துக்கு முன்னதாக அனைத்து வாய்க்கால்களையும் துப்புரவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று தெரிவித்தார். (ம-17)

## பல்கலைக் கழக மாணவர்களுக்கு பயிற்சிப் பட்டறை



யாழ்ப்பாணம், செப். 29
பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்கான 3 நாள் ஆங்கில பயிற்சிப்பட்டறை கடந்த 22, 23 மற்றும் 24ஆம் திகதிகளில் ஆற்றல் அமைப்பால் நடத்தப்பட்டது. ஸ்டான்லி வீதியிலுள்ள ஹட்ச் களத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன. 75க்கு மேற்பட்ட மாணவர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். (ம)



## தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று அரசதலைவர் உத்தியோகபூர்வப் பணி



தென்மராட்சி, செப். 29
தென்மராட்சி பிரதேச செயலக மக்களுக்கான அரச தலைவர் உத்தியோகப்பூர்வப் பணி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்ற இந்த நிழ்வில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் விஜித அபேவர்த்தன, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன், உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி கொடகந்த, அமைச்சுக்கள் திணைக்களங்கள் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள், யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன், சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி இ.சிவமங்கை, உபதவிசாளர் அ.பாலமயூரன், சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், உபதவிசாளர் செ.மயூரன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள், இலங்கை மனித உரிமைகள் நிறுவன வடமாகாணப் பணிப்பாளர் வ.சிவராஜா, யாழ்ப்பாண மாவட்டச்செயலக உயர் அதிகாரிகள், தென்மராட்சி பிரதேச திணைக்கள அலுவலர்கள், பொலிஸார், படையினர் உட்படப்பலரும் கலந்துகொண்டனர்.

நடமாடும் சேவையில் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் தமது தேவைகளுக்காகப் பதிவு செய்துள்ளனர்.

கல்லூரி வளாகத்தில் 72 இடங்களில் நிலையங்கள் அமைக்கப்பட்டு சேவை கள் வழங்கப்பட்டன. அத்துடன் பற்சிகிச்சை, கண் பரிசோதனை போன்றவையும் இடம்பெற்றன. 50 பேருக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. தையல் இயந்திரங்கள் 5 பயனாளிகளுக்கும், காணி உரித்தாவணங்கள் 25 பேருக்கும், 3 பயனாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகளும், நான்கு பயனாளிகளுக்கு சமுர்த்தி உதவிப் பொருள்களும், 25 பாடசாலை மாணவர்களுக்குகற்றல் உபகரணங்களும், மலக்கூடம் மற்றும் கிணறு அமைத்த பயனாளிகளுக்கு அதற்குரிய கொடுப்பனவுக் காசோலைகளும் வழங்கப்பட்டன. (ம-9,159)

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

கொடிகாமம் செப். 29
மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம், சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை ஆகியவற்றின் பழைய மாணவர் சங்கக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பாடசாலை மண்டபங்களில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அபிவிருத்தி மற்றும் மாணவர்களின் கல்வி மேம்பாடு தொடர்பாக ஆராய்வதுடன் நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறவுள்ளதால் பாடசாலைகளின் பழைய மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ம-9,159)



கோண்டாவில் ஞானவீர முன்பள்ளிக்குப் புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்துகொண்டு கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டார். (ம)

## டெங்கு நோய்த்தாக்கம் அராலியில் கட்டுக்குள்

யாழ்ப்பாணம், செப். 29
மானிப்பாய் - சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த பொதுச் சுகாதார பரிசோதகர்களின் இணைந்த துரித நடவடிக்கையினால் அராலியில் பரவிய டெங்கு நோய்த் தாக்கம் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரு மாதத்தில் அராலி தெற்கு கிராமத்தில் 42 பேர் டெங்கால் பாதிக்கப்பட்டனர் என்று அவதானிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து பிரதேச சபைத் தவிசாளர் த.நடனேந்திரன் தலைமையில் அராலி பிரதேசம் முழுவதும் சுகாதாரப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதையடுத்து அந்தப் பகுதியில் டெங்கு தற்போது கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-50)



கைதடி தெற்கு மின்னொளி முன்பள்ளி மாணவர்களின் ஆக்கப் பொருள் கண்காட்சி முன்பள்ளி ஆசிரியர் தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இடம்பெற்றது.


முதன்மை விருந்தினராக முன்பள்ளி ஒருங்கிணைப்பாளர் த.சுபத்திரா தேவி கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இவருடன் பிரதேச சபை உறுப்பினர் இ.ஜானகி, கைதடி தெற்கு சனசமூக நிலைய தலைவர், உறுப்பினர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-159,9)

# மடுவில் வறட்சி தாண்டவம்! நிலம் காட்டுகின்றன கிணறுகள்

## கருகுகின்றன பயிர்கள், மரங்கள்

**மன்னார், செப். 29**

**மன்னார் மாவட்டம் மடு பிரதேசத்தில் வறட்சியால் கிணறுகள் பல வற்றியுள்ளன. அவற்றுள் குப்பைகள், சருகுகள்தான் காணப்படுகின்றன. பயிர்கள் வாடியும் காய்ந்தும் அழிந்துகொண்டிருக்கின்றன என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.**



மடு பிரதேச செயலகப்பிரிவிற்கு உட்பட்ட பாலன்பிட்டி தொடங்கி கீரிசுட்டான இரண இலுப்பக்குளம் உட்பட பத்துக்கும் மேற்பட்ட கிராமங்கள் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. சிறு குளங்கள் மட்டுமன்றி பெரிய குளங்களும் தண்ணீரின்றி உள்ளன. கிணறுகளும் தண்ணீர் இல்லாமல் நிலம் தெரிய வறண்டு போயுள்ளன. அதனால் பிரதேச மக்கள் குடிப்பதற்கும், பிற பாவனைக்கும் தண்ணீர் வசதி இல்லாது அவதிப்படுகின்றனர்.

வீடுகளில் வளர்க்கும் கால்நடைகளுக்கும், பழ வகை, மரம் செடிகள் போன்றவற்றுக்கும் தண்ணீர் கிடையாது. ஒவ்வொரு வீட்டுக் காணிகளிலும் காணப்படும் மரங்கள், செடிகள் நெருப்பில் எரிக்கப்பட்டவை போன்று காட்சியளிக்கின்றன.

சென்ற வருடம் பரிசு பெற்ற வீட்டுத்தோட்டங்கள்

இந்த வருடம் பாலைவனமாக மாறிக் கொண்டிருக்கிறன என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர்.

வீட்டுக்கு வீடு அதிக தூரம் காணப்படுவதால் நீர்த் தாங்கிகள் மூலமாகத் தண்ணீர் தருவதைவிடுத்துக் குழாய்க் கிணற்று வசதிகளை ஏற்படுத்தினால் குடிதண்ணீருடன் எமது வாழ்வாதாரத்தை மேம்படுத்த உதவியாக இருக்கும் என்று அந்த பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

"வறட்சியால் மன்னார் மாவட்டத்தில் மடுபிரதேச மக்கள்தான் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். வறட்சி நிவாரணம் மிக விரைவில் மக்களுக்கு வழங்கப்படும்" என்று மடு பிரதேச செயலாளர் ஜெயகரன் தெரிவித்தார்.

(4,213)



# அதிபரை நியமிக்கக் கோரி பாடசாலையில் போராட்டம்

வவுனியா, செப். 29

வவுனியா மூன்றுமுறிப்பு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அதிபரை நியமிக்குமாறு கோரிப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

வவுனியா தெற்கு வலயகல்வி அலுவலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நேற்று நடத்தப்பட்டது.

கடந்த ஒருவருடமாகக் குறித்த பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப்படவில்லை. கல்வி மற்றும் ஏனைய செயற்பாடுகள் தொடர்பாகச் சீரான நடவடிக்கைகளை எடுக்க முடியாதுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது என்று தெரிவித்துப் பெற்றோர்கள் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "மாகாணம் என்னசெய்கிறது?, வலயம் என்னசெய்கிறது?, கிராமப்புறப் பாடசாலைகளுக்குக் கல்வி இல்லையா?, ஒரு வருடமாக நேர்முகத்தேர்வு நடைபெறுகிறதா?, எமது பாடசாலைக்கு அதிபரை நியமி!, மாணவர்களின் கல்வியைப் பாதிக்கச் செய்யாதே போன்ற வாசகங்கள் எழுதிய பதாதைகளைத் தாங்கியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த பாடசாலையில் ஜி.சி.ஈ. சாதாரண தரம்வரை கல்விச்செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. 300க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்விகற்கின்றனர் என்றும் போராட்டகாரர் தெரிவித்தனர்.

"குறித்த பாடசாலைக்கு அதிபரை நியமிப்பதற்காக வலய மட்டத்தில் நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டது. அதன்முடிவுகளை மாகாணக் கல்வி திணைக்களத்துக்கு அனுப்பியிருந்தோம். மாகாணத் திணைக்களத்தால் அவை பரிந்துரைசெய்யப்பட்டு கல்வி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அமைச்சின் செயலாளர் உத்தியோகபூர்வப் பயணமாக வெளிநாடு சென்று அண்மையிலேயே அவர் திரும்பியுள்ளார். இதுவரை கையொப்பமிடவில்லை. எதிர்வரும் புதன்கிழமை பாடசாலைக்கு அதிபர் நியமிக்கப்படுவார்" என்று வவுனியா நகரக் கோட்டக்கல்வி அதிகாரி எம். பி. நடராஜா உறுதியளித்தார்.

புதன்கிழமை அதிபரை நியமிக்காவிடின் மீண்டும் போராட்டம் நடத்தப்படும் என்றுகூறி அவர்கள் கலைந்து சென்றனர்.

(4,110)

## சிங்கள பாடநெறி பயிற்சி பெற்றோருக்கான சான்றிதழ் நாளை

கொடிகாமம், செப். 29

வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அரச அலுவலர்களுக்கான, இரண்டாம் மொழி சிங்கள பாடநெறி பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி 155 ஆம் கட்டை தொண்டமான் நகரில் அமைந்துள்ள வடக்கு மாகாண பயிற்சி நிலையத்தில்

இந்த நிகழ்வு இடம் பெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் நிர்வாகப் பிரிவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசனும், சிறப்பு விருந்தினராக தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் வடக்கு மாகாண நிலைய உதவிப் பணிப்பாளர் திருமதி கே.யன்சியாவும் கலந்துகொள்வர், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் பயிற்சி நெறியில் பயிற்சியாளர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(4,159)

# பொற்கேணிப் பாடசாலையில் மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல்



மன்னார், செப். 29

மன்னார் பொற்கேணி அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் 2ஆம் மாடிக் கட்டடம் அமைப்பதற்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

அதிபர் எம்.எச்.ஹஸ்பி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியுதீனின் பிரத்தியேகச் செயலாளரும் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான ரிப்கான் பதியுதீன், மாகாண சபை உறுப்பினர் அலிக்கான் ஷரீப், வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சுகந்தி செபஸ்தியன், முசலிப் பிரதேச சபை உறுப்பினர் மற்றும் பாடசாலை சமூகத்தினர் கிராமப் பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர். கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியுதீன் நிதி ஒதுக்கீட்டில் அடிக்கல் நடப்பட்டது.

(4,56)

# மன்னாரில் கண்காட்சி

தலைமன்னார், செப். 29


மன்னாரின் புராதனத்தையும் சகவாழ்வையும் வெளிக்கொணரும் நோக்குடன் புராதன புகைப்படக் கண்காட்சி ஒன்று மன்னாரில் இன்று இடம்பெறவுள்ளது.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் முற்பகல் 9.15 தொடக்கம் பிற்பகல் வரைக்கும் கண்காட்சி நடைபெறும். தேசிய சமாதானப் பேரவையின் உதவியுடன் இதனை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக மன்னார் மாவட்டச் செயலர் சீ.ஏ.மோகன்ராஜ் கலந்து கொள்வார்.

மதிப்புறு விருந்தினர்களாக மன்னார் பட்டினம் பிரதேச செயலாளர் எம்.பரமதாஸ், நானாட்டான் பிரதேச செயலாளர் எம்.சிறீஸ்கந்தகுமார், முசலி பிரதேச செயலாளர் கே.வசந்தகுமார், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் கலந்து கொள்கின்றனர்.

(4,60)



வவுனியா நகரசபையால் பத்தாம் வட்டாரத்தின் கோவில் புதுக்குளம், ஐந்தாம் ஒழுங்கையின் குறுக்கு வீதி சீரமைப்புச் செய்யப்படுகிறது. பத்தாம் வட்டாரத்தின் நகரசபை உறுப்பினர் ச. மோகனின் வேண்டுகோளின்படி வவுனியா நகர சபை 20 இலட்சம் ரூபாவில் தார் இட்டுச் சீரமைக்கிறது. (110)

## சிறப்புத் தேவையுடையோர் அலைபேசிகள் திருத்தும் பயிற்சியில் இணையவும்

மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதார மேம்பாட்டை கருத்திற்கொண்டு கிளிநொச்சி மாவட்ட சமூக வேசவைகள் திணைக்களம் அலைபேசி திருத்தும் பயிற்சி நெறி ஒன்றை ஆரம்பித்துள்ளது. அதில் கலந்து பயன்பெறுமாறு அழைக்கப்படுகின்றனர்.

கடந்த 22ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட குறித்த பயிற்சி நெறியில் முதற்கட்டமாக, தெரிவு செய்யப்பட்ட பத்து பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

(4,214,35)

# பாப்பாமோட்டை மீனவர் தீர்வுகோரிப் போராட்டம்

## மாவட்டச் செயலருக்கு மனு

**மன்னார், செப். 29**

**மன்னார் மாந்தையின் பாப்பாமோட்டை பிரதேசத்தை சேர்ந்த மீனவர்கள் நேற்று முன்தினம் மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துக்கு முன்பாகப் பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகக் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.**



அதன் இறுதியில், அந்த மீனவர்கள் மன்னார் மாட்டச் செயலரிடம் மனு ஒன்றைக் கையளித்தனர். தமது வாழ்வாதாரப் பிரச்சினைக்கு உரிய தீர்வைப் பெற்றுத்தருமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

போர்க் காலத்தில், மக்கள் இடம்பெயர்ந்தபோது மன்னார் நகரப்பகுதி கிராமமான தோட்டவெளிக் கிராமத்து மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பாப்பாமோட்டை களப்புப் பகுதியில் தற்காலிகமாக மீன்பிடியில் ஈடுபட அனுமதிக்கப்பட்டிருந்தனர். அப்போதைய மாவட்டச் செயலர் மற்றும் பிரதேச செயலாளர் அனுமதி வழங்கியிருந்தனர்.

போர் நிறைவுக்கு வந்தவுடன் தோட்டவெளி மக்களுக்கு இரண்டு இடங்களில் மீன்பிடியில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தற்காலிகமாக அனுமதி வழங்கப்பட்ட பாப்பாமோட்டையில் நிரந்தரமாக உரிமை கோரி தோட்டவெளி மீனவர்கள் செயற்பட்டு வருகின்றனர் என்று பாப்பாமோட்டை மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். பாப்பாமோட்டையை பூர்விகமாகக் கொண்ட தங்கள் பகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படுகிறது. போர் காரணமாக பாப்பாமோட்டையில் இருந்து இந்தியாவுக்குச் சென்றவர்கள் இந்தியாவிலிருந்து ஊர் திரும்புவதற்கு ஆயத்தமாக இருக்கின்றார்கள்.

அவர்கள் வரும் பட்சத்தில் தொழில் செய்ய இடம்போதாது .

எனவே இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தரவேண்டும் என்று கோரியே போராட்டத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (4,56,60)



விவசாயக் காணியில் இருந்து

# ஆபத்தான நிலையில் காட்டு யானை மீட்பு

மன்னார், செப் 29

மக்களுடைய விவசாய காணியில் காட்டு யானை ஒன்று நோய்வாய்ப்பட்ட நிலையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட பரசன்குளம் பகுதியில் உள்ள விவசாயக் காணியிலேயே இந்த யானையை நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர்.

இப்பிரதேசத்தில் தொடர்ச்சியாக காட்டுயானை ஊருக்குள் வருவதாக மக்கள் தெரிவித்தனர்.

மடு பிராந்திய வன ஜீவராசிகள் திணைக்களத்தினரும் யானைக்கு,நீர்,உணவு கொடுத்தனர் .

எனினும் யானை உட்கொள்ளவில்லை.இந்த நிலையில் அந்தப் பகுதிக்குச் சென்ற வட பிராந்திய வனஜீவராசிகள் திணைக்கள மருத்துவர் எஸ்.கிரிதரனால் யானைக்கு மருத்துவம் அளிக்கப்பட்டது.

இதன் போது யானை வெங்காய வெடியை உண்டதால் வெடி வெடித்து யானையின் வாய் உட்பகுதி பாதிக்கப்பட்டது. இதனால் உணவு உட்கொள்ள முடியாமல் நோய்வாய்ப் பட்டுள்ளதாக மருத்துவர் தெரிவித்தார்.

மேலும் யானையின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (56)

# தமிழ் அரசுக்கட்சி அலுவலகத்தில் இந்தியப் பிரமுகர்கள் கலந்துரையாடல்




வவுனியா, செப் 29

இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த முக்கிய பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்று வவுனியா தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்தியாவின் சட்டத்தரணி ராதாகிருஸ்ணன், கவிஞர் இனியபாரதி, தினமணி பத்திரிகையின் ஆசிரியர் ஆகியோருடன் தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி ஶ்ரீஸ்கந்தராஜா, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க. சிவநேசன், வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான ப. சத்தியலிங்கம், ஜி.ரி. லிங்க நாதன், து. ரவிகரன் வவுனியா வடக்கு மற்றும் தமிழ் தெற்கு பிரதேச சபைகளின் தலைவர்கள், வவுனியா கல்வியில் கல்லூரியின் பீடாதிபதி ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போது வட பகுதி நிலைமைகள் மற்றும் மக்கள் எதிர்கொள்ளும் விடயங்கள் தொடர்பாக அதிகமாக ஆராயப்பட்டதாக தெரியவருகின்றது.

அத்துடன் இந்தச் சந்திப்பு தொடர்பாக ஊடகவியலாளர்களிற்கு அறிவிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (110)



ஓமந்தை மத்திய கல்லூரி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் நோக்கில் 15 மடிக்கணினிகளை அன்பளிப்பாக அற்புத கருணை நிறுவனத்தின் உறுப்பினர் செரினா லோகநாதன் நேற்றுமுன்தினம் வழங்கி வைத்தார் . (222)

# சேவை நலன் பாராட்டு நிகழ்வு

நானாட்டான், செப் 29

நானாட்டான் மகாவித்தியாலயத்தில் ஆசிரியர்களாகக் கடைமையாற்றி இடமாற்றம் பெற்று சென்ற 27 ஆசிரியர்கள் பாடசாலை சமூகத்தால் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் பாடசாலை அதிபர் அருட்சகோதரர் விஜயதாஸ் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் நானாட்டான் கோட்டக்கல்வி அலுவலர் ஜெகநாதன், நானாட்டான் பங்கு தந்தை, நானாட்டான் பிரதேசசபை உபதவிசாளர் புவனம் மற்றும் பாடசாலை அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (213)

## வடக்கு மாகாணப் பண்பாட்டுப் பெருவிழா

முல்லைத்தீவு, செப் 29

வடக்கு மாகாண பண்பாட்டுத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணப் பண்பாட்டுப் பெருவிழா முல்லைத்தீவு கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகா வித்தியாலயத்தில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ளது.

தமிழர் பண்பாட்டை எடுத்துக்காட்டும் வகையில் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேலும் கவியரங்கம், பட்டிமன்றம் என்பன காலை நிகழ்வுகளாகவும் மாலை கலைஞர்கள் மதிப்பளிப்பும் வேறு பல கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. (72)



# வடக்கின் கல்வியியலாளர்களை கூட்டரசு ஓரங்கட்டி வருகின்றது!

## கூட்டமைப்பு எம்.பி. குற்றச்சாட்டு

மன்னார், செப். 29

வடக்கு மாகாணத்திலுள்ள கல்வியாளர்களை கூட்டரசு வேண்டுமென்றே ஒதுக்குகின்றது என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார். மன்னாரில் நடந்த நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் முன்னிலையில் அவர் இப்படிக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் 53 மில்லியன் ரூபா செலவில் அமைக்கபட்ட மூன்று மாடிகளைக் கொண்ட வகுப்பறை கட்டடம், ஆசிரியைகள் தங்கும் விடுதி, தொழிநுட்ப ஆய்வுக்கூடம் என்பன கடந்தபுதன்கிழமைதிறந்துவைக்கப்பட்டன. அதில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணம் கல்வியில் வீழ்ச்சி அடையவில்லை என்றும், முன்னேறாமல் நின்ற இடத்தில் நிற்பதாகவும், பிற மாகாணத்தவர்கள் முந்திக்கொண்டு செல்கின்றார்கள் என்றும் அமைச்சர் இராஜாங்க அமைச்சர் ராதாகிருஸ்ணன் கூறியிருந்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதம் ஏந்துவதற்கான காரணங்களில் இலங்கை அரசின் கல்விக் கொள்கைகளும் ஒன்று. கல்வியில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஒதுக்கப்பட்டு வருகிறார்கள். முன்பு பல்கலைக்கழக மானியச் சட்டம் கொண்டுவந்து தமிழர்களின் பல்கலைக்கழக அனுமதியைக் குறைத்தனர். 2017 செப்ரெம்பர் மாதம் 17,24,25 ஆம் திகதிகளில் இலங்கை நிர்வாக சேவைப் போட்டிப் பரீட்சை நடைபெற்றது. ஒருவருடமாகியும் அதன் பெறுபேறுகள் இன்னும் வெளியாகவில்லை. அதற்கான முக்கிய காரணம் விகிதாசார ரீதியில் குறைவாக உள்ள தமிழர்கள் மொத்தத் தொகையில் அரைவாசிக்கு மேல் சித்தியடைந்தமையே. இதனால் நடைபெற்ற அந்தப் பரீட்சையை இரத்துச் செய்வதற்கு அரசு முயற்சிசெய்து வருகிறது.

கடந்த வருடம் இலங்கைக் கணக்காளர் சேவைப் பரீட்சை நடைபெற்று அதிலும் விகிதாசாரத்தில் குறைவாக உள்ள தமிழர்கள் அதிக சித்தியைப் பெற்றதால் அதுவும் நிறுத்தப்பட்டது. அதற்கு அரசு கூறிய காரணம் வினாத்தாள்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டன என்பது. இது ஒரு ஆபத்தான விடயம். தமிழர்களைக் கல்வியில் பின்தள்ளுவதற்கு அரசு திட்டமிட்டுச் செயற்படுகின்றது. இப்படியான செயற்பாடுகளைத் தவிர்த்து தமிழர்களுக்கு உரித்தான விடயங்களை அவர்களுக்கு உவந்தளிக்க வேண்டும் - என்றார். (4,213)



## ஒற்றுமையாக இருக்கும் மக்களை மஸ்தான் பிரித்தாழ முற்படக்கூடாது

### சிவமோகன் எம்.பி. குற்றச்சாட்டு

வவுனியா, செப். 29

ஒற்றுமையாக இருக்கும் மக்களைப் பிரித்தாழ்வதற்குக் காதர் மஸ்தான் முயலக்கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

வவுனியாவில் அவரது பணியகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஈழவிடுதலைபோராட்டம் முடிவுபெற்ற முல்லைத்தீவுமண். அதிலும் புதுக்குடியிருப்பு நிலத்துக்குத் தனியான வரலாறுஉண்டு. புலிகள் காலத்தில் புதுக்குடியிருப்பில் சாதி, மத, வர்க்க வேறுபாடுகள் இன்றி மக்கள் வாழந்தனர். அண்மையில் அங்குசென்ற காதர் மஸ்தானால் கிறிஸ்தவ மக்களுக்கும் இந்து மக்களுக்கும் இடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் விதமான செயற்பாடு ஒன்று நடைபெற்றிருக்கிறது. நான்அதனை வன்மையாகக் கண்டிக்கின்றேன். தங்களது சுயவாக்குச் சேகரிப்புக்காக சமூகங்களைப் பிரித்து வைத்து அதிலே சில பிரிவுகளைத் தங்கள் பக்கம் சாய்த்துக்கொண்டு அரசியலில் முன்னேற நினைப்பது அரசியில் வங்குரோந்துத்தனத்தின் செயற்பாடாகவே பார்க்கின்றேன்.

அன்றயதினம் ஒரு ஆர்ப்பாட்டம் கிறிஸ்தவ மக்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அன்று இரவே இந்து மக்களால் போடப்பட்ட எல்லைக் கற்கள் உடைத்து எறியப்பட்டிருக்கிறன. குறித்த விடயத்தை மாவட்ட அபிவிருத்திக் குழுவுக்குக் கொண்டுவராமல் அவர் தனியாக அதனைத் தீர்க்க முற்பட்டு முரண்பாட்டை ஏற்படுத்தி அங்கே வாக்குச் சேகரிக்கும் நடவடிக்கையையே ஏற்படுத்தியுள்ளார். குறித்த விடயத்தைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கான கலந்துரையாடலைக் கிறிஸ்தவ, இந்து மக்களிடத்தில் நாம் ஏற்படுத்தியிருக்கிறோம். எனவே ஒற்றுமையாக இருக்கும் அந்த மக்களைப் பிரித்தாழ்வதற்கு காதர்மஸ்தான் முயலக்கூடாது.

**அரசியல் கைதிகள்**

அரசியல் கைதிகளின் விடயம் தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காத்திரமான நடவடிக்கைகளை எடுத்து வந்தாலும் அரசின் பதில்கள் திருப்திகரமானதாக இருக்கவில்லை என்பதே வெளிப்படையான உண்மை. சட்டரீதியாகவே அதனைத் தீர்க்கவேண்டும் என்று நீதி அமைச்சர் கூறியிருக்கிறார். அந்தக் கைதிகள் மீது சாட்டப்பட்டிருப்பது பொய்க்குற்றசாட்டு. அவர்களைத் துன்புறுத்தி, மிரட்டி பாதுகாப்புப் படையினரை ஈடுபடுத்திப் பெறப்பட்ட வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு அவர்கள் விடுவிக்கப் படவேண்டும். அதுவே எமது எதிர்பார்ப்பு. பேரினவாதக் கட்சிகள் தேர்தலைச் சந்திக்கும் நிலைப்பாட்டிலேயே தற்போது இருக்கிறார்கள் அதனால் இந்தக் கைதிகளின் விடுதலை பெரும் சிக்கலுக்குள்ளாகியுள்ளது.

**மைத்திரி குழப்பக்கூடாது**

பன்னாட்டு விசாரணை இலங்கைக்குத் தேவையில்லை, உள்நாட்டு விசாரணையே பொருத்தமானது என்று அரசதலைவர் கூறியுள்ளார். உண்மையில் பன்னாட்டு விசாரணையைத் தமிழர் கோரிவரும் நிலையில் அது இறுக்கமான ஒரு நிலையைஅடைந்திருக்கிறது. எனவே அந்த நிலையைக் குலைப்பதற்காக அரசதலைவர் முற்படக்கூடும். அவர்து அரசியலை நிலைநிறுத்துவதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கையாகவே அவர் உள்நாட்டு விசாரணையைக் கோருவதற்குக் காரணம் என்று நாம்நினைக்கின்றோம். அவர்கள் தமது நிலைப்பாடுகளை மாற்றமுனைந்தால் ஐ.நா. பாதுகாப்புச்சபை வரை அந்த விடயத்தைக் கொண்டு செல்லும் கடப்பாடு பன்னாடுகளுக்கு உள்ளது - என்றார். (4,110)

## வடக்கு மாகாணத்தில் முடிவெட்டல் செயற்பாடுகளுக்கு கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது



வவுனியா, செப். 28

முடி வெட்டுதல் உட்பட அழகக செயற்பாடுகளுக்கான விலையை வடக்கு மாகாண அழகக சங்கங்களின் சம்மேளனம் அதிகரித்துள்ளது.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட அழகக சங்கத்தின் தலைவர் விவேகானந்தன் அருண் தெரிவித்துள்ளதாவது.

பொருளாதார ஏற்றத்துக்கு ஏற்ப அழகக சங்கம் தமது அங்கத்தவர்களின் ஆலோசனைப்படி விலை அதிகரிப்பொன்றைச் செய்துள்ளது. வாடிக்கையாளர்களுக்குச் சிரமங்களை ஏற்படுத்தும் வகையில் இந்த அதிகரிப்பு இருக்காது என்று நாம் எதிர்பார்க்கிறோம். தற்போது ஏற்பட்டுள்ள பெர்ருள்களின் விலையேற்றத்தின் அடிப்படையில் இதனை அதிகரிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இதன்படி அனைத்து அழககங்களிலும் (சலூன்) குறித்த விலைப் பட்டியலை வாடிக்கையாளர்கள் பார்வையிட முடியும். அழககங்களின் சேவை நேரங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்று மேலும் தெரிவித்தார். (4,110)

## போரின் பின் வவுனியாவில் 12 ஆயிரம் வீடுகள் அமைப்பு

### மூவினத்துக்கும் வழங்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், செப். 29

போருக்குப் பின்னர் வவுனியா மாவட்டத்தில் 11 ஆயிரத்து 891 வீடுகள் அமைக்கப்பட்டு பொதுமக்களிடம் வழங்கப்பட்டுள்ளன என்று மாவட்டச் செயலகத்தினர் தெரிவித்தனர்.

அங்குள் 4 பிரதேச செயலாளர்கள் பிரிவுகள் உள்ளன. இவ்வாறு அமைக்கப்பட்ட வீடுகள் தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா பிரதேச செயலகத்தின் கீழ் 4 ஆயிரத்து 918 வீடுகளும், வவுனியா வடக்குப் பிரிவில் 2 ஆயிரத்து 777 வீடுகளும் , வவுனியா தெற்கு பிரிவில் ஆயிரத்து 280 வீடுகளும் வழங்கப்பட்டுள்ளன. செட்டிக்குளம் பிரதேச செயலக பிரிவின் கீழ் 2 ஆயிரத்து 916 வீடுகளுமாகவே மொத்தம் 11 ஆயிரத்து 891 வீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 8 ஆயிரத்து 919 தமிழ்க் குடும்பங்களுக்கும் ஆயிரத்து 756 முஸ்லிம் மக்களுக்கும் ஆயிரத்து 216 சிங்கள குடும்பங்களுக்கும் வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேநேரம் வவுனியா தெற்கில் வழங்கிய ஆயிரத்து 280 வீடுகளில் ஆயிரத்து 216 வீடுகள் சிங்கள குடும்பங்களுக்கும், செட்டிக்குளம் பிரதேச செயலாளர் பிரிவில் வழங்கப்பட்ட 2 ஆயிரத்து 916 வீடுகளில் ஆயிரத்து 128 வீடுகள் முஸ்லிம் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4,105)

# கிருமி நாசினிகளில் பார உலோகம் கலப்பு

## அவற்றைப் பயன்படுத்தாதீரென பிரதி அமைச்சர் அறிவுறுத்துகிறார்

யாழ்ப்பாணம், செப். 29

பயிர் செய்யும் இடத்தில் களைகளை அழிப்பதற்கு பயன்படுத்தும் கிருமிநாசினிகளில், மண் வளத்தைப் பாதிக்கும் பார உலோகங்களின் சேர்வை உள்ளது. ஆகவே அதனைப் பயன்படுத்த முடியாது. சணல் தாவரங்களை நடுதல் போன்ற இயற்கை முறைகளைப் பயன்படுத்துங்கள் என்று விவசாய பிரதி அமைச்சர். அங்கயன் தெரிவித்தார்.

பெரும் போக விவசாயச் செய்கைக்காக அரசு அறிமுகப்படுத்தியுள்ள உரமானியம் தொடர்பில் தெளிவுபடுத்தும் நிகழ்வும் வடக்கு கிழக்கு மாகாண விவசாயப் பிரதிநிதிகள் மற்றும்

அதனுடன் தொடர்புடைய அதிகாரிகளுட்னான கலந்தாய்வும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் சில பிரச்சினைகள் பற்றி விவசாயிகள் கேள்வியெழுப்பினர். அதன்போதே அங்கயன் இவ்வாறு தெரிவித்தார்.

விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் போது ஏற்படும் அழிவுகளை அடிப்படையாக கொண்டு காப்புறுதிகளை இலவசமாக வழங்க முடியும். ஐந்து ஏக்கர் வரையில் நெற் பயிர்ச் செய்கைக்கும் 2 ஏக்கர் வரையில் ஏனைய பயிர்ச்செய்கைக்கும் காப்புறுதி செய்ய முடியும். நெல், உருளைக் கிழங்கு போன்ற 6 வகையான பயிர்களுக்கு இந்தக் காப்புறுதி வழங்கப்படுகின்றது. வெள்ளம், வறட்சி, யானைத் தாக்குதல் போன்ற இடர்கள் உட்பட்ட பயிர்களுக்கு இவை வழங்கப்படுகின்றன. இது த்விர நோய்கள்,ஏனைய காரணங்களால் பாதிக்கப்படும் சந்தர்ப்பங்களுக்கும் காப்புறுதி வழங்கப்படுகிறது. வடக்கு மாகாணத்தில் இதுவரை 386 மில்லியன் ரூபா வரையில் காப்புறுதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

குளத்தின் மேல் காணப்படும் பொருக்குகளை அள்ளினால் அவற்றை இயற்கை உரமாக விவசாய நிலங்களுக்கு பயன்படுத்தலாம். ஆனால் அவற்றை அள்ளுவதில் அனுமதி பிரச்சினைகள் காணப்படுகின்றன என்று குறிப்பிட்டனர். ஒருவர் 10 கியூப் வரை அள்ள முடியும். அதற்கான அனுமதியை மாவட்ட கமநலப் பிரதி ஆணையாளர்கள் வழங்க முடியும். இந்த நடைமுறை தற்போது கொண்டு வரப்பட்டுள்ளது.

வெங்கயாம் போன்ற எமது பிரதேசத்தில் பயிரிடப்படும் முக்கிய பயிர்களுக்கு காப்புறுதித் திட்டம் இல்லை. இது தொடர்பில் பிரதேசத்தில் விளையும் கச்சான், உளுந்து, வாழை, சின்ன வெங்காயம் ஆகிய பயிர்களுக்கான காப்புறுதித் திட்டம் வழங்குவதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்பிக்கப் படவுள்ளது என்று தெரிவித்தார்.

நிகழ்வில், ஜி.சி.ஈ. சாதாரண தரத்தில் சித்தியடைந்து உயர் தரத்தில் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. (4,7)

# எரிபொருளில் கலப்படத்தை அறிய 'கருவி' அறிமுகப்படுத்த வேண்டும்

## கலப்பு என்று வடக்கில் ஏராளம் முறைப்பாடுகள் கூட்டுத்தாபன வடபிராந்திய முகாமையாளர் எச்சரிப்பு

யாழ்ப்பாணம், செப். 29

எரிபொருளில் 'ஒக்ரேன்' அளவு சரியாக உள்ளதா என்பதைக் கண்டறியக் கருவியொன்று எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் வடக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் எஸ். சண்முகநாதன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் உள்ள பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வழங்கப்படுகின்ற எரிபொருள்களில் கலப்படம் உள்ளது என்ற ஏராளமான முறைப்பாடுகள் வந்துகொண்டிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினர் பாவனையாளர்களான மக்களின் கருத்துகளைக் கேட்டறியும் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் பூநாறி மடத்தடியில் உள்ள 'செல்வா பலஸ்' விருந்தினர் விடுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதில் பலரும் பிரச்சினைகளை முன்வைத்தனர். அதன்போதே சண்முகநாதன் மேற்குறித்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கைப்பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள வடக்கு மாகாணத்தில் 77 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் உள்ளிட்ட மண்ணெண்ணெய் நிரப்பு நிலையம், டீசல் நிரப்பு நிலையம் என்பற்றையும் சேர்த்து 103 நிரப்பு நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றன. இந்த நிலையங்களுக்கு எமது பிராந்திய மேற்பார்வையாளர்கள் மற்றும் எமது நிர்வாக உத்தியோகத்தர்கள் குறைந்தது மாதம் ஒருமுறையாவது சென்று நிரப்பு நிலையங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்துகின்றார்கள். அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் உள்ள பம்பிகள், நிறுவைகள், அளவைகள் திணைக்களத்தால், சீலிடப்பட்டுள்ளன. எனினும் பொதுவாக எமக்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளாகக் கடந்த காலங்களில் கையால் அடித்து (மனுவல் பம்பிங்) எரிபொருள் விநியோகிக்கப்படுறது. எரிபொருள்கள் சரியான அளவில் விநியோகம் மேற்கொள்ளப்படுவதில்லை என்றுதான் எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கின்றன. அதன்பிற்பாடு நாங்கள் எலெக்ரோனிக் பம்பிக்கு மாற்றிய பின் இப்போது அப்படிப்பட்ட முறைப்பாடுகள் மிக அரிதாகவே கிடைக்கின்றன. இப்போது எமக்கு வரும் முக்கியமான பிரச்சினை எரிபொருளில் அதாவது பெற்றோலில், அல்லது டீசலில் மண்ணெண்ணை மணக்கிறது என்பதே. அவ்வாறான எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குச்செல்லும் எமது மேற்பார்வையாளர்கள் அந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில்உள்ள எரிபொருள்களின் மாதிரிகளை எடுத்து கொழும்பில் உள்ள எமது பரிசோதனைக் கூடத்துக்கு அனுப்பி அங்கிருந்துதான் அறிக்கையைப் பெறவேண்டியுள்ளது. ஏனெனில் இங்கு பரிசோதிப்பதற்கான எந்த வசதிகளும் எம்மிடம் இல்லை. ஒன்றை மட்டும் கூறிக்கொள்கின்றேன், இதுவரையில் நான் அனுப்பிய எந்த ஒரு மாதிரியிலும் கலப்படம் செய்யப்பட்டுள்ளது என்று உறுதிப்படுத்தி வரவில்லை.

எரிபொருளில் தண்ணீர் கலந்துள்ளதா என்பதைப் பரிசோதிப்பதற்கு வோட்ட பெயின்ட்டிங் பேஸ்ட் உள்ளது. அதே போன்று எரிபொருளில் ஒக்ரேனின் அளவு சரியாக உள்ளதா என்பதை கண்டறிவதற்குக் கருவியொன்று எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்படுமாக இருந்தால் இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்க்க முடியும். அதாவது இன்று நீரிழிவு நோயாளர்கள் வீட்டில் இருந்தவாறே குருதியை எவ்வாறு பரிசோதிக்கின்றார்களோ அதேபோன்று எரிபொருளைப் பரிசோதிப்பதற்கும் கையில் எடுத்துச் செல்லகக்கூடிய ஒரு சிறிய கருவி சகல எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் மக்கள் பாவனைக்காக வழங்கப்படுமாக இருந்தால் எரிபொருளில் கலப்படம் செய்யப்படும் முறையை மாற்றி அமைக்க முடியும்- என்றார்.

(4,21)

# 'சிறந்த நடிகன்' என்பதை மைத்திரி நிரூபித்துள்ளார்

*முன்னாள் உறுப்பினர் கூறுகிறார்*

வவுனியா, செப். 29

இந்தநாட்டின் அரசதலைவர் சிறந்த நடிகன் என்பதை அவர் மீண்டும் ஒருமுறை நிருபித்திருக்கிறார் என்று வடக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் செ.மயூரன் தெரிவித்துள்ளார்.

அனுராதபுரத்தில் உண்ணாவிரதம் இருக்கும் அரசியல் கைதிகளை அவர் நேற்றுமுன்தினம் சென்று பார்வையிட்டார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

பன்னாடுகளுக்கு ஒரு கதையையும் இலங்கைக்கு வந்து வேறொரு கதையையும் கூறுவதன் மூலமாக இந்தநாட்டின் அரசதலைவர் சிறந்த நடிகன் என்பதை மீண்டும் ஒரு முறை நிருபித்திருக்கின்றார்.

உள்நாட்டுவிசாரணை எமக்குத் தேவையில்லாத விடயம். உங்கள்மீது எமக்குநம்பிக்கை இல்லை. இன அழிப்புக்கு ஒரு தீர்வாக நாம் எதிர்பார்ப்பது பன்னாட்டு விசாரணையே. நாம் இழப்புகளைச் சந்தித்தவர்கள், அதன்வலியை உணர்ந்தவர்கள். எனவே பன்னாட்டு விசாரணையைத்தான் நாம் எதிர்பார்கின்றோம். சிறைச்சாலைகளில் இருந்து விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற உன்னத நோக்கத்தை வெளிஉலகுக்கு எவ்வாறு வெளிப்படுத்தமுடியுமோ அதன்படி அவர்கள் உண்ணாநோன்பை மேற்கொண்டுவருகின்றார்கள். இந்த அரசியல் கைதிகளைப் பொதுமன்னிப்பின் அடிப்படையிலோ அல்லது மறுவாழ்வு என்ற அடிப்படையிலோ விடுதலைசெய்யலாம். ஆனால் இவர்களை அரசு கண்டுகொள்வதாக இல்லை. இந்த அரசு மட்டுமல்ல இனிமேல் எந்த அரசு வந்தாலும் தமிழ் மக்களின் பிரச்சினை என்பது கரனல் நீர்போல தீர்வு என்பது கடினமே. தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்தால் தாங்கள் தெற்கிலே இருக்கின்ற வாக்குவங்கியை இழந்துவிடலாம் அல்லது சிங்கள மக்களின் மனங்களை புண்படுத்திவிடுவோமோ என்ற நோக்கில் எமது கோரிக்கையைப் பேரினவாதம் செவிமடுக்கமாட்டாது. எனவே மக்கள் பிரதிநிதிகளும், பொது மக்களும் ஒன்றிணைந்து போராடுவதன் மூலமாக ஒரு முடிவைப் பெற்றுக்கொள்ள - என்றார்.

(4,110)

# தலைமைத்துவச் செயலமர்வு

கொடிகாமம், செப். 29

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 15 இளையோருக்கான 'அவர்களே வழிநடத்த வேண்டும்' என்ற தலைமைத்துவச் செயலமர்வு கடந்தவாரம் இடம்பெற்றது.

அமெரிக்கத் தூதரக அனுசரணையுடன் யாழிலுள்ள அமெரிக்கா கோனர் என்ற இடத்தில் "ஒன்று கூடுவோம் இலங்கை " என்ற அமைப்பு இச் செயலமர்வை ஏற்பாடுசெய்திருந்தது. சாவகச்சேரி நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளுக்கான இளைஞர் சபையில் இருந்து 15 அங்கத்தவர்கள்- தெரிவு செய்யப்பட்டு தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்பட்டது.

இந்தச் செயலமர்வில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு 50 இளைஞர்களைத் தயார்ப்படுத்தல், முரண்பாடான இனக் குழுமங்களுக்கிடையிலான விருந்தோம்பல்கள், வன்முறைக்கான தீர்வுகள் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. செயலமர்வின் செயற்றிட்டங்கள் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் சாவகச்சேரி நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளுக்கான இளைஞர்சபையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் நக்கீரன் தெரிவித்தார்.

(4,159)

# காணியின் உரிமப் பத்திரங்களை வழங்குமாறு மக்கள் கோரிக்கை

வவுனியா, செப். 29

வவுனியா காத்தார்சின்னக்குளம் 215பி கிராம அலுவலர் பிரிவிலுள்ள 10 குடும்பங்கள் சுமார் 20 வருடங்களாகக் காணி உரிமப் பத்திரமின்றி வசித்து வருகின்றன. அவற்றை வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

உரிமம் பத்திரங்கள் இல்லாததால் பல்வேறு அடிப்படைத்தேவைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளது. தமக்கென்று வீடுகளும் இல்லை. அவற்றை வழங்கவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் கோருகின்றனர்.

இது தொடர்பில் வவுனியா தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பணியகத்துக்கு நேற்றுமுன்தினம் சென்று தமது நிலைப்பாட்டை எடுத்துக்கூறி வீடுகளையும் கோரியுள்ளனர்.

காத்தார்சின்னக்குளம், சிறிராமபுரம் வீட்டுத்திட்டத்தில் வசித்துவரும் எமக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்படவில்லை. பொதுத் தேவைக்கு ஒதுக்கப்படாத காணியில் கடந்த 20 வருடமாகக் குடியிருந்து வருகின்றோம். அந்தக் காணியைப் பிறதேவைக்குப் பயன்படுத்த தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் கேள்வி கோரல் மூலமாக அறிவித்தல் கோரியிருந்தனர். நாம் அது தொடர்பில் பேசியதையடுத்து கேள்வி கோரல் அறிவித்தல் கைவிடப்பட்டுள்ளது. எனினும் எமது காணி விடயம் குறித்து எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. நாங்கள் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை சென்று எமது காணியின் ஆவணப்பத்திரம் குறித்துக் கேட்டு வருகின்றோம். ஆளுநர் பிரதேச செயலாளர், கிராம அலுவலர் அனைவருக்கும் கடிதங்கள் அனுப்பியிருந்தோம். எவரும் பதில் அனுப்பவில்லை, நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

கொழும்பு தலைமையகத்திலிருந்து எமக்குப் பதில் வரவில்லை என்று 20 வருடங்களாகத் தெரிவித்து வருகின்றனர்.

மலசலகூடம் அமைக்கவேண்டாம் என்று தெரிவித்துள்ளனர். மூன்று குடும்பங்களுக்கு இன்று வரையில் மலசலகூடம் அமைக்கப்படவில்லை. மறைப்புகளை ஏற்படுத்திப் பயன்படுத்தி வருகின்றோம். கிராம அலுவலரிடமிருந்து எமக்கு எந்தவித வாழ்வாதார உதவிகளையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்று அவர்கள் கோரியுள்ளனர்.

இதுகுறித்து தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் தெரிவித்ததாவது.

அமைச்சரவை அனுமதியுடன் 10பேர்ச் காணியைப் பெற்றுக்கொள்ள முடியும். இவர்கள் குடியிருக்கும் பகுதி தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குப் பாரப்படுத்தப்பட்ட காணி. பிரதேச சபையின் அனுமதியுடன் 20 பேர்ச் காணியைப் பெற்றுக்கொடுக்க நாங்கள் நடவடிக்கை மேற்கொண்டுவருகின்றோம். அரசின் சுற்றறிக்கைக்கு மாறாக நாங்கள் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது. பொதுக்காணியில் அத்துமீறிக் குடியேறியவர்கள் என்றும் அவர்களைச் சொல்லாம். இவர்களுக்காக வேலையைச் செய்வதற்கு எங்கள் மட்டத்தில் எதனையும் செய்துகொள்ள முடியாது. தலைமைக்காரியாலயத்திலுள்ள சொத்து முகாமையாளர்கள் கட்டுப்பாட்டிலுள்ளது. என்று தெரிவித்தார்.

இது குறித்து வடக்கு மறுவாழ்வு மீள் குடியேற்றப் பிரதி அமைச்சர் கே. காதர் மஸ்தானினிடம் மக்கள் முறையிட்டனர். அதுபற்றிக்கலந்துரையாடுவதாகப்பிரதி அமைச்சர் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

(4,110)

# நகர சபைக்குரிய மைதானத்தை விரிவாக்கும் சீரமைப்பு ஆரம்பம்

சாவகச்சேரி, செப். 27

சாவகச்சேரி நகரசபையின் பொது விளையாட்டு மைதானத்தைச் சீரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி அபிவிருத்திச் சங்கத்தின் நிதி அனுசரணையுடன் முதற்கட்டப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மைதானத்தை அழகுபடுத்துவதற்கான பூமரக் கன்றுகள் நடும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று நகரசபையின் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.

பொது விளையாட்டு மைதானத்தை நவீன விளையாட்டு மைதானமாக்குவதற்குரிய வரைபடங்கள் தயாரிக்கும் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. முதற்கட்டமாக மைதானத்துக்குக் கிரவல் மணல் போடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தை பன்னாட்டுத்தர விளையாட்டு மைதானமாக அமைப்பதற்குச் சாவகச்சேரி நகரசபையுடன் தென்மராட்சிப் பிரதேச செயலகமும், தென்மராட்சி அபிவிருத்திச் சங்கத்தினரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 500 மில்லியன் ரூபா வழங்கப்படுவதால் மைதான அபிவிருத்தி முக்கிய கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

சாவகச்சேரியில் அலுவலகங்களைக் கொண்டுள்ள 60 கிராம அலுவலர் பிரிவுகளைக் கொண்ட தென்மராட்சி பிரதேச செயலகத்தினரால் வருடாந்தம் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் உள்ளக மற்றும் தடகள விளையாட்டுப் போட்டிகளும் 58 பாடசாலைகளைக் கொண்ட தென்மராட்சி கல்வி வலயத்தினரால் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் வலய நிலை விளையாட்டுப் போட்டிகளும் நகரப் பகுதியில் தரமான விளையாட்டு மைதானம் இன்மையால் தூர இடங்களில் உள்ள பாடசாலை மைதானங்களிலேயே போட்டிகளை நடத்தி வருகின்றன.

(4,9)

# ஊடகங்கள் சரியான செய்தியை வழங்குவதிலும் பார்க்க பரபரப்புச் செய்திகளை வழங்குவதிலேயே கவனம்

*அமைச்சர் மங்களசமரவீர கூறுகிறார்*

நாட்டின் அரசையும் ஏனைய தனியார் துறையினரையும் நேர்மையாக செயற்பட வைக்கும் ஆற்றல் ஊடகங்களிடம் உள்ளது. ஊடகத்துறை என்பது மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வலுமிக்கசக்தியாகும். ஜனநாயகத்தை நிலை நாட்டுவதிலும் அதற்கு பங்குண்டு என்று நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.
இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் கொழும்புபிரகடனத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
2016 ஆம் ஆண்டில் அரசினால் கொண்டு வரப்பட்ட தகவலறியும்உரிமைச்சட்டத்தின் மூலம் அரச தலையீடு இன்றி ஊடகவியலாளர்களால் செய்றபட முடியும் எனும்விடயம் உறுதி செய்யப்பட்டது. அதேபோல் கடந்த காலங்களில் வீழ்ச்சி கண்டிருந்த ஊடக சுதந்திரம் 2015 இற்கு பின்னர் மேம்பட்டுள்ளது.
ஆனாலும் ஊடகங்கள் சரியான செய்தியினை வழங்குவதிலும் பார்க்க பரபரப்பு செய்திகளை வழங்குவதிலேயே கவனம் செலுத்தி வருகின்றன.
சிங்கப்பூர் உடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்கைசாத்திடப்பட்ட போது அவ்விடயம் தொடர்பில் வெளிவந்த தவறான பரப்புரைகளை இதற்குஉதாரணமாக குறிப்பிடலாம். சரியான தகவல்களை மக்களுக்கு வழங்குவதன் மூலம் ஊடகசுதந்திரம் மேலும் வலுவடையும். சுயதணிக்கை படுத்தலுடனான தகவல்களை அடிப்படையாகக்கொண்ட செய்திகளே மக்களுக்கு தேவையாகும். அதனையே நாங்களும் எதிர்பார்க்கின்றோம் - என்றார். (31)

# கொல்லப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் எவ்வித விசாரணைகளும் இடம்பெறவில்லை

*சுமந்திரன் எம்.பி. ஆதங்கம்*

கொழும்பு, செப் 29
ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் பேசுகையில் லசந்த விக்ரமதுங்க, கீத்நொயார், பிரகீத் எக்னெலிகொட ஆகியோர் பற்றியே பேசப்படுகின்றது. அவர்களுடன் தொடர்புடையசம்பவங்கள் தொடர்பிலேயே விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் கடந்த 20வருட காலப்பகுதியில் அதிக ஊடகவியலாளர்கள் யாழ்ப்பாணமாவட்டத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர்.உதயன் நிறுவனம் மீது 33 தடவைகள் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.அதேபோல் 14 தமிழ் ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவை தொடர்பில் எதுவிதவிசாரணைகளும் இடம்பெறாமை வெட்கப்பட வேண்டிய விடயமாக உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். ஊடக சுத்ந்திரமும் சமூகப் பொறுப்பும் பற்றிய கொழும்பு பிரகடனத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கை பத்திரிகை நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
ஊடக சுதந்திரத்தின் மைல்கல்லாக கொழும்பு பிரகடனம் அமைந்துள்ளது. கடந்த சில வருடங்களாகநாட்டில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் குறைவடைந்துள்ளன.
கடந்த காலத்தில்இடம்பெற்ற லசந்த விக்ரமதுங்க, கீத் நொயார், பிரகீத் எக்னெலிகொட ஆகியோர் மீதான தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. எனினும் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்டதமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்பில் எவ்வித விசாரணைகளும் இடம்பெறவில்லை.
கொழும்பு பிரகடனம் ஊடக சுதந்திரம், சமூகப் பொறுப்புணர்வு ஆகிய இரு விடயங்களை உள்ளடக்கியுள்ளது. செய்தியை வாசிக்கின்ற வாசகனுக்கென்று பொறுப்புணர்வு உண்டு. அதே வேளைஊடக சுதந்திரம் என்பது உண்மையை அறிக்கைப்படுத்துவதாகும். ஊடக் சுதந்திரத்தை நோக்கியபோராட்டங்கள் இடம்பெறும் அதேவேளை பொய்யான செய்திகள்ள வெளியிடுகின்ற ஊடகங்களும்தற்போது பெருகி வருகின்றன. இது ஊடகங்களின் பொறுப்புணர்வற்ற தன்மையினையேகாட்டுகின்றது.
ஊடக சுதந்திரத்தைப் பயன்படுத்தி உண்மையான செய்திகளை வெளிடுவதன் மூலம் சிறந்த ஊடக கலாசாரத்தை கட்டியெழுப்ப முடியும்.என்றார். (31)

# இந்திய நாட்டவர் மனநோயாளியா?

*நாமல் குமாரவும் மனநோயாளியாக அறிவிக்கப்படலாம்; பொதுபலசேனா விசனம்*

**கொழும்பு, செப் .29**
**கொலை முயற்சி விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய நாட்டவரை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதுக்கு முன்னர் இலங்கைக்கான இந்திய தூதரகம் அவரை மனநோயாளி என்று கூறியிருப்பது எம்மை வியப்படைய வைக்கின்றது இவருக்கு இந்நிலையாயின் இலங்கையில் நாலக டி சில்வா போன்றவர்களுக்கும் உயர் பதவி வழங்கப்படுவதுடன் நாமல் குமாரவையும் மனநோயாளியாக அரசு அறிவிக்கும்.எனவும் பொதுபல சேனா அமைப்பின் பேச்சாளர் டிலந்த விதான தெரிவித்தார்.**

பொதுபலசேனாவின் தலைமைக்காரியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகசந்திப்பில்கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
இங்கு தொடர்ந்தும் பொதுபல சேனா அமைப்பின் பேச்சாளர் டிலந்த விதான கருத்துத் தெரிவித்ததாவது.
அரச தலைவர் மற்றும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச வின் குடும்பத்திற்கு எதிராகமேற்கொள்ளப்பட்டுள்ள கொலை முயற்சிக்கான சதித்திட்டம் தொடர்பில் இலங்கை புலனாய்வுத்துறைக்கு இன்னுமொருவர் கூறும் வரையில் அந்த விடயம் தெரியவில்லை என்பது புலனாய்வுத் துறையினரின்ஆக்கத்திறன் நிலையை நாட்டுக்குவெளிப்படுத்தி யுள்ளது.
இது நாட்டில் புலனாய்வு துறையினர் தமது கடமைகளின் பிற்போக்குடன் செயற்படுகின்றனர் என்பதை உறுதிப் படுத்தியுள்ளது.
இலங்கையில் தீட்டப்பட்ட உயர் அரசியல் தலைவர்களைகொலை செய்வதற்கான சதித்திட்டம்போன்று வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தால்இந்நேரம் அவர்களின் எதிர்வினை எவ்வாறு இருந்திருக்கும்? இலங்கையில் உள்ள அரச தலைவர் செயலகம் அரச தலைவர் பாதுகாப்பு மற்றும் புலனாய்வு துறையினரின் மந்த போக்கான நடவடிக்கைகளை போன்றா வெளிநாடுகள் இதனை கையாண்டிருக்கும்.
இவற்றுடன் ஒப்பிட்டு பார்க்கையில் இந்த கொலை முயற்சித் தொடர்பில் எமக்கு சந்தேகம் எழுகின்றது. இதுவொரு கூட்டுச் சதியாகவுமிருக்கலாம். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சிக்கண்டு வரும் நிலையில் மக்களின் கவனத்தைதிசைத்திருப்பும்வகையில் இவ்வாறு கருத்துக்களை பரவவிட்டு பொருள்களின் விலையேற்றம் நிகழ்வதாக சிந்திக்க தோன்றுகின்றது.
இந்த கொலை முயற்சி விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள இந்திய நாட்டவரை மருத்துவ பரிசோதனைகளுக்குட்படுத்த முன்னர் இலங்கைக்கான இந்திய தூதரகம் அவரை மனநோயாளி என கூறியிருப்பது எம்மை வியப்படைய வைக்கின்றது.
இவருக்கு இந்நிலையாயின் இலங்கையில் நாலக டி சில்வா போன்றவர்களுக்கும் உயர் பதவிவழங்கப்படுவதுடன் நாமல் குமாரவையும் மனநோயாளியாக அரசு அறிவிக்கும். இதில் யாரை குறைகூறுவது என தெரியவில்லை. இந்தியாவிலிருந்து வந்தவர் இந்தியஉளவாளியாகவிருக்கலாம் என்ற சந்தேகமும் உள்ளது. இது முத்தரப்பின் கூட்டு சதியோ என்ற கேள்வியும் மேலோங்கி நிற்கின்றது. இவ்வாறுநாட்டுக்கு விடுக்கப்படும் சவால் மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் தொடர்பில் மூன்றுவருடங்களுக்கு முன்னரே எதிர்வு கூறிய எமது தலைவர் ஞானசார தேரரைசிறையிலடைத்ததும் சதித்திட்டமேயாகும்.

**பொலிஸ் தரப்பு**

புலனாய்வுத்துறை சார்ந்த விடயப் பரப்புக்களை பொலிஸ் ஊடக பேச்சாளர் ஊடகங்களுக்கு தெரிவிக்க பின்நிற்கின்றார். நாட்டின் பாதுகாப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்க வேண்டிய அவர் அமைச்சரின்பின் மறைந்து கொண்டுள்ளார். அமைச்சர்களே கருத்துதெரிவிக்கின்றனர். .
இலங்கையின் பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட உயர் அதிகாரிகளை சீனாவுக்கு சீன மொழி கற்பிப்பதற்காக அனுப்பியுள்ளனர். இது இலங்கையை சீனகாலணித்துவமாக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளில் ஒன்றாகும். இந்தபொலிஸாரின் செயற்பாடு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்க வேண்டியபொறுப்பிலுள்ள பொலிஸ் ஊடக பேச்சாளர் இதனை மறைப்பதற்கான காரணம் என்ன? எனவும் அவர் ஊடக சந்திப்பில் கேள்வி எழுப்பினார். (71)

*லசந்த விக்கிரமதுங்க படுகொலை விவகாரம்:*

# கோத்தா, பொன்சேகாவின் வாக்குமூலங்கள் பதிவு

*விசாரணைகள் தொடர்வதாக நீதிமன்றுக்கு அறிவிப்பு*

கொழும்பு, செப் 29
சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரம துங்கவின் படு கொலை விவகாரம் தொடர்பில், முன்னாள் பாதுகாப்புசெயலர் கோத்தாபய ராஜபக்ச மற்றும் அமைச்சர் சரத் பொன்சேகா ஆகியோரின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டு,அதிலுள்ள விடயங்கள் தொடர்பில்மேலதிக விசாரணைகள் நடத்தபப்டுவதாக குற்றப் புல னாய்வுப் பிரிவு நேற்றுமுன்தினம் கல்கிசை பிரதானநீதிவான் மொஹம்மட் மிஹாலுக்கு அறிவித்தது.
லசந்த விக்ரமதுங்க படு கொலை தொடர்பிலான வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்த போது, குற்றப் புலனாய்வுப் பிரிவு சார்பில் மன்றில் முன்னிலையாகி இருந்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொலிஸ் பரிசோதகர் சுதத் குமார இதனை நீதிவானுக்கு அறிவித்தார்.
இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது. இந்த விவகாரத்தில் கைது செய்யப்பட்டு தற்போது பிணையில் உள்ள முதலாவது சந்தேக நபரான இராணுவ புலனாய்வுப் பிரிவின் சார்ஜன்ட் மேஜர் உதலாகம 2 ஆம் சந்தேக நபரான கல்கிசை பொலிஸ் நிலையமுன்னாள் குற்றவியல் பொறுப்பதிகாரி பொலிஸ்பரிசோதகர் திஸ்ஸ சுஹந்தபால, மூன்றாம் சந்தேக நபரான முன்னாள் மேல் மாகாண தெற்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரசன்ன நாணயக்கார ஆகியோர்மன்றில்முன்னிலையாகினர்.
இந்த நிலையில் விசாரணைகள் தொடர்பில் மேலதிக விசாரணை அறிக்கையினை சி.ஐ.டி. சார்பில் மன்னாரில் முன்னிலையான பொலிஸ் பரிசோதகர் சுதத் குமார சமர்ப்பித்தார். அறிக்கை சமர்ப்பித்து சி.ஐ.டி. பொலிஸ் பரிசோதகர் மேலும் கூறியதாவது.
லசந்த கொலை விவகாரம் தொடர்பில் தற்போது ஆஸ்திரேலியாவில் வசிக்கும் லசந்த விக்ரமதுங்கவின் முதலாவது மனைவி, மகள் மற்றும் சகோதரர்களின் சாட்சிகள் பெறப்பட்டுள்ளன.
இதற்கு மேலதிகமாக முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபாய ராஜபக்ச மற்றும் முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா ஆகியோரிடம் சாட்சியம் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் இந்த கொலை விவகாரத்தில் 2 ஆவது சந்தேக நபரான திஸ்ஸ சுகதபாலவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அதுகுறித்து களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ள நிலையில் அந்த விசாரணைகளின் அறிக்கையை நாம்கோரியுள்ளோம். அது தொடர்பிலும் நாம் அவதானம் செலுத்தியுள்ளோம். அதனைவிட லசந்த விக்ரமதுங்க விவகாரத்தில், அவரது காணாமல் போன குறிப்புப் புத்தகத்தில் எழுதப்பட்டிருந்த உந்துருளி சைக்கிள்இலக்கம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து நால்வரின் வாக்கு மூலங்களை பதிவு செய்துள்ளோம். என்றார். இந்த நிலையில் மேலதிக விசாரணைகளுக்கு நீண்ட நாள்கள் கோரப்பட்ட நிலையில் அடுத்த வருடன் ஜனவரி 17 ஆம் திகதி மேலதிக விசாரணைகளின் அறிக்கையை மன்றுக்கு சமர்ப்பிக்க உத்தரவிட்ட நீதிவான் அதுவரை வழக்கை ஒத்தி வைத்தார். (71)

## "படுகொலைத் திட்டம்" பரந்துபட்ட அளவில் விசாரணை அவசியம்

*அமைச்சர் மங்கள சமரவீர*

கொழும்பு, செப் 29

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவையும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவையும் அவரது குடும்ப உறுப்பினரையும் படுகொலை செய்யும் திட்டம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இந்திய நாட்டவர் பற்றி பல ஊடகங்கள் தவறான தகவல்களைவெளியிடுவதாக நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவையும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவையும் ஏனைய பலரையும் படுகொலை செய்யும் முயற்சித் திட்டம் பற்றிய சான்று பகிரும் ஆதாரம் இல்லை என சுட்டிக்காட்டி அமைச்சர் மங்கள சமரவீர வெளியிட்டுள்ள ஊடகஅறிக்கையிலேயே இவற்றைக் குறிப்பிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

படுகொலைத் திட்டத்துடன் தொடர்புபட்டவர் எனக் குற்றம் சாட்டப்பட்ட வரை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்து விசாரிக்கக் குற்றப்புலனாய்வுத் துறையினர் நீதிமன்றத்திடம் இருந்து அனுமதி பெற்றனர். சில ஊடகங்கள் இது தொடர்பாக வெளியிட்டசெய்தி அறிக்கை உண்மைக்குப் புறம்பானது. சர்ச்சைக்குரிய படுகொலைத் திட்டம் தொடர்பான உண்மையான ஆதாரத்தை குற்றப் புலனாய்வுத் துறையினர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கவில்லை.

நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இது விளங்குவதால் பரந்துபட்ட அளவில் விசாரணையை குற்றப்புலனாய்வுத் துறையினர் மேற்கொள்ள வேண்டும்.

உறுதிப்படுத்தப்படாத தகவல்களை ஊடகங்கள் வெளியிடுவது சற்றேனும் பொறுத்துக் கொள்ள முடியாத நடவடிக்கையாகும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (61)

# மீண்டும் ஊடகவியலாளர் சந்திப்பு நடத்திய நாமல்

## கிழக்கில் கலவரத்தை உருவாக்கவும் திட்டமிடப்பட்டதாகத் தகவல்

**கொழும்பு, செப். 29**

**பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வா அறிந்திருந்த நிலையில், பல்வேறு சதிநடவடிக்கைகளை நாட்டுக்குள் அரங்கேற்ற பிரான்ஸில் உள்ள ஒருவாரால் தனக்குப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பணம் வழங்கப்பட்டது என்று மைத்திரி,கோத்தா கொலை சதி முயற்சி தொடர்பில் தகவலை வெளிப்படுத்திய ஊழல் எதிர்ப்புப் படையணியின் பணிப்பாளர் நாமல் குமார மற்றொரு ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தி அறிவித்துள்ளார்.**



கிழக்கில் தமிழ், முஸ்லிம் பிரச்சினையை ஏற்படுத்தவும் அதற்காக அங்கு கொரில்லாபடையணியை உருவாக்கவும் இந்த நிதி தனக்கு பிரான்ஸில் உள்ள துஷார பீரிஸ் என்பரால்அனுப்பட்டதாகவும் அதனைத் தான் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவின் ஆலோசனைக்கு அமைய பெற்றதாகவும் சில பற்றுச்சீட்டுக்களை முன்னிறுத்தி நாமல் குமார கூறினார்.

சிறப்பான முறையில் இந்த நிதியானது பல்வேறு பயங்கரவாத நடவடிக்கைகளை அரங்கேற்ற தன்னை பயன்படுத்திக் கொள்வதற்காக அனுப்பட்டது என்றும் முக்கியமாக கிழக்கில் முஸ்லிம் அமைச்சர்களைக் கொலைச் செய்தல், பள்ளிவாசல்கள் மீது தாக்குதல் நடத்துதல் போன்றன அதில் அடங்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் இந்தப் பண பற்றுச்சீட்டுக்கள் தனக்கு அனுப்பட்ட மறு கணம் அவை ரி.ஐ.டி.க்கு அனுப்பட்டு அங்கு ஒரு கோவையில் வைக்கப்பட்டிருந்ததாகவும் அந்தக் கோவையைவெளிப்படுத்தினால் இத்தகைய சதிகளை மேலும் உறுதி செய்ய முடியும் எனவும் நாமல் குமார தெரிவித்தார்.

நாமல் குமார ஏற்கனவே வெளிப்படுத்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலகசில்வாவுடனான தொலைபேசி கலந்துரையாடல் குரல் பதிவுகள் தொடர்பில் உறுதி செய்ய அவரது குரல் மாதிரி அரச இரசாயனப் பகுப்பாய்வாளரால்பெற்றுக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர் அவரிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவு 7 மணி நேரவிசாரணைகளை மூன்றாவது தடவையாகவும் முன்னெடுத்தது.

இதன்போது நாமல் குமார இறுவட்டொன்றினை சி.ஐ.டி.க்கு கையளித்தார். அந்த இறுவட்டில் உள்ள விடயங்கள் தொடர்பிலேயே அவர் நேற்றுமுன்தினம் மீண்டும் ஊடகவியலாளர் சந்திப்பு நடத்தி விளக்கினார்.

இதன்போதே பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவின் ஆலோசனைக்கு அமையபணம் பெற்றதாக அவர் கூறினார். இந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதும் நாமல் குமார பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாவுடன் முன்னெடுத்ததாகச் சில அலைபேசி கலந்துரையாடல்களின் குரல் பதிவு களை வெளிப்படுத்தியிருந்தார். (71)

## ஹெரோய்னுடன் இரு பெண்கள் உட்பட 5 பேர் கைது



கொழும்பு, செப் 29

கொழும்பின் பல்வேறுபட்ட பிரதேசங்களில் கடந்த 24 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது ஹெரோய்ன் வைத்திருந்தமை தொடர்பில் இரு பெண்கள் உள்ளடங்கலாக 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரளை, கல்கிசை, மட்டக்குளிய, மொறட்டுவ மற்றும் மருதானை ஆகிய பிரதேசங்களிலேயே மேற்படி சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவிக்கின்றது.

சந்தேகநபர்களிடமிருந்து சுமார் 99 கிராம் 260 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

*கைதான இந்திய நாட்டவர் தொடர்பில் புதிய தகவல்கள்*

# அலைபேசிகள் உள்ளிட்ட ஆவணங்களை இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்த நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, செப். 29

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரை கொலை செய்ய சதி செய்யும் விதமாக பிரதிப்பொலிஸ் மா அதிபர் நாலக சில்வா தொலைபேசியில் கலந்துரையாடியதாக கூறப்படும் விடயம் தொடர்பில், சி.ஐ.டி. முன்னெடுக்கும் விசாரணைகளில்சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ள இந்தியரிடமிருந்து மீட்கப்பட்ட தொலைபேசிகள் உள்ளிட்ட ஆவணங்களை அரச இரசாயனபகுப்பாய்வாளருக்கு அனுப்பி அறிக்கை பெற்றுக்கொள்ள சி.ஐ.டி.க்கு நேற்றுமுன்தினம் கோட்டை நீதிமன்றம் அனுமதியளித்தது.

சந்தேகநபரிடமிருந்து மீட்கப்பட்ட இரு அலைபேசிகள், தகவல் சேமிப்புக் கருவி (பென் ட்ரைவ்) ஒன்று மற்றும் சில ஆவணங்களே இவ்வாறு அரச இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி அறிக்கை பெறுவதற்கு அனுமதி வழங்குமாறு சி.ஐ.டி.யினர் நீதிமன்றில்கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்தே கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன இதற்கு அனுமதியளித்தார்.

கைதான மேர்ஸலி தோமஸ் எனும் இந்தியரை நேற்றுமுன்தினம் சி.ஐ.டி. அதிகாரிகள் நீதிவானின் மேற்பார்வைக்காக கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தினர். இதன்போதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

சி.ஐ.டியின் உதவி பொலிஸ் அத்தியட்சர் இந்திக லொக்கு ஹெட்டி, பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முனசிங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர்கே.எம்.எம்.குமாரசிங்க ஆகியோர் இடையீட்டு மனுவூடாக கோட்டை நீதிவானுக்கு அறிக்கை சமர்ப்பித்து இந்த அனுமதியைப் பெற்றுக்கொண்டனர்.

இதன்போது கோட்டை நீதிவான் லங்கா ஜயரத்ன, இந்த விவகாரத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகள் தொடர்பில் சி.ஐ.டி.யிடம் கேள்விஎழுப்பினார். இதற்கு சி.ஐ.டி. உதவி பொலிஸ் அத்தியட்சர் இந்திகவும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முனசிங்கவும் மேலதிக விசாரணை அறிக்கையொன்றினையும் மன்றில் சமர்ப்பித்து பதிலளித்தனர்.

அவர்களது பதிலின் பிரகாரம்,

இந்த விவகாரத்தில் நாம் கைது செய்துள்ள இந்தியர், முறைப்பாட்டாளரான நாமல் குமாரவின் வீட்டில் இருந்த போது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டவர். 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடைச் சட்டத்தின் 5 ஆவது அத்தியாயத்துக்கு அமைவாக பயங்கரவாத சதி ஒன்று தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்தாமை தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் விசாரணை நடக்கின்றது.

இதற்காக அவரை மூன்று மாதா கால தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் இது குறித்த கடிதம் கிடைக்காத போதும், அவர்கள் அதற்கான அனுமதி கடித இலக்கத்தை எமக்கு வழங்கியுள்ளனர். அதன்படி அவரிடம் விசாரணை நடக்கின்றது. என்றார்.

இதன்போது, சந்தேக நபரான இந்தியர், நாமல் குமாரவை சந்தித்தமைக்கான காரண்ம் என்ன என நீதிவான் சி.ஐ.டி.யிடம் வினவினார்.

அதற்கு பதிலளித்த உதவி பொலிஸ் அத்தியட்சர் இந்திக லொக்குஹெட்டி,

அது குறித்து நாம் சந்தேக நபரான இந்தியரிடம் விசாரித்தோம். பத்திரிகைகளில் நாமல் குமார கூறிய விடயங்கள் பிரசுரமானதையடுத்து அவருக்கு உயிர்அச்சுறுத்தல் இருப்பதாக தான் உணர்ந்ததாகவும், அதனால் அது குறித்து எச்சரிக்க நாமல் குமாரவின் வரகாபொல வீட்டுக்கு சென்றதாகவும் அவர் கூறுகின்றார் என தெரிவித்தார்.

இந் நிலையில் மீண்டும் சி.ஐ.டி.யை நோக்கி கேள்வி எழுப்பிய நீதிவான் லங்கா ஜயரத்ன, சந்தேக நபர் இந்தியாவில் இருந்து இலங்கைக்கு எவ்வாறுவந்துள்ளார்?, அதற்கான காரணம் தொடர்பில் வெளிப்படுத்தல்கள் உள்ளதா என வினவினார்.

அதற்கு உதவி பொலிஸ் அத்தியட்சர் இந்திக லொக்குஹெட்டியும், முதன்மைப் பொலிஸ் பரிசோதகர் ரஞ்ஜித் முனசிங்கவும் இணைந்து பதிலளித்தனர்.

'ஆம், இந்த இந்தியர் சுற்றுலா நுழைவிசைவுச்சீட்டில் இலங்கைக்கு வந்துள்ளார். அவரது நுழைவிசைவுச்சீட்டுக் காலம் ஒரு மாதம் மட்டுமே. அது நிறைவடைந்தும் அவர் இங்குதங்கியிருந்துள்ளார்.

இலங்கைக்கு வருவதற்கான காரணத்தை நாம் வினவிய போது, இந்தியாவின் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏர்பட்டதால்தான், இவ்வாறு இலங்கைக்கு வந்ததாக கூறுகின்றார். அவர் இங்கு வந்து அகதி அந்தஸ்து கோரி விண்ணப்பித்துள்ளார். அவ்விண்ணப்பம்நிராகரிக்கப்பட்டுள்ளது. என்றனர்.

இதன்போது சி.ஐ.டி.க்கு ஆலோசனை வழங்கிய நீதிவான், நுழைவிசைவுச்சீட்டு இல்லாமல் தங்கியிருந்தமை தொடர்பில் விசாரணைகளின் பின்னர் தனியாக வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கூறினார். அத்துடன் சந்தேக நபரான இந்தியர் குறித்த மேலதிக விபரங்களையும் நீதிவான் கேட்டறிந்தார்.

சி.ஐ.டி. நீதிமன்றுக்கு தெரிவித்த விடயங்களுக்கு அமைவாக,

சந்தேக நபரான கைது செய்யப்பட்டுள்ள இந்தியர் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கடந்த இரண்டரை மாதங்களாகவேதங்கியிருந்துள்ளார். நாட்டின் பல பகுதிகளில் தங்கியிருந்துள்ள அவர் பேருந்து நிலையங்களில் காலத்தை கழித்ததாக கூறுகின்றார். தேவாலயங்கள்உள்ளிட்டவற்றில் நிதி சேகரித்து காலத்தை கழித்ததாகவும் கூறுகின்றார்.

எனினும் நாம் முன்னெடுக்கும் விசாரணைகளில், சந்தேக நபர் தனியார் வகுப்புக்களை நடத்தி பணம் சேர்த்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

ஆங்கிலமொழியில் கணக்கியல் பாடத்தை அவர் கற்றுக்கொடுத்துள்ளார். அது தொடர்பில் ஒரு பிள்ளையிடம் 4 ஆயிரம் ரூபா பணம் அறவிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் கல்வி கற்ற மாணவர்கள், பெற்றோர்களின் வாக்கு மூலமும் பெறப்பட்டது

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மாற்று அணுகுமுறை கூட்டமைப்பிடம் உண்டா?

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் இலங்கையின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்வினை தாமதமாக வெளிப்பட்டிருக்கிறது. இலங்கைவிவகாரத்தில்பன்னாட்டுச் சமூகத்தின் தலையீடு தேவையில்லை என்று மைத்திரி கூறியிருந்ததை ஏற்கமுடியாது என்றும் பன்னாட்டுச் சமூகத்துக்கு வழங்கியவாக்குறுதியை மீறும் செயல் இது என்றும் கொழும்பு அப்படி ஒருபோதும் பின்வாங்கமுடியாது என்றும் கூட்டமைப்பின் சார்பில் கருத்துரைத்திருக்கிறார் அதன் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

''ஒரு நாட்டின் இறையாண்மையும் சுயாதீனத்தன்மையும் முக்கியமானவை. எனவே அவற்றைப் பாதுகாத்தவாறு எம்மால் முன்னெடுக்கப்படும் மனிதநேயச் செயற்பாடுகள், மக்களாட்சியைப் பலப்படுத்தும் செயற்பாடுகள் உள்ளிட்ட பரந்த பணிகளைச் செயற்படுத்த உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பைக் கேட்டுக்கொள்கிறேன். எமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு எம்மால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் முயற்சிகளும் அர்ப்பணிப்புக்களும் மிக முக்கியமானவையாகும். எந்தவொரு வெளிநாட்டுத்தலையீட்டையும், அச்சுறுத்தல்களையும் ஒரு சுயாதீன நாடென்ற வகையில் ஏற்க நாம் தயாராக இல்லை. அனைத்து வகையிலும் பலமான நாடு என்ற வகையில் நான் உங்களிடம் கேட்டு நிற்பது, எமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கும், ஒரு சுயாதீன நாடு என்ற வகையில் எமது உரிமைகளை உறுதிப்படுத்தியவாறு முன்னோக்கிச் செல்வதற்கும் எமக்கு இடமளியுங்கள் என்பதைத்தான்.

இங்குள்ள நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, இலங்கையர் என்ற வகையில் தீர்த்துக் கொள்ளவேண்டிய பிரச்சினைகளை நாமே தீர்த்துக் கொள்வோம் என்பதுடன், அதற்கு உங்களது ஒத்துழைப்பினைவழங்குமாறு கேட்டுக்கொள்வதுடன், எனது தாய்நாட்டில் வாழும் அனைத்து மக்களினதும் சந்தேகம், பீதி, அவநம்பிக்கை ஆகியவற்றை இல்லாதொழித்து அனைத்து இனங்கள் மத்தியிலும் பலமான நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசுஎன்றவகையில்நாம்முன்னெடுக்கும்முயற்சிகளுக்குஉங்களது ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.''

இவ்வாறு தனது உரையில் அரச அதிபர் தெரிவித்தார் என்று அவரது ஊடகப்பிரிவின்அறிக்கைகூறுகின்றது. போரைவெல்வதற்குப் பன்னாடுகளின் உதவி வேண்டும், உலகின் மிகப்பெரும் பயங்கரவாத அமைப்பைத் தோற்கடிப்பதற்குப் பன்னாட்டு உதவிகள் வேண்டும், இலங்கையின் மீது படிந்த கறையைத் துடைப்பதற்குப் பன்னாட்டு உதவி வேண்டும், இவை அனைத்தும் முடிந்ததும் பன்னாடுகளின் தலையீடு தேவையில்லை என்பதுதான் மைத்திரியின் நிலைப்பாடு.

குறிப்பாகப் போர்க்குற்றச்சாட்டுக்கள், பொறுப்புக்கூறல் ஆகிய விடயங்கள்தொடர்பில்பன்னாட்டுச்சமூகத்துக்குத்தாம்வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி நிர்ப்பந்திக்க வேண்டாம்,அவற்றைநாம்செய்யப்போவதில்லை,எனவேஎங்களை எங்கள் போக்கில் விட்டுவிடுங்கள் என்கிறார் அரச தலைவர். முன்னால் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் இப்படித்தான் பன்னாட்டுச் சமூகத்தை ஏமாற்றினார் என்பதை மறந்துவிட முடியாது.

போரை நடத்துவதற்கான முழு ஒத்துழைப்பையும் உலக நாடுகளிடம் இருந்து பெறும் வரையில், போர் முடிந்ததும் தமிழர்களுக்குஅரசியல்தீர்வுவழங்கப்படும், 13பிளஸ்வழங்கப்படும் என்றெல்லாம் அவர் வாக்குறுதி வழங்கினார். பின்னர் அவற்றையெல்லாம்தூக்கிக்கிடப்பில்போட்டுவிட்டார். இப்போது அதே பாணியில் இலங்கையின் மீதிருந்த இறுக்கத்தைத்தளர்த்தும் வரைக்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பானஇரண்டுதீர்மானங்களுக்கும்இணைஅனுசரணை வழங்கிய இலங்கை, இப்போது பன்னாட்டுச் சமூகத்தைத் தனது பாதையில் இருந்து ஒதுங்கியிருக்கச் சொல்கிறது.

இது ஒன்றும் புதிய விடயமல்ல. சிங்கள பௌத்த தேசியத்தின் பாரம்பரியத் தொடர்ச்சிதான் அது. ஒருகாலத்தில்தமிழ்த்தலைவர்களை ஏமாற்றிக் கொண்டிருந்த கொழும்பு, அதன் பின்னர் பிராந்திய வல்லாதிக்கங்களையும் சேர்த்து ஏமாற்றியது. தமிழர்களின்தீவிரபோராட்டம்காரணமாக இந்தவிடயம்உலகமயப்பட்டபின்னர்இப்போதுஒட்டுமொத்தப்பன்னாட்டுச்சமூகத்தையும்சேர்த்துஏமாற்றுகின்றது. இதுஎதிர்பார்க்கப்பட்டஒன்றுதான்.

வரலாறு வழங்கிய மிகச் சிறந்த வாய்ப்பான ஐக்கிய தேசியக் கட்சி –சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இந்த நிலமை மாறினால் நன்றாக இருக்கும் என்கிற ஆசை ஒன்று தமிழர்களுக்கு இருந்தது. அது நிராசையாகியிருக்கிறது.

இந்த நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரச தலைவரின் நிலை குறித்துக் குதித்துக் கூப்பாடு போடுவதில் எந்த அர்த்தமும் இல்லை. ''நாட்டை ஒற்றுமைப்படுத்த வந்த தலைவர்'' என்று அரச தலைவருக்குத் துதி பாடுவதிலும் அர்த்தமில்லை. உண்மை இதுதான் என்று தெரிந்த பிறகு, கூட்டமைப்பு என்ன செய்யப்போகின்றது என்பதுதான்தமிழ் மக்களின் கேள்வியே தவிர, வெறும் வார்த்தைகளால் ஆன கண்டனங்களால் ஆகப்போவது ஒன்றுமேயில்லை. கூட்டமைப்பு சொல்லிக் கொண்டிருக்கும் மாற்று அணுகுமுறையை அது வெளிப்படுத்த வேண்டிய காலம் இது. மக்கள் அதற்காகக் காத்திருக்கிறார்கள்.

# நாட்டின் முக்கியமான பிரச்சினைகளை மறந்துவிட்டாரா அரச தலைவர்?


இந்துமதி

புத்தபெருமானின் போதனையை மேற்கோள்காட்டி ஐக்கிய நாடுகள் சபையில் தமது உரையைப் பதிவு செய்துள்ளார் இலங்கை அரச தலைவர்.

புத்தபிரான் அன்பு, அகிம்சை, கருணை, சகிப்புத்தன்மை ஆகியனவற்றையே தனது போதனைகளில் குறிப்பிட்டிருக்கிறார். எந்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் அவரது போதனைகள் பொதுவானவை. அதிலும் இலங்கை பௌத்தர்களை அதிகமாகக் கொண்ட நாடு என்ற வகையில் புத்தரது போதனைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அவற்றைப் பின்பற்றியிருந்தால் இத்தனை அவலங்களும் இங்கு ஏற்பட்டிருக்க முடியாது.

**எதிர்பார்த்த உரைதான் இது!**

அரச தலைவரின் உரை ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. அவரால் ஏற்கனவே கூறப்பட்ட விடயங்களே அவரது உரையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவர் பன்னாட்டுச் சமூகத்தைத் திருப்திப்படுத்துவதற்கு அதிகளவில் முயன்றமை அவரது உரையில் தெளிவாகத் தெரிகின்றது. எங்கள் பிரச்சினைகளை நாங்களே பார்த்துக் கொள்கிறோமெனக் கூறியதன் மூலமாகப் பன்னாட்டுச் சமூகத்துக்கு மீண்டும் செய்தியொன்றைக் கூறியுள்ளார். இலங்கைப் பிரச்சினையில் வெளியாட்கள் தலையிடுவதற்கு இடமளிக்க மாட்டோமென வெளிநாட்டுத் தலைவர்களின் முன்பாக அவர் கூறியமை முக்கியத்துவம் பெறுகின்றது.



படையினர் துணிவுடனும், அர்ப்பணிப்புடனும் புலிகளுக்கு எதிராகப் போரிட்டு அவர்களை அழித்ததன் காரணமாகவே நாடு பிளவுபடாதிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். படையினரின் போர் வெற்றியை எவருமே குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால், அந்த வெற்றியை எட்டுவதற்குப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் சரியானவை எனக் கூற முடியாதுள்ளது. ஏராளமான அப்பாவி மக்கள் படையினரின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர். பலர் மோசமான காயங்களுக்குள்ளாகித் தமது அங்கங்களை இழந்துள்ளனர்.

**'போர்த் தர்மங்களை' மீறிய போர் இறுதிப் போர்**

இடம்பெற்றபோது மட்டுமே சுமார் 40ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. வெள்ளைக் கொடியுடன் சரணடைந்த பலர் மிலேச்சத்தனமான வகையில் படுகொலை செய்யப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்புணர்வுகளின் பின்னர் கொல்லப்பட்டுள்ளனர். படையினரின் கொடுஞ் செயல்களுக்கு இசைப் பிரியாவும், பாலச்சந்திரனும் சார்ந்த காணொலிச் சாட்சிகளை ஊடகங்கள் வெளியிட்டிருந்தன. இதையெல்லாம் அறியாதவர் போன்று அரச் தலைவர் படையினருக்குப் புகழாரம் சூட்டியதை ஏற்க முடிய வில்லை. படையினருக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகள் நீதியாக இடம்பெற்று அவர்கள் குற்றமெதையும் இழைக்கவில்லை என்பது நிரூபிக்கப்பட்டால் மாத்திரமே அவர்களின் போர் வெற்றியைப் பாராட்ட முடியும். முன்னாள் ஐ.நா. பொதுச் செயலாளரின் கீழ் தமது நாடு அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாக அரச தலைவர் கூறியதையும் ஏற்க முடியவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நடந்ததை எவராலுமே மறக்க முடியாது. இந்த நிலையில் தாம் ஐ.நா.வை மதித்து வருவதாக அரச தலைவர் கூறியமை ஏற்கத்தக்கதல்ல.

**காரணங்களை விளக்கியிருக்கலாம்!**

கொடிய பயங்கரவாத அமைப்பான புலிகளிட மிருந்து நாட்டை மீட்டெடுத்ததாகக் கூறிய அரச தலைவர் உள்நாட்டில் நிலவுகின்ற பிரச்சினைகளுக்குத் தம்மால் தீர்வு காணாமல் போனமைக்கான காரணங்களையும் ஐ.நா. சபையில் விளக்கிக் கூறியிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஏனென்றால் போர் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த பிரச்சினைகளுக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. இதற்குத் தேவையான அக்கறையும் அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை. போர் காரணமாக இடம்பெயர்ந்த மக்களில் பலர் தமது சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையில் அகதி வாழ்க்கை வாழ்கின்றனர். அவர்களுக்குச் சொந்தமான காணிகள் படையினரால் அபகரிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

பல ஆண்டுகளாக விசாரணை எதுவுமின்றிச் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளின் நிலை மோசமான கட்டத்தை எட்டி நிற்கிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை தொடர்பாக அறிய முடியாமல் அவர்களது உறவினர்கள் கலங்கி நிற்கின்றனர். மறுவாழ்வு அளிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட முன்னாள் போராளிகள் பல வகையிலும் இன்னல்களை எதிர்கொள்கின்றனர்.

அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படாமையால் மாகாண சபைகளால் தமிழர்கள் பயன்பெற முடியவில்லை. தமிழர் பகுதிகளில் இடம்பெற்று வருகின்ற சிங்களக் குடியேற்றங்கள் அச்சத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துவிட்டன. வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறல்களை எல்லை மீறிச் சென்று கொண்டிருக்கின்றன. இவையெல்லாவற்றுக்கும் மேலாக புதிய அரசமைப்பின் உருவாக்கம் கேள்விக் குறியாக எழுந்து காணப்படுகின்றது. அரச தலைவரைக் கொல்வதற்கான முயற்சிகளும் இடம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. இவ்வளவு பிரச்சினைகளும் எம்மைச் சூழ்ந்திருக்கச் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு பெற்ற போர் வெற்றி தொடர்பாக அரச தலைவர் ஐ.நா. சபையில் எடுத்துக் கூறியதில் அர்த்தம் இருப்பதாகவே தெரியவில்லை. மேலே குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளுக்கு அவர் தீர்வைக் காண்டிருந்தால் ஐ.நாவில் உரையாற்றுவதற்கான முழுத் தகுதியும் அவருக்கு இருந்திருக்கும்.

படையினருக்குப் பொது மன்னிப்பு வழங்கும் திட்டமொன்று அரச தலைவரிடம் இருந்ததாகவும் கூறப்படுகின்றது. இதை அவரது தவறான சிந்தனையாகவே கொள்ள முடிகின்றது. அவரது சிந்தனை இனவாதிகளுடன் ஒத்துப் போகின்ற ஒன்றாகவும் காணப்படுகின்றமை அவரது நேர்மையைச் சந்தேகத்திடமாக்கியுள்ளது. தமிழ் மக்கள் அவர் மீது வைத்துள்ள நம்பிக்கையையும் இதன் மூலமாகத் தகர்த்துள்ளது.

பன்னாட்டுச் சமூகம் இலங்கையின் உண்மையான நிலவரத்தைத் தெரிந்து வைத்திருப்பதால் அரச தலைவரின் உரைக்கு அங்கு ஆதரவு கிடைத்திருக்காது என்று நம்பலாம்!

# மோசமான நினைவுகளை மீட்காமல் நல்லிணக்கத்தை பாதுகாப்பதற்கு உறுதிபூணுவோம்!

போர்க்குற்றம் சுமத்தப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் பரஸ்பர பொது மன்னிப்பை வழங்குங்கள் என்றும் இது தொடர்பில் தலைமையேற்று செயற்படுமாறு அரச தலைவரிடமும் தமிழ் அரசியல் தலைவர்களிடமும் கோரிக்கை விடுவதோடு, இது தொடர்பில் நேர்மையுடனும், தர்க்க ரீதியாகவும் தலையீடு செய்யுமாறு சகல அரசியல் கட்சிகள் மற்றும் குழுக்களிடமும் பணிவுடன் வேண்டுகிறோம் என்கிறது 'ஜாதிக ஹெல உறுமய'

ජාතික හෙළ උරුමය
Jathika Hela Urumaya
ஜாதிக்க ஹெல உறுமய

*(நேற்றைய தொடர்ச்சி)*

**1987** ஆம் ஆண்டு, 1988ஆம் ஆண்டு, 1989ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இடம்பெற்ற ஜே.வி.பி கிளர்ச்சிகளின் போது ஜே.வி.பி ஆயுதக் குழு மற்றும் ஏனைய செயற்பாட்டாளர்கள், அரச, இராணுவம், பொலிஸ், பிரா, கொல கொட்டி, கஹ பலல்லு போன்ற பெயர்களில் அரச ஒத்துழைப்புடன் செயற்பட்ட ஆயுதக் குழுக்கள் அடங்கலான சகல தரப்பினருக்கும் கிளர்ச்சியின் இறுதியில் ஆட்சியில் இருந்த மற்றும் பின்னர் ஆட்சிக்கு வ்ந்த அரசுகள் உத்தியோகப்பற்றற்ற பொது மன்னிப்பு வழங்கின.

ஜே.வி.பியும் இந்த நிலைமையை உத்தியோகபற்றற்ற விதத்தில் ஏற்றுக் கொண்டு தமது அங்கத்தவர்கள் மட்டுமன்றித் தமது தலைவர் ரோஹன விஜேவீரவின் கொலை தொடர்பில் கூட சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க ஆர்வம் காட்டவில்லை.

தென் ஆபிரிக்க கறுப்பு - வெள்ளை இன மோதலின் நிறைவில் மனித உரிமை அமைப்புகளின் எதிர்ப்புக்கு மத்தியில் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவினூடாகப் போர்க் குற்றச்சாட்டு தொடர்பில் குற்ற ஒப்புதலின் பின்னர் உத்தியோகபூர்வமாகப் பொது மன்னிப்பு அறிவிக்கப்பட்டது. இதனூடாக மோசமான நினைவுகளையும் இறந்தகாலத் தவறுகளையும் தூண்டர்து நல்லிணக்கத்துக்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆட்சியில் இருந்த வெள்ளை இன அரசு போன்றே கறுப்பு இனப் போராளிகளும் எதிர்காலத்துக்காகச் சாதகமாகச் செயற்படும் அளவுக்கு அறிவுபூர்வமாக இருந்துள்ளனர். தற்பொழுது கொலம்பிய பர்க் பயங்கரவாத அமைப்புத் தொடர்பிலும் இது போன்ற செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

**புத்தரின் வாக்கு**

'நஹீ வேரான வேரானி' எனும் புத்தரின் வாக்கின் பிரகாரம் சென்று வாழ்க்கைக்காக அறிவுபூர்வமாகச் செயற்பட வேண்டும். சட்டத்தின் ஆதிக்கம் சமூகத்தின் இருப்புக்காகவே தேவையாகிறது. சாதாரண நிலையில் செயற்படுத்தப்படும் சட்ட வரையறைகளை விசேடமான நிலைமைகளில் பயன்படுத்துகையில் அதற்கான எல்லைகள் என்ன என்பது தொடர்பில் உணர்ந்து கொள்ள வேண்டும். இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தச் சகல அர்ப்பணிப்புகளையும் செய்ய வேண்டும். எதிர்காலச் சந்ததிக்குக் கடந்த கால மோசமான நினைவுகளைத் தூண்டி மற்றவர்களைக் குரோதமாகப் பார்க்கும் இனத்தையன்றி ஒரே நாடாகச் சிந்தித்து ஒற்றுமையாக வாழும் இனமே எமக்குத் தேவையாகும். பௌத்தர்களான நாம் அன்புடன் இந்தச் செயற்பாட்டை ஆரம்பிக்க வேண்டும்.

சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமானால் மற்றவருக்கு மன்னிப்பு வழங்குவதே சிறந்த, இலகுவான மற்றும் தர்க்க ரீதியான மாற்றீடாக இருக்கும். இந்தக் கொள்கை ரீதியான நோக்கின் அடிப்படையில் கீழ் வரும் யோசனைகளை நாம் முன்வைக்கிறோம்.

01. சட்ட மா அதிபரின் தலைமையில் நிபுணத்துவக் குழு ஒன்றை நியமித்துப் போர்க் காலத்தில் இடம்பெற்ற குற்றச் செயல்கள் மற்றும் தனிப்பட்ட நோக்கங்களுக்காக மேற்கொண்ட குற்றச் செயல்கள் என்பவற்றை வேறுபடுத்தி அடையாளங் காண வேண்டும்.
02. அரச பாதுகாப்புப் பிரிவுகள் அல்லது அவர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட்ட ஆயுதக் குழு உறுப்பினர்களுக்குப் போரு டன் தொடர்புள்ள குற்றங்கள் தொடர்பிலான குற்றச்சாட்டுகளுக்குப் பொது மன்னிப்பு வழங்க வேண்டும்.
03. தற்பொழுது கைதாகியுள்ள விடுதலைப் புலி உறுப்பினர்கள், போர் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டுக் குற்றச் செயல்களுக்காகத் தண்டனை அனுபவிக்கும் விடுதலைப்புலி உறுப்பினர்கள், குற்றச் செயல்கள் தொடர்பில் வழக்குத் தொடரப்பட்டுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் மற்றும் போர்க் காலத்தில் குற்றச் செயல்கள் புரிந்த ஏனைய தமிழ் அரசியல் குழு உறுப்பினர்களுக்கும் மேற்குறிப்பிட்ட சலுகை வழங்கப்பட வேண்டும்.
04. போர் நிலைமை என்ற பெயரில் தனிப்பட்ட தேவைகளுக்காக மேற்கொண்ட குற்றங்கள் தொடர்பில் துரிதமாகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.
05. இந்த மன்னிப்பு வழங்கலின் பின்னர் மீண்டும் மீண்டும் மோசமான நினைவுகளை மீட்டாது நல்லிணக்கத்தைப் பாதுகாப்பதாகச் சகல அரசியல் கட்சிகளும் பொது உடன்பாடு ஒன்றுக்கு வரவேண்டும். அவ்வாறான உடன்பாட்டொன்று சகல தேசிய மற்றும் பன்னாட்டுத் தரப்புகளிடையே காணப்படாத நிலையில் மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளை முன்னெடுப்பதில் எந்தப் பிரயோசனமும் ஏற்படாது.

**அன்பு செலுத்தி வாழ்வோம்**

மோசமான நினைவுகளை மீட்டுவதினூடாக அன்றி அன்புடன் செயற்படுவதினூடாக மாத்திரமே எதிர்காலத்தில் நாட்டில் சட்டத்தின் ஆதிக்கத்தைப் பாதுகாக்க முடியும்.

இது தொடர்பில் தலைமையேற்று செயற்படுமாறு அரச தலைவரிடமும் தமிழ் அரசியல் தலைவர்களிடமும் கோரிக்கை விடுவதோடு இது தொடர்பில் நேர்மையுடனும் தர்க்க ரீதியாகவும் தலையீடு செய்யுமாறு சகல அரசியல் கடசிகள் மற்றும் குழுக்களிடம் பணிவுடன் வேண்டுகிறோம்.

பிரித்தானியாவிடமிருந்து" சுதந்திரம் கிடைத்தபோது நிரந்தரமானதும் அமைதியானதுமான பயணத்துக்கான சந்தர்ப்பம் எமது நாட்டுக்குக் கிடைத்திருந்தது. மீண்டும் புதிய வாய்ப்பொன்று கிடைத்திருக்கிறது. மீண்டுமொரு தடவை பேரழிவுக்கு அடித்தளமிடும் தேசிய மற்றும் பன்னாட்டுத் தலையீடுகளுக்கு இடமளிக்கக் கூடாது. புதிய ஆரம்பமொன்றுக்கு அடித்தளம் இடும் வகையில் சகலருக்கும் மன்னிப்பு வழங்கி இறந்த காலத்தில் இருந்து பாடம் கற்று எதிர்காலத்தை கட்டியெழுப்புவதற்காகச் செயற்படுவதற்குக் காலம் கனிந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

## ஆசிரியருக்கான கடிதம்

# தத்தெடுப்பது தரக்குறைவானதல்ல

'தத்தெடுப்பது தரக்குறைவானதல்ல' என 2018.9.2 சூரிய காந்தியில் சி.சந்திரகலா எழுதிய கட்டுரைக்கு உரமூட்டும் வகையில் தகவல்கள் சிலவற்றை வழங்க விரும்புகிறேன்..

தத்தெடுப்பதென்பது நீண்டகாலமாக இருந்துவரும் நடைமுறையாகும். முன்னைய காலங்களில் இதைச் சுவீகாரம் என்பர். சைவத்தில் இதற்கு சமயமுறையிலான சடங்குகள் கூட உள்ளன.

தமக்குப் பிள்ளை இல்லை என்பதற்காக மட்டுமின்றித் தமக்கு ஆண் பிள்ளை இல்லை, பெண்பிள்ளை இல்லை என்பதற்காகத் தமது உறவில் உள்ள பிள்ளைக்ளைச் சுவீகாரம் செய்வர். ஏனய மதங்களிலும் இந்த நடைமுறை உண்டு. தத்துக் கொடுத்தவர்கள், எடுத்தவர்கள், பிள்ளை, உறவினர் யாவரும் அறிந்த பரகசியமாக இருந்தது. எனது சகோதரர் ஒருவர்கூட இன்னொரு குடும்பத்தின் சுவீகார புத்திரனாக உள்ளார் என்பதை மகிழ்வுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

காலகதியில் மகவேற்புச்சட்டம். அரசால் கொண்டுவரப்பட்டது. இது தற்போது சட்டமுறையாக நடைபெற்று வருகிறதேயன்றி சமயமுறையிலான பகீரங்கமான சுவீகாரம் நடைபெறுவதாகத் தெரியவில்லை. பிள்ளையில்லாதவர்கள் மட்டுமன்றிப் பிள்ளைகள் உள்ளவர்களும் நல்ல மனத்துடன் பிள்ளைகளை மகவேற்பதுண்டு.

பிள்ளை இல்லாதவர்கள் தத்தெடுக்கும்போது தமக்குப் பொருத்தமான பிள்ளைகளைத் தெரிவுசெய்வதில் ஆர்வம் காட்டுவது இயல்பு. தவிர்க்க முடியாததும்கூட. தம்மால் வளர்க்கப்பட்டுத் த்ம்மோடு வாழ்ந்து தம்மைப் பராமரித்து மக்கடன் செய்யப்போகும் நீண்டகாலத் தொடர்புடைய உறவு சிறப்பாயமைதல் வேண்டும் என எதிர்பார்ப்பது இயல்பு. 'எனினும் சமூக நலன்கருதித் தத்தெடுப்பவர்கள் இதைப்பார்ப்பதில்லை.

மகவேற்க விரும்புபவர்களுக்குச் சிறுவர் இல்லஅதிகாரிகள், சமூக சேவை உத்தியோகத்தர்கள், மருத்துவ அதிகாரிகள், பல நிறுனங்கள் வழிகாட்டி உதவி செய்து வருகின்றன. மகவேற்பானது நீதிமன்ற அனுமதியுடன் சட்டப்படி நிறைவேற்றப்படுவதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளன . புதிவாளர் நாயகம் திணைக்களம் மகவேற்பைப் பதிவு செய்து சான்றிதழ் வழங்குவதுடன் புதிய பெற்றோரின் விவரங்களை உள்ளடக்கியதாகப் பிள்ளைக்குத் தத்தெடுக்கும் பெற்றார் புதிதாக இடும்பெயரில் பிள்ளைக்குப் பிறப்புச் சான்று வழங்குவதுடன் பிள்ளையின் பெயரில் ஏற்கனவே பிறப்புப் பதிவிருந்தால் அதை மூடிவிடவும் நடவடிக்கை எடுக்கும். மகவேற்பை பிள்ளை இல்லாதர்கள் மட்டும்தான் செய்யமுடியும் என்றில்லை ஆணோ, பெண்ணோ, தனிநபர் ஒருவர்கூட பிள்ளைகளைத் தத்தெடுக்கலாம் அதற்குச் சில கட்டுப்பாடுகள் உள்ளன.

தமிழ் மக்கள் தத்தெடுப்பதில் மட்டுமல்ல பிள்ளையின் பிறப்பைப் பதிவதிலும்கூடக் கௌரவம் பார்ப்பதால் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். தந்தையின் பெயரை வழங்க முடியாத நிலையில் பிள்ளையின் பிறப்பைப் பதிவதில் பின்நிற்கின்றனர். ஆனால், சகோதர சகோதர இனத்தவர் தந்தையின் பெயரின்றிப் பிறப்பைப் பதிவதில் பின்நிற்பதில்லை. பிறப்புச்சான்றில் தந்தையின் பெயர் இருந்தால்கூட அதைப் பாவிக்காமல் தாயின் வாசக(பரம்பரை) பெயரைத் தனது பெயருடன் இணைத்துப் பாவிக்கும் வழக்கமும் உண்டு. அது எல்லாவகையிலும் ஏற்றுக் கொள்ளவும்படும். அதனால் மகவேற்பு என்பது அவர்களுக்குப் பிரச்சினையாக இருப்பதில்லை.

மகவேற்புக்கட்டளைச்சட்டத்தின்படி மகவேற்கப்படுபவர் பத்துவயதுக்கு மேற்பட்டவராயின் அவரது சம்மதம் எதிர்பார்க்கப்படுகிறது. பதின்னான்கு வயதுக்கு மேற்பட்டவராயின் அதற்கு முன்பே தத்துப்பெற்றோரின் பொறுப்பில் இருந்த ஆதரங்களுடன் முயற்சிக்கலாம்.

மகவேற்கப்படுபவருக்கும் மகவேற்பவருக்கும் இடையில் இருபத்தைந்து வயது வித்தியாசமிருக்கவேண்டும். ஆண் பிள்ளையை ஆணும் பெண்பிள்ளைளைப் பெண்ணும் தனியாகத் தத்தெடுக்கமுடியும்.

ஊர் உலக வாய்கள் சிலநாள் உளறிக்கொண்டுதானிருக்கும் 'இதுவும் கடந்து போகும்' எனப் பெரியோர் சொன்ன வாக்குக்கு அமையத் தத்தெடுப்பைப் புனிதமான தொண்டாகக் கருதுவோமாக.

*ந.சதாசிவ ஐயர்*
*ஓய்வு பெற்ற மேலதிக பதிவாளர் நாயகம்*



# பாக். அமைச்சரின் கருத்துக்கு அமெ. மறுப்பு

நியூயோர்க்.செப்.29

ஐ.நாவின் பொதுச் சபைக் கூட்டத்தின்போது ட்ரம்பைச் சந்தித்துப் பேசியதாகவும், பிரச்சினைகளை பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என ட்ரம்ப் கூறியதாகவும் பாகிஸ்தானின் அயலுறது அமைச்சர் ஊடகங்களுக்குப் பேட்டியளித்திருந்தார். அதற்கு அமெரிக்கத் தரப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பாகிஸ்தான் அயலுறவு அமைச்சர் ஷா மெகமூத் குரேஷி இருவரும் சந்தித்துக் கைகுலுக்கி கொண்டனர். அப்போது, இரண்டு நாடுகளுக்கும் இடையேயான பிரச்சினைகளைத் தீர்த்து கொள்ளலாம் என ட்ரம்ப் கூறியதாகக் குரேஷி பின்னர் பேட்டியளித்தார். ஆனால், இதை அமெரிக்கா மறுத்துள்ளது. 'உணவு விருந்தின்போது, குரேஷியுடன், அதிபர் டிரம்ப் கைகளை மட்டுமே குலுக்கினார். ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை' என அமெரிக்கப் பாதுகாப்புத் துறைச் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

# ஆங் சாங் சூகிக்கு வழங்கிய குடியுரிமையை திரும்பப் பெறுகிறது கனடா!



ஒட்டோவா.செப்.29


மியான்மர் தலைவர் ஆங் சாங் சூகிக்கு வழங்கப்பட்ட தனது நாட்டின் கௌரவ குடியுரிமையைத் திரும்பப்பெறுவதற்குக் கனடாவின் நாடாளுமன்றம் ஒருமனதாகத் தீர்மானித்துள்ளது.

மியான்மரில் ரோஹிஞ்சா சிறுபான்மை இஸ்லாமியர்களுக்கு எதிராக நடக்கும் வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அந்த நாட்டின் தலைவர் என்ற ரீதியில் சூகி தவறியதால் அவருக்கு எதிராக இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதாக அறிவித்திருக்கிறது கனடா அரசு. இராணுவ ஆட்சியின் கீழ் இருந்த, முன்பு பர்மா என்று அழைக்கப்பட்ட மியான்மரில் மக்களாட்சியை நிறுவ மேற்கொண்ட முயற்சிகளுக்காக ஆங் சாங் சுகிக்கு 1991ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், கடந்த ஓராண்டு காலமாக மியான்மரில் நடக்கும் வன்முறைச் சம்பவங்களால் இதுவரை சுமார் ஏழு லட்சம் ரோஹிஞ்சா முஸ்லிம்கள் மியான்மரை விட்டு வெளியேறியிருந்தனர். தொடர்ந்து அதுபற்றிய உண்மைகளை வெளிப்படுத்தியதாக இரண்டு செய்தியாளர்களையும் மியன்மார் அரசு சிறைப்படுத்தியது. இத்தகைய அரசினதும், நாட்டினதும் தலைவராக இருக்கின்ற சூகி இன்னும் தன்னுடைய கௌரவ குடியுரிமைக்குத் தகுதியானவராக உள்ளாரா என்று கனேடியத் தலைமை அமைச்சர் ட்ரூடோ கேள்வி எழுப்பியிருந்தார். மறு நாளே அந்த நாட்டு நாடாளுமன்றம் எடுத்திருக்கின்ற நடவடிக்கையாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.

**பின்னணி**

பௌத்த மதத்தினர் பெரும்பான்மையாக வாழும் மியான்மரில், ரோஹிஞ்சா இஸ்லாமியர்களுக்கு எதிரான வன்முறைகளை பௌத்த பெரும்பான்மையினருடன் இணைந்து மியன்மார் அரச படைகளும் நிகழ்த்தியிருந்தன. மியான்மர் இராணுவம் கொடூரமான வன்முறையில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்த வேண்டும் சூகிக்குத் தொடர்ந்து பன்னாட்டு அழுத்தம் இருந்தாலும், வன்முறைகள் நடக்கவில்லை என்றே அவர் மறுத்து வந்தார். இது பெரும் விவகாரமாக மாறியிருந்தது. இந்த நிலையில் தான் 2007ஆம் ஆண்டில் ஆங் சாங் சூகிக்குத் தான் வழ்ங்கியிருந்த கௌரவ குடியுரிமையைத் திரும்பப் பெற்றிருக்கிறது கனடா.

# தலைமை அமைச்சர் மாளிகையில் இருந்த எருமைகள் ஏலத்தில்




இஸ்லாமாபாத்.செப்.29

பாகிஸ்தானின் தலைமை அமச்சர் மாளிகைக்கு நவாஸ் ஷெரீப்பின் ஆட்சிக் காலத்தில் வாங்கப்பட்ட 3எருமை மாடுகள் மற்றும் 5 கன்றுக்குட்டிகள் ஆகியன 23இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய்களுக்கு(இந்திய மதிப்பில்) ஏலம் போயிருக்கின்றன. நேற்று இஸ்லாமாபாத்தில் இந்த ஏல விற்பனை இடம்பெற்றிருக்கின்றது. அவற்றை முன்னாள் தலைமை அமைச்சரான நவாஸ் செரீப்பின் ஆதரவாளர்கள் வாங்கியுள்ளனர்.

பாகிஸ்தானின் புதிய தலைமை அமைச்சராக இம்ரான்கான் பதவி ஏற்ற பிறகு சிக்கன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அவருடைய அலுவலகத்தில் இருந்த ஆடம்பரக் கார்கள் கடந்த வாரம் ஏலத்தில் விற்கப்பட்டன. அதன் மூலம் அந்த நாட்டு அரசுக்கு 20 கோடி ரூபாய்கள் வருமானம் கிடைத்திருந்தது. மேலும் இன்னும் இருக்கின்ற கார்கள், குண்டு துளைக்காத வாகனங்கள் மற்றும் 4 உலங்கு வானூர்திகள் என்பன ஏலத்தில் விடப்பட உள்ளன. இந்த நிலையில்தான் தலைமை அமைச்சர் மாளிகையில் உள்ள 3 எருமை மாடுகள் மற்றும் 5 கன்றுகளை ஏலத்தில் விற்றிருக்கிறார்கள். இந்த எருமை மாடுகள் அனைத்தும் நவாஸ் செரீப் தலைமை அமைச்சராக இருந்த போது வாங்கப்பட்டன. எனவே அவரது ஆதரவாளர்கள் இதை விரும்பி ஏலத்தில் எடுத்துள்ளனர் என்பதாகச் செய்தி வெளியிட்டுள்ளன பாகிஸ்தான் ஊடகங்கள்.


## சபரிமலைக் கோயிலுக்குள் பெண்களுக்கு அனுமதி

# இந்திய உச்ச நீதிமன்றம் அதிரடித் தீர்ப்பு பெண் நீதிபதி மாத்திரம் மாற்றுத் தீர்ப்பு



புதுடெல்லி.செப்.29

கேரள மாநிலத்தில் உள்ள புகழ்பெற்ற சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் அனைத்து வயதுப் பெண்களையும் அனுமதிக்க வேண்டும் என இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. கேரள மாநிலம் பத்தனம் திட்டாவில் உள்ள பிரசித்தி பெற்ற சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் இதுவரை காலமும் ஆண் பக்தர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வந்தனர். பெண்களில் 10 வயது முதல் 50 வயதுக்குட்டப்பட்டவர்களுக்கு அனுமதியில்லை. பல ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வரும் இந்த முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து உச்ச நீதிமன்றத்தில் இந்திய இளம் வழக்கறிஞர்கள் அமைப்பு உள்ளிட்ட பலர் வழக்கு தொடர்ந்தனர். அந்த வழக்கில் அனைத்து வயதுப் பெண்களையும் சபரிமலைக் கோயிலுக்குள் அனுமதிக்க உத்தரவிட வேண்டும். இது அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது. பாலின சமத்துவத்துக்கு எதிரானது எனக் குற்றச்சட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. இந்த வழக்கில் தங்கள் பதிலைத் தெரிவித்த கேரள இடதுசாரி அரசு, "பருவம் எய்திய பெண்கள் சபரிமலை கோயிலுக்குள் நுழைய அனுமதிக்கிறோம்" என்று ஜூலை 18ஆம் திகதி மனுத்தாக்கல் செய்தது. (முன்பு கேரளாவில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் அரசு பெண்களை அனுமதிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இருந்தது) இந்த வழக்கை ஐந்து நீதிபதிகள் கொண்ட குழு விசாரித்தது. அதில் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா தனது தீர்ப்பில் "சபரிமலை கோயிலில் நீண்ட காலமாகவே பெண்களுக்கு பாகுபாடு காட்டப்படுகிறது. பெண்கள் பலவீனமானவர்கள் அல்ல. பெண்கள் ஆண்களுக்கு சமமானவர்கள். வழிபாட்டில் பெண்களுக்கு பாகுபாடு காட்டக்கூடாது. சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குள் அனைத்து வயதுப் பெண்களையும் கட்டாயமாக அனுமதிக்க வேண்டும். கோயிலுக்குள் பெண்களை அனுமதிக்க மறுப்பது சட்டவிரோதம். கோயிலுக்குள் பெண்களை அனுமதிக்க மறுப்பது சுதந்திரம், மரியாதை, பாலின சமநிலைக்கு எதிரானது. இதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது" எனக் கூறினார். தீபக் மிஸ்ராவுடன் கன்வில்கர் இணைந்து அளித்த தீர்ப்பை ஏற்பதாக நீதிபதிகள் நாரிமன் மற்றும் சந்திரசூட் ஆகியோர் அறிவித்தனர். ஆனால் இந்த அமர்வில் இருந்த பெண் நீதிபதியான இந்து மல்கோத்ரா மட்டும் மாறுபட்ட ஒரு தீர்ப்பை அளித்துள்ளார். எனினும் ஐந்து நீதிபதிகளில் 4பேரும் ஒரே கருத்தைக் கொண்டு இருந்ததால் குறித்த தீர்ப்பே ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.



# மாலைதீவின் புதிய அதிபர் பதவியேற்பு விழா

மாலி.செப்.29
இடம்பெற்று முடிந்த மாலைதீவு அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற அந்த நாட்டு எதிர்க் கட்சி வேட்பாளர் இப்ராகிம் முகமது ஷோலியின் பதவியேற்பு விழா இடம்பெற இருக்கிறது. இதற்காக உலகத் தலைவர்கள் சிலர் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக அயல் நாடான இந்தியாவின் தலைமை அமைச்சர் மோடிக்கு அழைப்பு விடுக்கப்பட் டுள்ளது. இந்து சமுத்திரப் பகுதியில் இலங்கைக்குத் தெற்கே அமைந்துள்ள மாலைதீவில் அண்மையில் அதிபர் தேர்தல் ,இடம்பெற்றது. சில மாதங்களுக்கு முன்னர் அங்கு அரசியல் ஸ்திரத் தன்மையற்ற சூழல் நிலவியதால், அங்கு குறித்த தேர்தல் மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டது.
மாலை தீவு முன்னேற்றக் கட்சி சார்பில் போட்டியிட்ட தற்போதைய அதிபர் அப்துல்லா யாமீன், எதிர்க்கட்சியான மாலைதீவு ஜனநாயகக் கட்சி வேட்பாளர் இப்ராகிம் முகமது ஷோலியிடம் தோல்வியடைந்தார். இதனால், இப்ராகிம் முகமது ஷோலி மாலைதீவின் புதிய அதிபராக வருகிற நவம்பர் மாதம் 17ஆம் திகதியன்று பதவியேற்க உள்ளார்.
அவர் தனது பதவியேற்பு விழாவுக்கு வருகை தருமாறு இந்தியத் தலைமை அமைச்சர் மோடிக்கு அழைப்பு விடுத்திருக்கிறார்.



# பாகிஸ்தானில் 4 ஆயுததாரிகள் சுட்டுக்கொலை சமரில் இராணுவச் சிப்பாய்கள் 2 பேர் சாவு!

இஸ்லாமபாத்.செப்.29
பாகிஸ்தானில் நடந்த பயங்கர மோதலின்போது, 4 ஆயுததாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர். அதன்போது இராணுவச் சிப்பாய்கள் 2 பேர் சாவடைந்துள்ளனர்.
பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் கலாத் என்ற இடத்தில் மங்கோசார் பகுதியில் ஆயுததாரிகள் பதுங்கி இருப்பதாகவும், அவர்கள் அந்த மாகாணத்தில் தாக்குதல்கள் நடத்துவதற்குத் திட்டம் தீட்டிக்கொண்டிருப்பதாகவும் அரச படையினருக்கு இரகசியத் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.
இதையடுத்து அங்கு பாதுகாப்புப் படையினர் விரைந்தனர். அவர்களைக் கண்ட ஆயுததாரிகள் சுடத்தொடங்கினர். பதிலுக்கு அரசபடையினரும் அவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தினர்.
இந்த சண்டையின்போது 4 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர். அத்துடன் அரச படைச் சிப்பாய்கள் இருவர் சாவடைந்தனர். ஆயுததாரிகளுக்கும், அரச படையினருக்கும் இடையே நடந்த இந்த மோதல் குறித்து பாகிஸ்தான் இராணுவ ஊடகப் பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.
பாகிஸ்தானில் லஷ்கர் இ தொய்பா, ஹக்கானி அமைப்பினர், தலீபான் இயக்கத்தினர், ஜெய்ஷ் இ முகமது உள்ளிட்ட பல்வேறு ஆயுதமேந்திய அமைப்புக்கள் செயல்பட்டு வருகின்றன. பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்திருக்கும் இந்த ஆயுததாரிகள் அங்கு தங்கிச் சதித்திட்டங்கள் தீட்டி, எல்லை தாண்டிய தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஆயுததாரிகள் மீது பாகிஸ்தான் நடவடிக்கை எடுப்பதில்லை என்ற முறைப்பாட்டை அமெரிக்கா மற்றும் பாகிஸ்தானின் அயல் நாடான இந்தியா என்பன தொடர்ந்து கூறி வருவது குறிப்பிடத்தது.

# பசுபிக் கடலில் விழுந்து

## பப்பூவாநியூகினியாவின் விமானம் விபத்து




போர்ட் மொறிஸ்பே.செப்.29
பப்பூவாநியூகினியாவைச் சேர்ந்த விமானம் ஒன்று பசுபிக் கடலில் விழுந்து விபத்துக்கு உள்ளாகி இருக்கிறது. ஆனாலும் அதிலிருந்த ப்யணிகள் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டிருக்கின்றனர். குறித்த விமானம் நேற்றுக் காலை மைக்ரோனேசியா தீவிலிருந்து புறப்பட்டிருக்கிறது. ஓடுபாதையிலிருந்து தவறியதால் பசுபிக் கடலில் விழுந்து விபத்துக்குள்ளா கியிருக்கிறது. விழுந்த விமானம் கடலில் மிதந்திருக்கிறது. அதைத்தொடர்ந்து விரைவாக வந்த மீட்புப் படையினர் விமானத்துக்குள்ளிருந்த பயணிகளை உடனடியாக மீட்டிருக்கின்றனர்.

# கூகுளுக்கு வயது 20




கலிபோர்ணியா.செப்.29
கோடிக்கணக்கான மக்களின் பல கோடிக்கணக்கரன கேள்விகளுக்குப் பதிலளிக்கிறது. தொழில்நுட்ப உலகின் நுழைவு வாயிலாகவும், மின்னஞ்சலாய் நவீன தபால் அட்டையாகவும், 'கூகுள்' வரைபடமாக தினசரி வழிகாட்டியாகவும், காணொலிக் களஞ்சியமாகவும், மொழிப்பெயர்ப்புக்கு உதவியாகவும், இணையதளங்களின் திறவுகோலாகவும், நவீனகால நண்பனாகத் தன்னந்தனியாகத் தொழில்நுட்ப உலகை ஆட்சி செய்து வரும் 'கூகுளின்' 20ஆவது பிறந்த தினம் நேற்றாகும்.
கூகுள் அமெரிக்காவைத் தலைமையாகக் கொண்டு செயற்படும் ஒரு நிறுவனம் ஆகும். இணையத் தேடுபொறித் தொழில்நுட்பம், மேகக் கணிமை, இணைய விளம்பரத் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இந்த நிறுவனம் செயற்படுகிறது. கூகுள் தேடுபொறி இதன் முதன்மையான சேவை ஆகும்.
1998இல் லாரி பேஜ், சேர்ஜி பிரின் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் முதல் பொதுப்பங்கு வெளியீடு 2004ஆம் ஆண்டில் இடம் பெற்றது. முழுமையாகப் பயன்படும் வகையில் உலகின் தகவல்களை ஒருங்கிணைப்பதே 'கூகுளின்' நோக்கமாகும். 'தீமைத் தன்மை இல்லாதிருத்தல்' என்பது 'கூகுளின்' அதிகாரப்பூர்வமற்ற நோக்காக அறியப்படுகிறது. இது அமீது பட்டேல் என்ற 'கூகுள்' பொறியாளரின் கூற்றாகும். 2006ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் மவுண்டன் வியூ, கலிபோர்னியாவுக்குத் தனது தலைமையகத்தை மாற்றிக் கொண்டது.
உலகம் முழுதும் ஒரு மில்லியனுக்கும் மேலான தரவு மையங்களைக் கொண்டிருப்பதாக நம்பப்படும் கூகுள் ஒரு நாளில் ஒரு பில்லியனுக்கும் மேலான தேடல்களைக் கையாள்வதாகவும் இருபத்து நான்கு ' பெட்டா பைட்' அளவுள்ள தகவல்களைச் சேமிப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

# காரின் கதவைத் தானே சாத்திய இளவரசி

## இங்கிலாந்தில் தலைப்புச் செய்தியான விநோதம்


லண்டன்.செப்.29
லண்டனில் ஒரு கண்காட்சித் திறப்பு விழாவுக்குத் தன்னுடைய காரில் வருகை தந்த இளவரசியும் நடிகையுமான மேகன் மார்க்கல் தனது காரின் கதவைத் தானே சாத்திய நிகழ்வு அந்த நாட்டு ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக இடம்பிடித்துள்ளது. காரில் இருந்து இறங்கியவுடன், காரின் கதவைச் சாத்துவது சாதாரண செயலே. ஆனால், இங்கிலாந்து இளவரசி மேகன் மார்க்கல், தனது காரின் கதவை அவரே சாத்தியதே இங்கு விநோதமாகப் பார்க்கப்படுகின்றது. இந்த விடயம் இங்கிலாந்து மக்களை அதிர்ச்சியிலும், பிரமிப்பிலும் ஆழ்த்தி உள்ளது. இங்கிலாந்துப் பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாகவும் ஆகி உள்ளது. ஏனென்றால், அரச குடும்பத்தினர், கார் கதவை தாங்களே சாத்துவது இல்லை.



இங்கிலாந்து இளவரசர் சார்லஸின் மகனான இளவரசர் ஹாரியை மணந்தவர்தான், மேகன் மார்க்கல். அவருக்கு வயது 37. அமெரிக்க நடிகையாக இருந்தவர். அவர் அண்மையில் லண்டனில்ஒருகண்காட்சித்திறப்பு விழாவுக்கு தனது கருப்பு நிறக் காரில் அவர் வந்தார். அவருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. இளவரசியைக் கைகுலுக்கி வரவேற்ற ஒருவர், அவரது கார்க் கதவை மூட முனைந்தார். அந்த வினாடி, சற்றும் எதிர்பாராமல், இளவரசியே கார்க் கதவைச் சாத்தி விட்டார். அந்த நபர், கையைச் சடாரென்று விலக்கிக் கொண்டு, ஆச்சரியத்தில் வாய் பிளந்தார்.
இந்த நிகழ்வு, பன்னாட்டு ஊடகங்களில் தலைப்புச் செய்தியாக இடம்பிடித்துள்ளது. அத்துடன் இது குறித்த கானொலி சமூக வலைத்தளங்களிலும் அதிகம் பரவி வருகிறது. இங்கிலாந்து அரச குடும்பத்தினரின் ஒவ்வொரு அசைவையும் கவனிப்பதற்கென்றே ஒரு சாரார் இங்கிலாந்தில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்னர் இளவரசரின் குட்டித் திருட்டு ஒன்றையும் அவர்கள் கூர்ந்து கவனித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் நடிப்பில் குதித்த சுந்தர்.சி!

'இருட்டு' என்ற படத்தில் பொலிஸ் கதாபாத்திரத்தில் இயக்குநர் சுந்தர் சி நடித்திருக்கிறார். கொஞ்சக் காலம் நடிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டு இயக்கத்தில் இறங்கிய சுந்தர் சி, தற்போது மீண்டும் நடிப்புக்குத் திரும்பியுள்ளார். திகிலான கதைக்களத்தைக் கொண்டு உருவாகி இருக்கும் இந்தப் படத்தின் முதல் சுவரொட்டி தற்போது வெளியாகி இருக்கிறது.




சினிமா

## நாளை

## 30.09.2018

ஞாயிற்றுக்கிழமை

**புரட்டாதி 14**

திதி: பஞ்சமி கா. 6.29 வரை
நட்சத்திரம்: ரோகிணி பி.இ. 1.37
சுபநேரம்: 9.02 – 10.32 வரை
ராகுகாலம்: 4.32– 6.02 வரை

## பெண்கள் இல்லாத உலகத்திலே..

பெண்கள் இல்லாத உலகத்திலே..
அம்மா என்ற கடவுளின்
முகவரி தெரியாமல் போயிருக்கும்!


பெண்கள் இல்லாத உலகத்திலே..
காதல் என்ற வேதத்தின்
உட்பொருள் தெரியாமல் போயிருக்கும்!

பெண்கள் இல்லாத உலகத்திலே..
சிரிப்புக்கும் அழுகைக்கும்
தேவையில்லாமல் போயிருக்கும்!

தலையைச் சொறி
நாக்கைக் கடி
பல்லை இளி
முதுகை வளை
கையைக் கட்டு
காலைச் சேர்
என்ன இது
வயிற்றைக் கேள்
சொல்லுமது




# மிதிபடும் உலகம்



காலையில் கண்விழித்ததிலிருந்து இரவு கண்ணுறங்குவது வரை எத்தனை எத்தனை சண்டைகள்!
சில நேரம் நாம் சண்டையிடுகிறோம் பிறர் பார்க்கின்றனர்!
பலநேரம் பிறர் சண்டையிடுகிறார்கள் நாம் பார்க்கிறோம்!
இப்படி நடக்கும் எல்லாச் சண்டைகளுக்கும் நானறிந்த காரணம் சுயநலம்!
சுயநலமின்றி வாழ நாம் என்ன மரங்களா? என்று சிலர் கேட்கலாம். மரங்கள் கூடத் தாம் வாழத் தேவையான தண்ணீரைச் சுயநலத்தோடு உறிஞ்சத்தானே செய்கின்றன என்று சிலர் சொல்லாம்..
எந்த மரங்களும் தம் தேவைக்கு அதிகமாக ஒருதுளி நீரைக் கூட உறிஞ்சுவதில்லையே என்பதுதான் பார்வையாக உள்ளது.
இப்போதெல்லாம் நடைபெறும் ஊழல்களைப் பாருங்கள் ஆயிரம் கோடி.. இரண்டாயிரம் கோடி என்று..
சுயநலம் பேராசையாக மாறிப்போனதால்..
தான் வாழ யாரை வேண்டுமானலும் மிதித்துவிட்டுச் செல்லலாம் என்பது தான் ஒவ்வொருவரும் பின்பற்றும் கொள்கைகளாக இருக்கின்றன.

## படிக்கிற பிள்ளை எங்கிருந்தாலும் படிக்கும்... அது இதுதானோ!




## பைக் வாங்கிறப்ப இருந்த சந்தோசம்




பெற்றோல் போடும்போது வற்றதே இல்லை...

## குழந்தையுடன் விளையாடும் போது...




மீண்டும் குழந்தை ஆகுகிறார் தந்தை.....

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 4 | 5 | | | | | |
| 8 | | 1 | | 9 | 2 | 5 | | |
| | 3 | | 8 | 1 | | | | |
| 9 | | | | | | 3 | | |
| | | | 3 | 8 | 6 | | | |
| 3 | | 8 | | | | | | 4 |
| | | | | 2 | 8 | | 1 | |
| | | 2 | 1 | 7 | | 8 | | 6 |
| 1 | 8 | | | | 4 | 7 | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 7 | 6 | 5 | 3 | 4 | 2 | 9 |
| 3 | 5 | 2 | 7 | 9 | 4 | 8 | 1 | 6 |
| 6 | 4 | 9 | 8 | 2 | 1 | 3 | 7 | 5 |
| 2 | 6 | 5 | 3 | 4 | 7 | 1 | 9 | 8 |
| 9 | 3 | 1 | 2 | 6 | 8 | 7 | 5 | 4 |
| 7 | 8 | 4 | 9 | 1 | 5 | 6 | 3 | 2 |
| 4 | 9 | 8 | 1 | 3 | 2 | 5 | 6 | 7 |
| 1 | 7 | 6 | 5 | 8 | 9 | 2 | 4 | 3 |
| 5 | 2 | 3 | 4 | 7 | 6 | 9 | 8 | 1 |

நேற்றைய விடை

ஒரு வீரனைப் போல அச்சமற்று இரு.

குழந்தையின் நேசத்தை விடாதே.

வாழ்வதற்கு சாப்பிடுங்கள். சாப்பிடுவதற்காக வாழவேண்டாம்.

உங்கள் வார்த்தைக்கு உண்மையாக இருங்கள்

வாய்ப்புகளை மறுக்க வேண்டாம்.




**மேடம்:** கடந்தகால உழைப்புக்கு நற்பலன் கிடைக்கும். தொழில், வியாபாரம் செழித்து திட்டமிட்ட இலக்கை அடைவீர்கள். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**இடபம்:** யாரிடமும் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**மிதுனம்:** உங்களின் சிறிய முயற்சியும் அதிக நன்மை தரும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும்.

**கடகம்:** நண்பரிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள். எதிர்காலம் குறித்த நம்பிக்கை மேலோங்கும். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும்.

**சிங்கம்:** உங்களை சிலர் குறை சொல்லலாம். செயல்களில் சற்று சுறுசுறுப்பு அவசியம். தொழிலில் உள்ள நிலுவைப் பணி நிறைவேறும். எதிர்பார்த்த வருமானம் குறையலாம்.

**கன்னி:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். குடும்பத்தினரின் ஆதரவு ஊக்கம் தரும். தொழில், வியாபார இலக்கு படிப்படியாக நிறைவேறும்.

**துலாம்:** வழக்கத்திற்கு மாறான பணிச்சுமை ஏற்படலாம். அரசின் சட்டத் திட்டத்தை மதித்து நடப்பது நல்லது. தொழிலில் அளவான மூலதனம் போதும்.


**விருச்சிகம்:** பெற்றோரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். தாராள பணவரவால் கடன் அடைபடும்.

**தனுசு:** எதிர்மறையாக பேசுபவரிடம் விலகிச் செல்லவும். தொழில், வியாபார இலக்கு கால அவகாசத்தில் நிறைவேறும். அளவான பணவரவு கிடைக்கும்.

**மகரம்:** மகூழ்நிலை உணர்ந்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும்.

**கும்பம்:** உங்களை அவமதித்து பேசியவரும் அன்பு பாராட்டுவார். பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேறும்.

**மீனம்:** மனதில் இனம்புரியாத குழப்பம் ஏற்படலாம். நலம் விரும்புவரின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழிலில் பணவரவை விட நிர்வாகச் செலவு அதிகரிக்கும்.



# பொதுப்பணி செய்

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவனது நாட்டு மக்கள் நாட்டின் பொதுப்பணி எதனிலும் ஈடுபடமாட்டார்கள். ஆனால் எதற்கெடுத்தாலும் அரசனை அல்லது அவனது அரசைக் குறை சொல்லிக் கொண்டிருப்பார்கள். இந்த மக்களைத் திருத்துவதற்கு அரசன் ஒரு உபாயத்தைக் கையாண்டான்.

ஒருநாள் அனைவரும் நடமாடும் கடைவீதியில் இரவோடு இரவாக ஒரு பெரிய பாறாங்கல்லை தன் சேவகர்களைக் கொண்டு வைப்பித்தான். அந்தக் கல் ஒருவர் தூக்கிச் செல்லக்கூடிய பருமன் உடையது. கல் அங்கே வைக்கப்பட்ட மறுநாள் காலையில் அந்த வழியாக வந்த பலரும் நடுவீதியில் கிடந்த அந்தக் கல்லைக் கண்டும் காணாததுமாகத் தாண்டிச் சென்றார்கள். "என்ன கொடுமை இது. நடு வீதியில் இவ்வளவு பெரிய கல் கிடக்கிறதே! எந்த முட்டாள் இதனை இங்கே வைத்துவிட்டுச் சென்றான். இதை எடுத்து அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த அரசனுக்குக் கூடத் தெரியவில்லையே! இப்படி இருந்தால் நாடு எப்படி முன்னேறும்?" என்று முணுமுணுத்துக் கொண்டு சென்றார்கள்.

இப்படியே ஒரு வாரம் கடந்து போயிற்று. அந்தக் கல் மட்டும் அகற்றப்படாமல் அந்த இடத்திலேயே இருந்தது. ஒருநாள் அரசன் அந்த நகரத்து மக்களை எல்லாம் அந்தக் கடை வீதியில் கூடச் சொன்னான். என்ன நடக்கப் போகிறது என்பதை அறிய மக்களும் அங்கே கூடினார்கள். அரசன் அவ்விடம் வருகை தந்தார். அங்கு நின்ற ஒரு சேவகனைப் பார்த்து நடுவீதியில் கிடக்கும் அந்தக் கல்லைத் தூக்கி வீதி ஓரமாகப் போடு" என்று கட்டளையிட்டான். அரசன் கட்டளைப்படியே சேவகனும் அக்கல்லைத் தூக்கி ஓரமாகப் போட்டான். அப்போது அக்கல்லிருந்த அடிப்பகுதியில் ஒரு பெரிய பெட்டி ஒன்று இருந்தது. அந்தப் பெட்டியின் மேற்பகுதியில் "இந்தக் கல்லை எடுத்து ஓரமாகப் போடுபவர்களுக்கு இந்தப் பெட்டிக்குள் உள்ள ஆயிரம் பொற்காசுகளும் பரிசு" என எழுதப்பட்டிருந்தது. அதைப் பார்த்த அங்கிருந்த அனைவரும் ஆயிரம் பொற்காசுகளை இழந்துவிட்டோமே என்று வருத்தினார்கள். அப்போது அரசன், எதற்கெடுத்தாலும் அரசைக் குறை கூறுகிறீர்களே! இந்த நாட்டு மக்களுக்கும் நாட்டில் மேல் பற்று இருக்க வேண்டுமல்லவா! நாட்டு மக்களுக்கும் நாட்டுக்கு பொதுப் பணிச் சேவை புரிய வேண்டும் என்ற மனப்பான்மை இருக்கவேண்டுமல்லவா? அப்படி இருந்தால்தான் நாடு முன்னேறும். நாடு உங்களுக்கு என்ன செய்தது என்று கேட்காதீர்கள். நாட்டுக்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டுப்பாருங்கள் என்றார். அரசன் கூறியவற்றைக் கேட்ட மக்கள் தங்கள் சோம்பேறித்தனத்துக்கு வெட்கப்பட்டனர். "இனியொருபோதும் தாங்கள் அரசைக் குறை சொல்ல மாட்டோம். எங்களால் முடிந்தவற்றை நாங்களே செய்வோம்" என்றனர்.

**எம்மால் முடிந்தவற்றை நாமே செய்து விட வேண்டும். பிறரை எதிர்பார்த்துக் காலம் கடத்தக்கூடாது. அப்படிக் காலம் கடத்தும்போது எமக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்காமல் போய்விடும்.**




## தெரிந்துகொள்வோம்

- பிறர் அன்பு பாராட்டும்படி நடப்பதை விட அவர்கள் மதிக்கும்படி நடத்தல் மேலானது.
- செல்வமான வாழ்க்கையை விட உண்மையோடிருத்தல் சிறந்தது.
- இளமையாய் இருப்பதை விட நோயின்றி இருப்பது மேலானது.
- அழகுடமையை விட நாணமுடமை நல்லது.
- உயிர்குலத்துடமையைவிட கல்வியுடமை மேலானது.
- காலம் அறிந்து செய்வோனின் முயற்சி கைகூடும்.
- மன ஒற்றுமை இல்லாதவன் நண்பனல்லன்.
- அறிவில்லாதவனைத் துணைக் கொள்வதால் பயன் சிறிதுமில்லை.
- பொருள் செல்வத்தில் பற்றுள்ளவன் நடுவு நின்று முறை செய்தல் இயலாது.
- வஞ்சகச் செயல்கள் திருடனாவதற்கு வழி ஏற்படுத்தும்.
- ஒருவருக்கு இரத்தலை விட இகழ்ச்சி வேறில்லை.
- பணம் இரக்கும் போது உறவாடுவதும், அது இல்லையெனில் விலகுவதும் உறவுகள் ஆகா.



## ஒத்த கருத்து சொற்கள்

அகிலம் - பூமி
அவலம் - பரிதாபம்
அனல் - நெருப்பு
ஆபரணம்- அணிகலன்
ஆயுள் - வாழ்நாள்
ஆரம்பம்- தொடக்கம்
ஆலோசனை - கருத்து
இரை - உணவு
இலட்சியம் - குறிக்கோள்
தீர்மானம் - முடிவு
கோபம் - மூர்க்கம்
சந்தோசம்- மகிழ்ச்சி
சிநேகிதம் - நட்பு
மேகம் - முகில்



## ஆலமரமும் நாணற் புல்லும்


ஆலமரம் ஆற்றோரம்
ஆற்றோரம் காற்றடிக்கும்
காற்றடித்தும் ஆலமரம்
அசையாமல் நின்றிருக்கும்

ஆற்றோரம் நாணலுண்டு
நான்கு பக்கம் காற்றடிக்கும்
நான்கு திசை வளைவதனால்
தாங்கி நிற்கும் நாணலது

தலை நிமிர்ந்த ஆலமரம்
காய்வதுண்டு புயற்காற்றில்
தலைகுனியும் நாணல் எனில்
தலைநிமிரும் புயல் ஓய்ந்தால்

தனக்கு நிகர் இல்லையென்பார்
சறுக்கி விழ நேர்வதுண்டு
பணிவுடனே நடந்து கொண்டாய்
பலமான வெற்றியுண்டு

## எண்களை இணைத்து படத்தை முழுமை செய்வோம்



see more news in NEWUTHAYAN.COM



# நீர் இன்றி அமையாது உலகு!

## உயிர்ச் சமனிலையின் ஆதாரத்தைப் பேணுவோம்

பழனித்துரை தர்மகுமாரன்

### ஆதாரம்

நீர் உயிர்ச் சமனிலையின் ஆதாரம். உணவுச் சங்கிலியை உடைவின்றிக் கட்டமைத்துக் காத்திருக்கும் ஆயுதம். அந்தவகையிலே உயிரினங்களின் இயங்குநிலை நீர் கொண்டுள்ள பாதுகாப்பு இயல்பாளுமைகளின் வழியே தனித்துவம் பெறுகிறது. மனித உடலில் பெரும்பகுதி நீரால் நிரம்பல டைந்துள்ளது. குறிப்பாக 60 வீதத்துக்கும் மேற்பட்ட பகுதி நீரால் சூழப்பட்டுள்ளது.

மனித உடலில் நீர் மூலக்கூறுகள் பல்வேறுபட்ட தொழிற்பாடுகளை ஆற்றிவருகின்றது. குருதியின் முதன்மைக்கூறாக அமைந்து ஊட்டச்சத்துக்களையும் ஒட்சிசனையும் உடற்கலங்களுக்கு காவிச் செல்கின்றது. நாம் அன்றாடம் உண்ணுகின்ற உணவுவகைகளை கரைசலாக்கி சமிபாடடையச் செய்கின்றது. உடல் வெப்பநிலையைச் சீராகப் பேண உதவுகின்றது. எமது புலன் அங்கங்களை வாய்ப்பாக வைத்துள்ளது. வியர்வை, சிறுநீர் மூலம் கழிவுகளை வெளியேற்றுகின்றது. மூளையின் சிறப்பான செயற்பாட்டுக்கு உதவுகின்றது. உடலைக் காயங்களில் இருந்து பாதுகாப்பதுடன், மனிதனுக்கு வேதனையை ஏற்படுத்துகின்ற மலச்சிக்கலில் இருந்தும் பாதுகாக்கின்றது.

### நீர் கொண்ட சமனிலையின் வெளிப்பாடு

இவ்வாறு மனித உடலானது ஓய்வின்றி இயங்குநிலை பெறுகின்ற போது உடலில் இருந்து அதிகளவான நீர் வெளியேறுகின்றது. அதாவது உடலின் செயற்பாட்டுக்கு ஏற்பவும், புறச்சூழலுக்கு ஏற்பவும் நீர்வெளியேற்றம் அதிகரித்துக் கொண்டே இருக்கும். இந்த நீர்வெளியேற்றச் சுற்றோட்டம், 'தோலில் இருந்து வியர்வையாகவும், கண்ணில் இருந்து கண்ணீராகவும், சிறுநீரகத்தில் இருந்து சிறுநீராகவும், மூக்கில் இருந்து வெளிச்சுவாசத்தின் மூலமும், குதத்தில் இருந்து மலமாகவும், வாயில் இருந்து உமிழ்நீராகவும்' இடம்பெறுகின்றது.

இவை அனைத்தும் அன்றாட செயற்பாடுகளாக இடம் பெறுகின்ற போதும், சுற்றுச் சூழல் வெப்பநிலை அதிகரித்துள்ளதால் உடல் இயங்குநிலையின் சமனிலையை பேணுவதற்கும் அதிகளாவான நீர் உடலில் இருந்து வெளியேற்றப்படுகின்றது. அதற்கேற்ப அதிகளாவான தண்ணீரை அன்றாடம் நாம் உள்ளெடுத்துக்கொள்ள வேண்டும்.


குறிப்பாக, 'விளையாட்டு, உடற்பயிற்சி நேரங்கள், அதிக வியர்வை வெளியேற்றம், அதிக தட்பவெப்ப நாள்கள், சூரிய ஒளியில் நிற்கும் சந்தர்ப்பங்கள், மின்விசிறி மற்றும் வளிச்சீராக்கிகளின் அதிகரித்த பாவனை, அதிக காற்று வீசும் காலம், காய்ச்சல், வயிற்றோட்டம் போன்ற நோய் அறிகுறிகளின் வெளிப்பாடு' என அத்தனை காரண காரியங்களின் போதும் அதிகளவான நீரை நாம் பருக வேண்டும்.

இங்கு உடலுக்குச் செயற்கையான சுவாத்தியம் தருகின்ற மின்விசிறி, வளிச்சீராக்கி என்பவற்றின் பாவனை எம்மிடையே அதிகரித்துள்ளதுடன், எவருக்கும் தாகம் ஏற்படுவதில்லை. செயற்கையான சுவாத்தியங்களை அதிகமும் நாம் அரவணைக்கின்ற போது, உடலின் வெளிப்புறம் குளிர்மையாக இருப்பதுடன், அதிகளவான நீரிழப்பு ஏற்படுகின்றது. இது குறித்து ஒருவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

### வேண்டத்தகாத செயல்

நாம் தற்போது கண்டுகொண்டுள்ள நவீனத்துவமான வாழ்வியலின் பயணங்களுள் பலவிதமான உள்ளீடுகளையும் கட்டுப்பாடின்றி ஏற்றுக்கொண்டுள்ளோம். தூய்மையான தண்ணீரை அருந்தாது தவிர்த்து அதிகளவில் நிறமூட்டப்பட்ட மென்பானங்களைச் சுவைத்து வருகின்றோம். இவை சுவை உணர்வில் இதம் தருகின்ற போதும், உடல் இயங்குநிலையில் பல்வேறு வகையான இடையூறுகளைத் தருகின்றன. உண்மையில் அருந்துவதற்கு மிகச்சிறந்த பானம் நீரேயாகும். ஏனெனில் அது, 'இயற்கையானது, திருப்திகரமானது, புத்துணர்ச்சி தருவது, உடல் ஆரோக்கியம் தருவது, உடலுக்கு குளிர்மையும் செந்தளிப்பும் தருவது, கலோரி அற்றது, உடலுக்கு என்றும் நன்மை தருவது.' என சீரிய பண்பியல் கூறுகளை தன்னகத்தே கொண்டுள்ளது.

ஆனால் மென்பானங்களைப் பொறுத்தவரையிலே அவை, 'அதிகரித்த சீனி, இரசாயனக் கலப்பு, அதிக கலோரி, உடல்நிறையை அதிகரிக்கக்கூடிய உள்ளீடு, வாயுக்களின் திணப்பு, செயற்கை முறைத் தயாரிப்பு, உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் மூலக்கூறுகளின் கலப்படம்' என உடலின் சீரான இயங்குநிலைக்கு ஒவ்வாத விடயங்கள் அத்தனையையும் கொண்டுள்ளன. நிற மூட்டிய மென்பானங்கள் இடர் தரும் கருவி



கள் என அறிந்திருந்தும் நாம் அவற்றை அதிகளவில் பயன்கொள்கின்றோம். இந்தநிலையில் இருந்து விடுபட நாம் முயற்சிக்க வேண்டும். இயற்கையான தண்ணீரையும், இயற்கையான பழ ரசங்களையும் அதிகளவில் உள்ளெடுப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

### பயன்

சுத்தமான குடிதண்ணீரைப் பயன்படுத்துவதன் மூலம், 'வாந்திபேதி, வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல்' போன்ற தொற்று நோய்களைத் தவிர்த்துக் கொள்ளலாம். குடிப்பதற்கு பயன்படுத்தும் தண்ணீரைக் கொதிக்கச் செய்து அதை ஆறவிட்ட பின்னர் அருந்துவது சிறந்தது. மேலும் நீர்வடிகட்டிகளைப் பயன்படுத்தவதன் மூலம், நுண்ணங்கிகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் இராசாயனப் பதார்த்தங்கள் போன்றவற்றின் தாக்கங்களில் இருந்து பாதுகாப்பைத் தேடிக்கொள்ளலாம். தேவையானளவு தண்ணீரை அருந்துவதன் மூலம் சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம். சிறுநீர் நிறமற்றதாக வெளியேறும். அதிகாலைப் பொழுதில் உறக்கத்தில் இருந்து எழுந்தவுடனும், இரவு நித்திரைக்கு செல்ல முன்பும், குளிப்பதற்கு முன்பும் நீரை அருந்துவதன் மூலம் மேலதிக நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம். தொலைக்காட்சி பார்க்கும் போதும், கணினியில் வேலை செய்யும் போதும், சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்ளும் போதும் அடிக்கடி நீர் அருந்துவதை பழக்கப்படுத்திகொள்ளுதல் வேண்டும்.

### தேவையான உணவுப் பழக்கவழக்கம்

எனவே சுத்தமான நீருடன் நீர்ச்சத்து நிறைந்த உணவுவகைகளை இணங்கண்டு அவற்றை அதிகளவில் உண்ணப் பழகிக்கொள்ள வேண்டும். ஆரம்பகால உணவுப் பழக்கவழக்கங்களை இளைய தலைமுறையினருக்கு எடுத்துக்கூறி அவர்களை வழிப்படுத்த வேண்டும். சோறு நீர், தயிர், மோர், இலைக்கஞ்சி, எலுமிச்சம்சாற்றுக்கரைசல் என்பவற்றுடன் கீரை, சர்க்கரைப் பூசணி, பிர்க்கங்காய், கெக்கரிக்காய், நீத்துப் பூசணி போன்ற மரக்கறி வகைகளை அதிகளவில் உண்ணக்கொடுக்க வேண்டும்.

பழவகைகளைப் பொறுத்தவரையில் வெள்ளரிப்பழம், வர்த்தகப்பழம் என்பன அதிக நீர்த்தன்மை கொண்ட பழங்கள்.

இயற்கையான சத்துக்களை நிறைவாகக் கொண்ட இளநீரை அதிகளவில் அருந்தலாம். அதேபோன்று கொத்தமல்லி, தேக்காய்ப்பூ கீரை, இக்கிரி, தூதுவளை, துளசி தொடடாச்சினுங்கி முதலான மூலிகைகளை அவித்து ஆறவைத்து குடிநீராக அருந்தலாம். இவை அனைத்தும் உடலுக்குத் தேவையான நீரை வழங்குகின்றன. உடல் உறுப்புக்களையும் சில உடற் தொகுதிகளையும் ஆரோக்கியமாக வைத்திருக்கின்றன. சில உடற் தொகுதிகளை சுத்தம் செய்து கழிவுகளை வெளியேற்றுகின்றன.

### பாதிப்பு

இதுமத்திரமன்றி நீர்ச் சமனிலையை பொருத்தமுறப் பேணாவிடின் அமிலத்தன்மை அதிகரித்து உடலில் பாதகமான விளைவுகள் ஏற்படும். உடலுக்குத்தேவையான அளவு நீரை அருந்தாவிடில் வேண்டத்தகாத விளைவுகள் உடலிலும், உள ஆரோக்கியத்திலும் ஏற்படும். வாய், கண் உலர்ந்து சுருக்கமடைதல், தூக்கமின்மை, அசதி, கவனக்குறைவு, வினைத்திறனாகச் செயற்பட முடியாமை, கோபம் போன்ற அறிகுறிகள் தென்படும்.

### சிந்தித்துச் செயலாற்றுவோம்

எமது முன்னோர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் கல்வியறிவு குறைந்தவர்களாக இருந்தபோதும் அனுபவ அறிவையும், பொது அறிவையும் அதிகளவில் கொண்டிருந்தனர். தங்களுடைய ஆயுள்காலத்தை அதிகரித்துக் கொண்டனர். அவர்கள் கொண்டிருந்த தான நீர்ச்சத்தான உணவுவகைகளை அருந்தும் பழக்கவழக்கத்தின் ஊடே இதனை அறிந்துகொள்ள முடிகிறது.

ஆகவே , எமது முன்னோர்கள் கைக்கொண்ட பழக்கவழக்கங்களை பின்பற்றுவதற்கு எம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோம். சுத்தமான நீரைப்பருகி, அசுத்தமான நீரை வெளியேற்ற முயற்சிப்போம். உடல் ஆரோக்கியம் கண்டு மகிழ்வாக வாழ்வோம். ஆம், உலகம் நீர் இன்றி வாழ இயலாது என்பது உண்மை. அதன்வழி அமைதிக்கும் நீர்மை வேண்டும் மாந்தர் ஒழுக்கத்துக்கு ஊற்றாகவும் அது அமையும்.

*(நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்*
*வான்இன்று அமையாது ஒழுக்கு!)*

# அரியாலை மக்களின்
# சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா - 2019
# விளையாட்டு மற்றும் கலைப் போட்டிகளுக்கான விண்ணப்பம் கோரல்

அரியாலையூர் பெருமக்களினால் 1919ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு சித்திரை தமிழ் புதுவருட தினத்தன்றும் கொண்டாடப்பட்டு வரும் தமிழர் கலை, கலாச்சார, பண்பாட்டை பறைசாற்றும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவானது 2019 சித்திரை புதுவருட தினத்தன்று நூற்றாண்டுப் பெரு விழாவாக வெகு கோலாகலமாக கொண்டாடப்படவுள்ளது. நூற்றாண்டு விழாவின் இறுதி கலை, கலாச்சார, விளையாட்டு நிகழ்வுகள் 01.04.2019 இலிருந்து 14.04.2019 வரை அரியாலையூரின் முன்னணி சனசமூக நிலையங்களின் விளையாட்டு மைதானங்களிலும், கலை அரங்குகளிலும் நடைபெறும். இவ் நூற்றாண்டு விழாவையொட்டி முன்னணி விளையாட்டு மற்றும் கலைப்போட்டிகள் உள்ளூர், வெளியூர் மற்றும் சர்வதேச ரீதியாக போட்டிகள் இவ்வருடம் 2018 ஒக்டோபர் மாதத்தில் இருந்து ஆரம்பமாக உள்ளன.

விளையாட்டு அணிகளும், கலைக் குழுக்களும் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பப் படிவங்களை விழாச் செயலாளரிடம் பெற்று விண்ணப்பிக்குமாறு வேண்டி நிற்கின்றோம்.
முன்னோடி கலை விளையாட்டுப் போட்டிகளின் விபரங்களும் திகதிகளும்

**வ.மாகாண மற்றும் சர்வதேச ரீதியான முன்னோடி விளையாட்டுப் போட்டிகளின் விவரங்கள்**

| இல | போட்டிகள் | எல்லை | போட்டி ஆரம்பிக்க உத்தேசித்துள்ள மாதம் | போட்டி நடத்த உத்தேசித்துள்ள இடம் | 1ஆம் இடம் | 2ஆம் இடம் | 3ஆம் இடம் | ஆறுதல் பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மாட்டு வண்டில் சவாரி 3பிரிவு | வ.மாகாணம் | 06.04.2019 | மத்திய வி.கழக மைதானம் / நாவலடி வயல் வெளி | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | 05 @ 3,000 |
| 2 | 25 கி.மீ வீதியோட்டம்-ஆண்கள் | வ.மாகாணம் | 13.04.2019 காலை 6.00 மணி | ஆரம்பம் அரியாலை சனசமூக நிலையம் முடிவு மத்திய வி.கழகம் | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | 15 @ 2,000 |
| 3 | 15 கி.மீ வீதியோட்டம்-பெண்கள் | வ.மாகாணம் | | | 15,000.00 | 10,000.00 | 8,000.00 | 15 @ 2,000 |
| 4 | 50 கி.மீ சைக்கிள் ஓட்டம் - ஆண்கள் | வ.மாகாணம் | 13.04.2019 காலை 7.00 மணி | ஆரம்பம் அரியாலை சரஸ்வதி சனசமூகநிலையம் முடிவு அரியாலை சனசமூக நிலையம் | 50,000.00 | 30,000.00 | 20,000.00 | 15 @ 3,000 |
| 5 | 25 கி.மீ சைக்கிள் ஓட்டம் - பெண்கள் | வ.மாகாணம் | | | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | 15 @ 2,000 |
| 6 | அஞ்சலோட்ட கண்காட்சி போட்டிகள | பாடசாலை மட்டம் 04 வயது பிரிவு வ.மாகாணம் | 10.04.2019 | துரையப்பா விளையாட்டுமைதானம் | 04 வயது பிரிவுகளுக்கிடையில் போட்டிகள் நடாத்தப்படும் நடைபெறும் ஒவ்வொரு போட்டிகளுக்கும் முதல் 03 இடங்களை எடுக்கும் மாணவர்களுக்கு வெற்றிப் பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். அத்துடன் ஒவ்வொரு போட்டிகளுக்கும் புள்ளிகள் வழங்கப்பட்டு அதிக புள்ளிகளை எடுக்கும் முதல் 03 பாடசாலைகளுக்கு ரூபா 50,000.00, 30,000.00, 20,000.00 பணப்பரிசில்களுடன் வெற்றிக் கேடயமும் வழங்கப்படும் | | | |
| 7 | துடுப்பாட்டம் (வன்பந்து) (T20) | வ.மாகாணம் | ஐப்பசி. இறுதிப்போட்டி - 07.04.2019 | யாழ் மத்திய கல்லூரி சென் பற்றிக்ஸ் கல்லூரி | 50,000.00 | 30,000.00 | 20,000.00 | Man of the match -3,000 Best Batsman - 3,000 Best bowler -3,000 Best Fielder -3,000 Man of the Series -5,000 |
| 8 | துடுப்பாட்டம் (மென்பந்து) 07 பேர் 05 ஓவர் | வ.மாகாணம் | ஐப்பசி. இறுதிப்போட்டி - சித்திரை | அரியாலை சனசமூக நிலையம் | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | Man of the match -2,000 Best Batsman - 2,000 Best bowler -2,000 Best Fielder -2,000 Man of the Series -3,000 |
| 9 | கரப்பந்தாட்டம் செற்றப் | தேசிய ரீதியில் | தை -2019 | அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் | 75,000.00 | 50,000.00 | 30,000.00 | Man of the match -2,000 Best Setter - 2,000 Best Middle attacker -2,000 Man of the Series -3,000 |
| 10 | கரப்பந்தாட்டம் செற்றப் | வ.மாகாணம் | தை -2019 | அரியாலை திருமகள் சனசமூக நிலையம் | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | Man of the match -2,000 Best Setter - 2,000 Best Middle attacker -2,000 Man of the Series -3,000 |
| 11 | கரப்பந்தாட்டம் ஓவர் கேம் | வ.மாகாணம் | தை -2019 | அரியாலை சனசமூக நிலையம் | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | Man of the match -3,000 Man of the Series -4,000 |
| 12 | கடற்கரை கரப்பந்தாட்டம் Beach volleyball | வ.மாகாணம் | தை -2019 | அரியாலை கிழக்கு கடற்கரை | 20,000.00 | 15,000.00 | 10,000.00 | Man of the match -3,000 Man of the Series -4,000 |
| 13 | உதைபந்தாட்டம் | வ.மாகாணம் | புரட்டாதி 2018 | மத்திய வி.கழக மைதானம் | 50,000.00 | 30,000.00 | 20,000.00 | Man of the match -3,000 Man of the Series -5,000 |
| 14 | வெளிநாட்டு உறவுகளுடன் ஆன சிநேகபூர்வமானது உதைபந்தாட்டம் | சர்வதேச ரீதியான | சித்திரை 2019 | அரியாலை சனசமூக நிலையம் | 7,000.00 | 5,000.00 | 3,000.00 | Man of the match -2,000 Man of the Series -2,000 |
| 15 | வலைப்பந்து | வெளியூர் | தை -2019 | அரியாலை சனசமூக நிலையம் | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | Man of the match -2,000 Best Shoter - 2,000 Best Defender -2,000 Man of the Series -3,000 |
| 16 | கபடி -ஆண்கள் | வ.மாகாணம் | மார்கழி 2018 | அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | Man of the match -2,000 Best Driver - 2,000 Best Defender -2,000 Man of the Series -3,000 |
| 17 | கிளித்தட்டு- ஆண்கள் | வெளியூர் | கார்த்திகை 2018 | அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | Man of the match -2,000 Best Driver - 2,000 Best Defender -2,000 Man of the Series -3,000 |
| 18 | கயிறு இழுத்தல் - ஆண்கள் | வ.மாகாணம் | பங்குனி 2019 | மத்திய வி.கழக மைதானம் | 20,000.00 | 15,000.00 | 10,000.00 | 4th -5,000.00 |
| 19 | கயிறு இழுத்தல்- பெண்கள் | வ.மாகாணம் | பங்குனி 2019 | மத்திய வி.கழக மைதானம் | 20,000.00 | 15,000.00 | 10,000.00 | 4th -5,000.00 |
| 20 | போர்த் தேங்காய் அடித்தல்- ஆண்கள் | வ.மாகாணம் | பங்குனி 2019 | பிள்ளையார் கோவில் முன்றல் | 10,000.00 | 8,000.00 | 5,000.00 | 10 @ 500 |
| 21 | கிடுகுபின்னுதல்- பெண்கள் | பொது | பங்குனி 2019 | நாவலடி சனசமூக நிலையம் | 10,000.00 | 8,000.00 | 5,000.00 | 10 @ 500 |
| 22 | பூப் பந்தாட்டம் - ஆண்கள் | வ.மாகாணம் | கார்த்திகை 2018 | அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் | அணி ரீதியான போட்டியாக நடைபெறும். 03 தனி ஆட்டம் 02 குழு ஆட்டம் நடைபெறும். வெற்றிபெறும் முதல் 03 அணிக்கு தலா 25,000.00, 15,000.00, 10,000.00 என பணப்பரிசுகளும் வெற்றிக் கிண்ணம் வீரர்களுக்கான பதக்கம் சான்றிதழ்கள் வழங்கப்படும் | | | |
| 23 | பூப் பந்தாட்டம் - பெண்கள் | வ.மாகாணம் | கார்த்திகை 2018 | | அணி ரீதியான போட்டியாக நடைபெறும். 03 தனி ஆட்டம் 02 குழு ஆட்டம் நடைபெறும். வெற்றிபெறும் முதல் 03 அணிக்கு தலா 25,000.00, 15,000.00, 10,000.00 என பணப்பரிசுகளும் வெற்றிக் கிண்ணம் வீரர்களுக்கான பதக்கம் சான்றிதழ்கள் வழங்கப்படும் | | | |
| 24 | கராட்டி போட்டி | வ.மாகாணம் | பங்குனி | பிரப்பங்குளம் கல்யாண மண்டபம் | 04 வயது பிரிவுகளுக்கிடையில் போட்டிகள் நடத்தப்படும் நடைபெறும். ஒவ்வொரு போட்டிகளுக்கும் முதல் 03 இடங்களை எடுக்கும் மாணவர்களுக்கு வெற்றிப் பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். அத்துடன் ஒவ்வொரு போட்டிகளுக்கும் புள்ளிகள் வழங்கப்பட்டு அதிக புள்ளிகளை எடுக்கும் முதல் 03 கழகங்களுக்கு ரூபா 20,000.00, 15,000.00, 10,000.00 பணப்பரிசில்களுடன் வெற்றிக் கேடயமும் வழங்கப்படும். | | | |

**வ.மாகாண மற்றும் சர்வதேச ரீதியான் முன்னோடி கலை போட்டிகளின் விவரங்கள்**

01. திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச ரீதியான போட்டிகள் இவை அனைத்தும் திறந்த போட்டிகள் முடிவுத் திகதி **31.12.2018**

**1. சிறுகதை**

**தலைப்பு–** 1) **விழுதுகள்** 2) **முதுசம்** 3) **சுதேசியம்** 4) **தாய் உள்ளம்** 5) **பொன் செய்யும் மருந்து**

A4 தாளில் 12 அளவிலான (font size 12) கணினியில் வரி இடைவெளி (Line spacing 1.5) 750-1500 வரையான சொற்களுக்குள் அமைய வேண்டும்.
1ஆம் பரிசு ரூ 30,000 2ஆம் பரிசு ரூ 20,000 3ஆம் பரிசு ரூ 10,000

- சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- ஏற்கனவே பிரசுரிக்கப்பட்ட அச்சு வடிவில் வெளிவந்த, பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த கதைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**2. கவிதை**

**தலைப்பு–**

- சுதேசிய உணர்வு, தாய் நாடு, தாய்மை, நல்ல குடும்ப உறவு, இயற்கை, எமது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள் போன்ற கருத்துக்களைப் பிரதிபலிக்கக் கூடிய கவிதை
A4 தாளில் 12 அளவிலான (font size 12) கணினியில் வரி இடைவெளி (Line spacing 1.5) 75-100 வரையானவரிகள்
1ஆம் பரிசு ரூ 30,000 2ஆம் பரிசு ரூ 20,000 3ஆம் பரிசு ரூ 10,000
- மரபுக் கவிதை மரபு வரம்பில் இருத்தல் வேண்டும்
- புதுக் கவிதையும் ஏற்றுக் கொள்ளப்படும்

அதிகளவு புதுக்கவிதை மற்றும் மரபுக் கவிதை போட்டியாளர்களால் அனுப்பப்படுமாயின் இரண்டு கவிதைகளுக்கும் தனித்தனி பரிசில்கள் வழங்கப்படும். ஒருவர் மரபுக்கவிதை அல்லது புதுக் கவிதை ஏதாவது ஒன்றினையே அனுப்பமுடியும்.

- சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டு அச்சுவடிவில் வெளிவந்த அல்லது பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த கதைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**02. வடமாகாண ரீதியிலான திறந்த போட்டிகள்** **முடிவுத் திகதி 31.12.2018**

➢ **நாடகப் போட்டி**

அ. சமூகநாடகம் ஆ. அரசநாடகம் இ. இசைநாடகம். (இவை வெவ்வேறாக கணிக்கப்படும் நாடகப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும்.
1ஆம் பரிசு ரூ 50,000 2ஆம் பரிசு ரூ 30,000 3ஆம் பரிசு ரூ 20,000

➢ **குறும்படம்**

சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய சமகால நிகழ்வுகளை பிரதிபலிப்பாக இருக்க வேண்டும். 20 நிமிடங்களுக்கும் 60 நிமிடங்களுக்கும் இடைபட்டதாக அமைதல் வேண்டும்.
1ஆம் பரிசு ரூ 100,000 2ஆம் பரிசு ரூ 50,000 3ஆம் பரிசு ரூ 30,000

➢ **புகைப்படப் போட்டி**

இயற்கை காட்சிகள், வறுமை, ஒற்றுமை இவற்றில் ஒன்றை பிரதிபலிப்பாக இருக்கவேண்டும்
1ஆம் பரிசு ரூ 20,000 2ஆம் பரிசு ரூ 10,000 3ஆம் பரிசு ரூ 5,000

**03. புலம்பெயர் உறவுகளுக்கிடையேயான ஓவியப்போட்டி முடிவுத் திகதி 31.12.2018**

சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய அண்மைக்காலப் பிரதிபலிப்பாக இருக்கவேண்டும்.
1ஆம் பரிசு ரூ 20,000 2ஆம் பரிசு ரூ 10,000 3ஆம் பரிசு ரூ 5,000

**04. வடமாகாண ரீதியான Super Singer Season 07**

**தொடர்புகளுக்கு :**

| | | |
|---|---|---|
| **செயலாளர்** | **வி . சுதாகர்** | **- 0777110972** |
| விளையாட்டு | திரு. ந. சுதேஸ்குமார். | - 0776176988 |
| கலை | திரு. கு. பிரதீபன் | - 0772367527 |
| தொடர்பாடல் | ஜெ . ஜசிந்தன் | - 0776544595 |


**நிர்வாகம்**
அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா

(CS/20174)(10)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்
# ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

| | | |
|---|---|---|
| வட்டாரம் | : | 01 |
| ஆதன இலக்கம் | : | உத்தேச ஆதன இல. 33/11 |
| வீதி | : | சாந்த அந்தோனியார் வீதி |
| கிராம சேவையாளர் பிரிவு | : | J/151 |

வட்டாரம் 01. சாந்த அந்தோனியார் வீதி. ஆதன இல.33/11. புவனேஸ்வரி சரவணமுத்து என்ற பெயரில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் மேற்கு தற்போது வலி தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகல் இறை "வவுலன்" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 02 குழி 09 கொண்ட இவ்வாதனம் 33/11. உவர்மலை. லோவர் வீதி. திருகோணமலை தியாகராசா அருளானந்தன் என்பவரால் அந்தோனியார் வீதி. மாதகலைச் சேர்ந்த வேதநாயகன் கேதீஸ்வரன் பெண் மகாதேவி ஆகிய இவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.இ.த. அன்ரன்பாலசிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 6530 ஆம் இலக்க 17.11.2017 ஆம் திகதிய உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்த ரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு A.சந்தியாப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 2215 இலக்க 12.11.2011 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "வவுலன்" நிலப்பரப்பு 5 குழி 1 இதில் அரைவாசி கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும். அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது வேதநாயகன் கேதீஸ்வரன் பெண் மகாதேவி எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடடிவக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த அதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகிறேன். அத்துடன் இவ் ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப் படுத்தல் உறுதியாகக் காணப்படுவதால் இவ் விளம்பரம் பத்திரிகை யில் பிரசுரிக்கப்படுகிறது





திரு.அ.ஜெபநேசன்
தவிசாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(cs.20172)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்
# ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

| | | |
|---|---|---|
| வட்டாரம் | : | 05 |
| ஆதன இலக்கம் | : | ஆதன இலக்கம் 78/ 9 |
| வீதி | : | சங்கக்கடை ஒழுங்கை |
| கிராம சேவையாளர் பிரிவு | : | J/151 |

எமது இடாப்பில் வட்டாரம் 05. சங்கக்கடை ஒழுங்கை. ஆதன இல.78/9 இல் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் மேற்கு பகுதி. தற்போது வலிகாமம் தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகல் இறை "ஆயிற்கலட்டி" எனும் பெயருள்ள பரப்பு நெல் இலா.06 உம் அதற்குரியவைகளும் இதில் தெற்குப் பக்கத்தில் தன்னிலத்து ஒழுங்கைக்கு விடப்பட்டது நீக்கி மிகுதி பரப்புநில இல.5 ¾ உம் அதற்குரியவைகளும் கொண்ட இவ்வாதனம் விபுலானந்தர் வீதி. மாதகல் ஐச் சேர்ந்த சுப்பிமணியம் மார்க்கண்டு என்பவரால் கனால் வீதி மாதகலச் சேர்ந்த சுப்பிரமணியம் இராமசாமி கைம்பெண் இராசம்மா அவர்களுக்கு நன்கொடை உறுதி மூலம் பிரசித்தநொத்தாரிஸ் திரு.வே.த.மு.கதிர்காம நாதன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 5827 ஆம் இலக்க 10.05.2004 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப் படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப் பதிவேட்டில் தமதுபெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள் ளனர்.நிலஅளவையாளர் திரு.A கந்தசாமி அவர்களால் வரையப்பட்ட 18.12.2018 ஆம் இலக்க 21.09.2018 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "ஆயிற்கலட்டி" நிலப்பரப்பு 03 குளி 9.91 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும். அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சுப்பிரமணி யம் இராமசாமி கைம்பெண் இராசம்மா எனும் பெருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகிறேன். உறுதியில் நெற்பரப்பாகக் காணப்பட்ட போதும் ஆதனப்பதிவேட்டில் இவ் ஆதனம் பதியப்பட்டுள்ளது. அத்துடன் இவ் ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்த லாக காணப்படுவதால் இவ் விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.





திரு. அ.ஜெபநேசன்
தவிசாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(cs.20172)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்
# ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

| | | |
|---|---|---|
| வட்டாரம் | : | 01 |
| ஆதன இலக்கம் | : | உத்தேச ஆதன இல. 33/1 |
| வீதி | : | சாந்த அந்தோனியார் வீதி |
| கிராம சேவையாளர் பிரிவு | : | J/151 |

எமது இடாப்பில் வட்டாரம் 01. சாந்த அந்தோனியார் வீதி. உத்தேச ஆதன இல.33/1. இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகல் இறை **"வவுலன்"** எனும் பெயருள்ள பரப்பு நில இலா.06 உம் கிணறும் வீடுகளும் அதற்குரியவைகளும் இதில் வடக்குப் புறமாக பர நில இலா.03 உம் வீடும் கிணறும் அதற்குரியவைகளும் கொண்ட இவ்வாதனம் மாதகல் கிழக்கு அந்தோனியார் வீதி ஐச்சேர்ந்த இராசா கந்தசாமியும் பெண் பரமேஸ்வரியும் ஆகியோரால் அவ்வுரைச் சேர்ந்த **நடராசா அருள்ராசா பெண் இராசேஸ்வரிக்கு** நன்கொடை உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.இ.த. அன்ரன்பாலசிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 3913 ஆம் இலக்கம் 29.04.2013 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையா ளர் திரு. (A) கந்தசாமி அவர்களால் வரையப்பட்ட 2018/1222 ஆம் இலக்க 27.09.2018 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதன மானது "வவுலன்" நிலப்பரப்பு 02 குளி 5.63 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக் குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும். அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **நடராசா அருள்ராசா பெண் இராசேஸ்வரிக்கு** எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகிறேன். அத்துடன் இவ் ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாக காணப்படுவதால் இவ் விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக் கப்படுகிறது.





திரு.அ.ஜெபநேசன்
தவிசாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(cs.20172)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்
# ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

| | | |
|---|---|---|
| வட்டாரம் | : | 09 |
| ஆதன இல | : | உத்தேச ஆதன இலக்கம் 73 |
| வீதி | : | கட்டுவன் வீதி |
| கிராம சேவையாளர் பிரிவு | : | J/153 |

எமது இடாப்பில் வட்டாரம் 09. கட்டுவன் வீதி. உத்தேச ஆதன இல.73 இல் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம். வலிகாமம் மேற்கு பகுதி. தற்போது வலிகாமம் தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பெரியவிளான் இறை "பள்ளஞ்சீமா" எனும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குழி 14.17. வீடு கொண்ட இவ்வாதனம் இளவாலை பெரிய விளான் ஐந்சேர்ந்த ஞானப்பிரகாசம் மேரிதிரேசா என்பவரால் அதேயிடத்தைச் சேர்ந்த யோசவ் சிறிஹறிகரனுக்கும் மனைவி அன்ரனிற் பொலீனுக்கும் அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திரு.இ.த அன்ரன் பாலசிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 5004 ஆம் இலக்க 22.03.2015 ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு கிராம உப அலுவலக (மாதகல்) ஆத னப்பதி வேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய் துள்ளனர். நில அளவையாளர் திரு. M. சண்முகநாதன் அவர்களால் வரையப்பட்ட 1390 ஆம் இலக்க 20.03.2015 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதனமானது "பள்ளஞ்சீமா" நிலப்பரப்பு 01 குளி 14.17 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும். அவ்வாறு உரிமை கோரா-தவிடத்து குறித்த ஆதனமானது **யோசவ் சிறிஹறிக ரனுக்கும் மனைவி அன்ரனிற் பொலீனுக்கும்** எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தரு கிறேன். அத்துடன் இவ் ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்த லாக காணப்படுவதால் இவ் விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.




திரு. அ.ஜெபநேசன்
தவிசாளர்,
வலி.தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

(cs.20172)


### பணிப்பெண் தேவை
யாழ். நகரில் உள்ள சிறிய வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணி புரிவதற்கு பணிப்பாளர் ஒருவர் தேவை.
**075 039 0457, 077 262 6944**

### அலுவலக உதவியாளர் தேவை
பலாலி றோட்டில். இலுப்பையடிச் சந்தியில் அமைந்துள்ள அலுவலகம் ஒன்றிற்கு 18 -32 வயதிற்கு உட்பட்ட பெண் உதவியாளர் தேவை.
**கல்வித்தகைமை:** தரம் - 10 இல் கல்வி கற்றிருத்தல் போதுமானது.
**077 746 2889**

### வேலையாள் தேவை
யாழ்ப்பாணத்திலுள்ள
**வாகன சுத்திகரிப்பு நிலையத்துக்கு**
முன் அனுபவமுள்ள
வேலையாள்கள் தேவை
**077 776 3533**

### வீடு வாடகைக்குண்டு
இல.44/2, செங்குந்தா வீதி,
திருநெல்வேலியில் அமைந்துள்ள
அனைத்து வசதிகளுடன் கூடிய வீடு
வாடகைக்குண்டு.
**077 046 1396**

### காணி விற்பனைக்கு
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரியில் 6¾ பரப்புக்
காணி விற்பனைக்கு
**077 958 1741**

### விற்பனைக்கு
CD 200 HONDA 83 சிறி XXXX, KARISHMA Hero, லிஸ்டர் ஜெனரேட்டர் (12 KV), CAKE தயாரிக்கும் மெசின் 20 L என்பன விற்பனைக்குண்டு.
077 267 2888

### காணி விற்பனைக்கு
சாவகச்சேரி தபாற்கந்தோர்
வீதியில் 5 பரப்புக்காணி
விற்பனைக்குண்டு.
**077 958 1741**

### பந்தல் விற்பனைக்கு
**100 அடி சொக்கட்டான் பந்தல்** மற்றும்
**மணவறைகள்** விற்பனைக்குண்டு.
077 367 8019 **இளவாலை**

### கணக்களார் தேவை
யாழ்ப்பாணத்திலுள்ள
**வர்த்தக நிலையமொன்றுக்கு** முன்
அனுபவமுள்ள **கணக்காளர்**
ஒருவர் தேவை
**077 776 3533**

### மணமகன் தேவை
வடமராட்சிப் பிரிவு உடுப்பிட்டி வடக்கு 1973 இல் பிறந்த பட்டதாரி ஆசிரியை உத்தர நட்சத்திரம் 1 ஆம் பாதம், செவ்வாய், குற்றம் இல்லை பாவ கிரகம் 22½ உள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. அரச, தனியார் உத்தியோகத்தர் கடை முதலாளி, சொந்த ஆட்டோகாரன் விரும்பத்தக்கது. விவாகரத்துப் பெற்றவர், தாரம் இழந்தவர், முடித்து விட்டவர் வேண்டாம்.
077 485 0363

### வேலையாள்கள் தேவை
01. உப ஒப்பந்தகாரர் (சப் கொன்றாக்ரர்ஸ்)
02. மேசன் 1500.00
03. உதவியாளர் 1200.00
04. வயரிங் 1300.00
(அனுபவமுள்ளவர்)
தொடர்புகளுக்கு: **075 918 3940**
காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை மட்டும்.

விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111
உதயன்


## உதவிக் குருக்கள் தேவை

கொழும்பு, ஜிந்துப்பிட்டி
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்திற்கு

**பிராமண உதவிக் குருக்கள்**

தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தங்குவதற்கு வீடு வசதி செய்து கொடுக்கப்படும்.

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி

98, ஜிந்துப்பிட்டி வீதி, கொழும்பு-13.
Phone: 011 2433881 / 011 2431406 / 0777 261 777 / 0722 447606
Email : muruganginthupitiya@gmail.com


**வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்.**
**2018/2019 ஆம் ஆண்டுக்கான காவற்கடமை சேவைக்கான பகிரங்க கூறுவிலை கோரல்**

தலைவர், பெறுகைக்குழு அவர்களினால் வலிகாமம் மேற்கு பிரதேச-சபையில் 2018/2019 ஆண்டுக்கான அராலி திண்மக்கழிவு தரம் பிரிக்கும் நிலையத்திற்கு 24 மணித்தியால காவற்கடமை ( பாதுகாப்புக் கடமை ) சேவை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறிக்கப்பட்ட கூறு விலைப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1) சேவை வழங்குநர்கள் காவற்கடமை சேவை வழங்கலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவே அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 03 ஆண்டுகள் இச்சேவையை வழங்கிய மைக்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2) சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ் மாவட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
3) சேவை வழங்குநர்கள் கூறுவிலை ஆவணங்களை வலிகாமம் மேற்கு பிரதேசபை. சுழிபுரத்தில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் 01.10.2018 - 09.10.2018 ம் திகதிவரை அலுவலக நாட்களில் மு.ப 9.00மணி முதல் பி.ப 3.00 மணி வரை மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் ரூ.1000.00-ஐ செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
4) கூறுவிலை ஆவணங்கள் 10.10.2018ம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ உரிய பெட்டியில் இடலாம். அல்லது "தவிசாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை சுழிபுரம்" என்ற பெயருக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும். குறித்த நேரத்திற்கு பின்னர் கிடைக்கும் கூறுவிலைகள் யாவும் நிராகரிக்கப்படும்.
5) கிடைக்கப்பெற்ற கூறுவிலைகள் யாவும் 10.10.2018 ம் திகதி பி.ப 2.30 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.
6) கிடைக்கப்பெற்ற கூறுவிலைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் கூறுவிலையினை கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு

த.நடனேந்திரன் தவிசாளர்
வலிகாமம் மேற்கு பிரதேசசபை சுழிபுரம்.

## மரண அறிவித்தல்

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08.09.1955 | 28.09.2018 |



### திருமதி இந்திராணி பரமதேவன்

சாவகச்சேரி, பெருங்குளம் சந்தியை பிறப்பிடமாகவும், கல்வியங்காடு இராச வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி பரமதேவன் நேற்று (28.09.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் மாணிக்கம் தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும் காலஞ்சென்ற நாகலிங்கம் நாகம்மா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற பரமதேவனின் அன்புமனைவியும் வாசுகி, சயந்தன் (பிரான்ஸ்), கபிலன் ஆகியோரின் அன்புத்தாயும் ரூபஜெயந்தனின் (ராஜா) அன்பு மாமியும் திருச்செல்வம், சத்துருசங்காரம் (செவ்வந்தி பன்சி), தவச்செல்வம் (செல்வம் கூல் பார்), இரத்தினசபாபதி, யோகநாயகி, பத்மநாதன், சண்முகநாதன் காலஞ்சென்ற மதிவதனி, ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற அருந்தவநாயகி மற்றும் தையல்நாயகி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் அபிலாஸ், யஸ்மிதா ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் பரமேஸ்வரி காலஞ்சென்ற துரைராசா மற்றும் கணேஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் மகேஸ்வரி (இந்தியா), சற்குணநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.09.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராச வீதி,**
**முருகன் கோயில் முன் ஒழுங்கை,**
**கல்வியங்காடு.**

**தகவல் : குடும்பத்தினர்.**
**077 641 2807 (ராஜா),**
**077 446 9365 (கபிலன்)**

## நெஞ்சை விட்டகலா நினைவுடன் பத்தாம் (10) ஆண்டு அஞ்சலி



### அமரர் க.விக்னராஜேஸ்வரன்

(BSc, B.ED, ISA (MATHS) SLPS)
(நிக்க வெரட்டிய. கல்விவலயம்)
திதி: அமாவாசை (08.10.2018)

| தாயின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 12.04.1961 | 29.09.2008 |

அன்பின் திரு உருவாய் பாசத்தின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் கணிதத்தில் கனியாய்
மண்ணில் நல்வைண்ணம் வாழவழிகாட்டி
எண்ணியது முடியமுன்னே கண்மூடித்திறக்கமுன்
கணப்பொழுதில் விண்ணிற்குச் சென்றதேனோ
காலனின் விளையாட்டால் கதி கலங்கி நிற்கின்றோம்
வடிவாம்பிகை சமேதர முன்னைநாதப் பெருமானே
அருள் கூர்ந்து விடைதாருமையா
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்
*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

**பன்னாலை,**
**தெல்லிப்பழை.**

என்றும் நீங்கா நினைவுடன்
ஆருயிர் மனைவி,
குடும்பத்தினர்,
3 ஆம் வட்டாரம், நயினாதீவு.

## மரண அறிவித்தல்

### திருமதி பொன்னு வள்ளியம்மை



கரம்பன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னு வள்ளியம்மை நேற்று (28.09.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா சின்னாச்சி தம்பதியரின் செல்வப்புதல்வியும் காலஞ்சென்ற பொன்னுவின் அன்புமனைவியும் நேச ரத்தினம், அரியமலர், அரியரட்ணம் (கனடா) காலஞ்சென்ற அழகரத்தினம் மற்றும் சிவகுமார் (பிரதேச செயலாளர் சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம், ஜோச்ப்விக்ரர் மற்றும் ஜெயந்தி (கனடா), மாலினி (கனடா), ராதிகா ஆகியோரின் அன்புமாமியும் ஹிரமணன் (வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி), ஸ்ரீராகுலன் (பிரான்ஸ்), கொன்சி (நோர்வே), துஸ்யந்தி (கனடா), ஜொய்லின், டெமிசன் (நோர்வே), சயந்தன் (கனடா), சயந்தி (பிரான்ஸ்), நிரோஜன் (பிரான்ஸ்), நிரோசி, திருமாறன் (கனடா), நிவேதன் (கனடா), சஞ்சீவன் (கனடா), தினோஜனா, தினோஜன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.09.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரது கரம்பகம் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கரம்பகம் வேதக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**கரம்பகம், மிருசுவில்.**
**076 397 1622, 077 7955 190**

# கொண்டலாத்தி பறவைகள்



## இயற்கையின் அரவணைப்புடைய உயிரினத் தனிமங்கள்

பாலகுமாரன்

**அனுபவம்**

பறவைகளைப்பற்றிய ஆய்வும், குறிப்புச் சேகரித்தலும் சுமேரிய நாகரீக காலத்தில் கி.மு 3500 ஆம் ஆண்டுகளில் தொடங்கியது என்கிறார் 'சார்ஜன்ட் ஜோனாதன் டிரஷன் டிரண்ட்'. இவர் அமெரிக்க இராணுவ வீரர். சதாம் குசைனுக்கு எதிரான அமெரிக்கப் போரில் ஈராக்கிற்கு சென்றவர். போர்க்காலத்திலும் அரேபியப் பறவைகளைப்பற்றிய குறிப்புகளைச் சேகரித்துக் கட்டுரைகள் எழுதி தன் மனப்பதட்டத்தைக் குறைத்துக் கொண்டதாகக் கூறுகிறார். சதாம் குசைன் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை அபகரித்து அங்குள்ள ஈச்ச மரங்களையும் ஏனைய மரங்களையும் அழித்த போது அங்கிருந்த 42 வகையினத்தைச் சார்ந்த 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பறவைகள் இடம்பெயர்ந்தன.

தவிர அங்கு பறவைகளை நாட்டு மருத்துவர்கள் எவ்வாறு மருந்து தயாரிக்கப் பயன்படுத்துவர் என்பதையும் சுவைபட விவரிக்கிறார். அங்கு கொண்டலாத்தி பறவைகளைப் பிடித்து அதன் தசை, எலும்புகளிலிருந்து ஆண்மை விருத்தி லேகியம், ஆண் உறுப்பின் நீடித்த விறைப்புத் தன்மைக்கான எண்ணெய் போன்றவை தயாரிக்கப்படுவதைத்தான் பார்த்ததாகவும், அதற்காகப் பல பறவைகள் கொல்லப்பட்டதாகவும் தனது அனுபவக் குறிப்பில் வெளிப்படுத்தியுள்ளார்.

**இயல்பும் இருப்பும்**

கொண்டலாத்திகள் மண் கொத்திகள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவை நடுத்தர அளவிலானவை. 25 தொடக்கம் 35 சென்ரி மீற்றர் அளவுடையவை. இறகுகளை விரிக்கும் போது 45 தொடக்கம் 50 சென்ரி மீற்றர் நீளம் கொண்டவை. நன்கு வளர்ச்சியடைந்த பறவையின் நிறை அரைக் கிலோ மட்டுமே.இவை மிகுந்த கூச்ச சுபாவமும், படபடப்பு தன்மையும் கொண்டவை. கும்பலாக வாழ்ந்தாலும் ஒற்றுமையாக வாழ்வதில்லை. அடர்ந்த மரங்கள் ,குளம், ஓடை அல்லது நீர் உள்ள இடங்களையே தமது இருப்பிடமாகத் தேர்ந்தெடுக்கின்றன. இதன் தலையில் அமையப்பெற்ற கொண்டையாலேயே இவற்றுக்கு இப்பெயர் வந்ததோ என வியக்கும் அளவுக்கு அழகிய கொண்டைகளை உடையவை.

**உணவு**

தங்களுடைய வலிய வளைந்த அலகுகளைக் கொண்டு மண்ணைப் பிளந்து நண்டு, புழு, பூச்சியினங்களைப் பிடித்து உண்கின்றன.இந்தச் செயல்நிலையின் போது கொத்துவதற்கு ஏதுவாக இக் கொண்டைகள் உதவிபுரிகின்றன. வயல்வெளிகள், தோட்டங்களில் உள்ள பூச்சிகள், கூட்டுப்புழுக்கள், முட்டைகளை அழித்து விடுவதால் இவை விவசாயிகளின் உற்ற நண்பன் என்றும் அழைக்கப்படுகின்றன.

**இனப்பெருக்கம்**

வண்ணக் கலப்பும், இறகு அமைப்புகளும் பார்ப்பதற்கு வெளிநாட்டுப்பறவைகளின் தோற்றத்தைத் தருகின்றன.ஏனைய பறவைகளைப் போலவே இதன் காதல் லீலைகள் இருக்கும். காதல் கொள்கின்ற காலங்களில் மட்டுமே ஆண்களும் பெண்களும் இணைந்திருக்கும். இது தற்காலிக உடன்படிக்கையே. மரப்பொந்து, சுவற்றில் காணப்படும் ஓட்டைகள் அல்லது பிற பறவைகளின் கூடுகளை ஆக்கிரமித்து அதில் 4 தொடக்கம் 5 வரையான வெளிர் நீல நிற முட்டைகளை இடுகின்றன.

18 நாள்களில் அவை பொரிந்துவிடும். குஞ்சுகள் ஒரு மாதத்தில் தாங்களாகவே இரை தேடத் தொடங்குகின்றன. அதுவரை அவை தாய், தந்தையரின் பராமரிப்பில் இருக்கின்றன.குஞ்சுகள் உள்ள கூடுகள் துர்மணத்தைக் கொண்டிருக்கும். பெண் குருவியின் கழுத்தருகே உள்ள ஒரு சுரப்பியிலிருந்து வெளிவரும் திரவமே இந்த அழுகிய அருவருப்பான வாசனைக்குக் காரணம். இது எதிரிகளிடமிருந்து தன்னையும், குஞ்சுகளையும் காத்துக் கொள்ளும் ஒரு உத்தியே என்கின்றனர் ஆய்வாளர்கள். தவிர துர்நாற்றம் வீசும் பல பொருள்களையும் கொண்டுவந்து கூட்டுக்குள் அடைத்து வைக்கின்றன. இதனால் குஞ்சுகளுக்கோ பறவைகளுக்கோ எந்த வித தொற்றோ வியாதிகளோ ஏற்படுவதில்லை.

**இலக்கியச் சிறப்பு**

இத்தகு தன்மைகளை உடைய அழகிய இப்பறவை பண்டைய எகிப்திய இலக்கியங்களில் ஒரு கதாபாத்திரமாகவே சித்தரிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேல் நாடு தனது தேசியப் பறவையாக அங்கீகரித்துக் கௌரவித்துள்ளது. சிற்றிலக்கி யங்களை எடுத்து நோக்கின் குற்றாலக் குறவஞ்சியில் வேட்டைக்காரனான சிங்கனும், சிங்கியும் இப்பறவை குறித்த கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதை அவதானிக்கலாம். இன்னும் பல ஆரம்பகால மற்றும் உலக இலக்கியங்களிலும் இவை வேறு பெயர்களில் சித்தரிக்கப்பட்டி ருக்கின்றன.

ஐ.நா.வின் பறவைகள் ஆய்வு நிறுவனம் ஆசிய அளவில் அழிந்து வரும் பறவையினமாக இவற்றைப் பட்டியலிட்டுள்ளது. அந்தவகையிலே மரங்கொத்தி இனம் சார்ந்த இப் பறவைகளை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என பறவையியலாளர்கள் கருத்துரைத்துள்ளனர்.

**தனித்துவமும் அழிவு நிலையும்**

இதையும் மீறி எதிரிகள் நுழைய முற்படும் போது குஞ்சுகளே அண்ணளவாக 18 விதமான குரலோசைகளை எழுப்புகின்றன. இவை கேட்பதற்கு நாராசமாகவும், பயமாகவும் இருக்கும். செர்ரி, பிளம்ஸ் போன்ற இனிப்பும் புளிப்பும் கலந்த பழங்களை விரும்பி உண்ணுகின்றன. ஆணே தலைமை தாங்கும்.

பெண்ணை அடையும் முயற்சியில் இரு ஆணிற்கிடையே ஏற்படும் சண்டையில் அவற்றுள் ஏதாவது ஒன்று மரணிக்கும்.

அலகால் ஒன்றையொன்று குத்திக் கொள்வதால் மரணம் நிகழ்கிறது. பெண்கள் பிற குஞ்சு களைக் கொல்வதும் உண்டு. இதுவே இதன் இனப்பெருக்கக் குறைவுக்குக் காரணம். மேலும் கூட்டில் சேமித்து வைக்கப்படும் உணவை எடுப்பதற்கு வரும் இவ்வினத்தின் பிற பறவைகளாலேயே குஞ்சுகளும், தாயும் கொலை செய்யப்படுவதும் உண்டு எனவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். பல்வேறு குரல் பாவங்களை உருவாக்கும் இவை எப்படியாயினும் மூன்று முறை என்ற அளவீட்டிலேயே இருக்கும். குரலிசை மாறுபாடு தான் சந்திக்கும் சூழலின் தன்மையைப் பிரதிபலிப்பதாக இருக்கும். உதாரணமாகக் கூட்டில் அடைகாத்துக் கொண்டிருக்கும் பெண்ணைப் பிற ஆண் சந்திக்கும் போது பெண் "க்ரீச்...க்ரீச்...க்ரீச்" எனத் தனது இறகுகளைப் படபடவென அடித்து ஒலி எழுப்பும்.

**சூழல் இயைபாக்கம்**

தனது உடலை சூரிய ஒளியில் சூடேற்றிக் கொள்ளும் போது முழு இறகுகளையும் விரித்து உறங்கும். இது பிற பறவைகளுக்கு உதாரணமாக கொக்கு, காக்கை போன்றவற்றுக்கு விநோதமாக தெரிவதால் அவை இவற்றின் அருகாக வர அஞ்சுகின்றன. விருட்டென்று அதிக வேகத்துடன் பறக்கும் கொண்டலாத்திகள் பருவ நிலை மாற்றத்தின்போது கண்டம் விட்டுக் கண்டம் கூட செல்லும் என உறுதியாக்க் கூற முடியாவிட்டாலும் மிக அதிக உயரத்தில் பறக்கும் இயல்பு கொண்டவை என்கிறார் 'டிரண்ட்'. இவை உயரத்தில் பறக்கும் போது வல்லூறுகள் போல் இறகுகளை அசைக்காமல் விரித்த வாறே சில நிமிடங்கள் ஓய்வெடுக்கின்றன. தவிர பறக்கும் போதே தூங்கிக் கொள்வதும் உண்டு.

---

## அடுத்த...

மாகாண சபையை நடத்தவேண்டும் என்று தெரிவித்தார் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஸ்ணன்.

கரவெட்டி சிறிநாரதா வித்தியாலயப் பொன்விழா நேற்றுப் பாடசாலை அதிபர் ச.கபேந்திரன் தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபை தற்போதும் செயற்படுகின்றது. எதிர்காலத்தில் வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் அதிகரிக்கப்படவேண்டும். அதிகாரங்களும் அதிகரிக்கப்படவேண்டும். எதிர்காலத்தில் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் ஒன்றுபட்ட - ஒருமித்த சபையை உருவாக்கவேண்டும். ஒன்றுபட்ட சபையின் ஊடாக 13ஆவது திருத்தச் சட்டத்தை மேலும் முன்கொண்டு செல்ல முயலவேண்டும். ஒன்றுபட்ட சபையின் ஊடாகவே அதை மேற்கொள்ள முடியும்.

50 ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கள, தமிழ் பௌத்த பாடசாலையாக இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. காலப்போக்கில் தமிழ்ப் பாடசாலையாக மாறி இந்தக் கிராமத்துக்குச் சேவை செய்கின்றது. தற்போது மாணவர்கள் நகர்ப்புறப் பாடசாலைகளை நாடுகின்றனர். அதனால் கிராமப்புறப் பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைவதால் எதிர்காலத்தில் பாடசாலைகளை மூட வேண்டிய நிலமை ஏற்படும்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் சனத்தொகை 15 இலட்சமாக இருக்க வேண்டும். ஆனால் 8 லட்சம் பேர் மட்டுமே உள்ளனர். மக்கள் தொகையும் குறைவவடைகின்றது. தற்போது ஒரு குடும்பத்தில் இரு குழந்தைகளே உள்ளனர். அதனாலும் பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை குறைகின்றது - என்றார்.

நிகழ்வில் யாழ்ப்பாணம் சிறிநாகவிகாரை விகாராபதி வண கலைமாணி மீக ஹஜந்துரே சிறி விமலதேரர், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட்குரே, வடக்கு மகாணசபை உறுப்பினர்களான வே.சிவயோகன், க.தர்மலிங்கம், வித்தியாலய நிறுவுநரும் முதல் அதிபராகிய கே.இராஜரட்னம், தமிழ் சிங்கள பௌத்த அமைப்பின் தலைவர் சுமதிபால எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-173)

## மணிவண்ணனின்...

வசிக்காத ஒருவர் உறுப்பினராக தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டமை உள்ளூராட்சி தேர்தல் விதியை மீறும் செயல் என்று குறிப்பிட்டு மேன்முறையீட்டு நீதிமன்றில் மணிவண்ணனுக்கு எதிராக மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு கடந்த மாதம் 3ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, மணிவண்ணன் வழக்கு முடியும் வரையில் சபை அமர்வுகளில் பங்கேற்பதற்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டது. வழக்கு நேற்று மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

தேர்தல்கள் திணைக்களம் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபையினர் நேற்றைய தினம் வழக்கில் முன்னிலையாகவில்லை. அவர்களுக்கு அறிவித்தல் அனுப்ப நீதிமன்றம் பணித்தது. மேலும், மணிவண்ணன் தரப்புச் சட்டத்தரணிகள் ஆட்சேபனை தாக்கல் செய்வதற்கு திகதிகளை அறிவித்த மன்று வழக்கை விசாரிப்பதற்கு ஜனவரி மாதத்துக்கு ஒத்தி வைத்துள்ளது. (5.105)

## தமிழ்...

தலைவர் ஏ.எம்.புத்ததாச தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றபோதே மேற்படி அமளி துமளி ஏற்பட்டது.

ஊவா மாகாண சபை அமர்வு நிகழ்ச்சி நிரலில் சபை உறுப்பினர் எம்.சச்சிதானந்தனினால் முன்வைக்கப்பட்ட தீர்மான வரைவு சிங்கள மொழியில் சரியானதாகவும் தமிழ் மொழியில் பிழையாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. தமிழ் மொழியில் வழங்கப்பட்ட நிகழ்ச்சி நிரலைப் பார்த்து, தீர்மான வரைவை முன்வைக்கும் போது தம்மால் முன்வைக்கப்பட்ட தீர்மான வரைவு இதுவல்ல என்று சபை உறுப்பினர் எம். சச்சிதானந்தன் கூறியதுடன், சிங்கள மொழியிலான நிகழ்ச்சி நிரலில் தமது தீர்மான வரைவு சரியாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தமிழ்மொழித் தீர்மான வரைவு நிகழ்ச்சி நிரலில் எவ்வகையில் பிழை ஏற்பட்டது எனவும் சபை உறுப்பினர் எம். சச்சிதானந்தன் வினா எழுப்பினார்.

சபைத்தலைவர் ஏ.எம்.புத்ததாச, தீர்மான வரைவு நிகழ்ச்சி நிரலில் தமிழ் மொழி பெயர்ப்பில் பிழை ஏற்பட்டிருப்பது உண்மைதான். சபைச் செயலர் அலுவலகத்தினால் இந்தப் பிழை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது போன்ற பிழைகள் இனிமேல் ஏற்பட எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது. அதனைப் பொருட்படுத்த வேண்டாம். தங்களிடமிருக்கும் தீர்மான வரைவின் பிரதியின் மூலம் தெளிவுப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன், என்றார்.

இதையடுத்து சபை உறுப்பினர் எம்.சச்சிதானந்தன் தமதுரையினை தமிழ் மொழியில் ஆற்றமுற்பட்டார். இதன்போது சபைஉறுப்பினர் திஸ்ஸ குட்டியாராய்ச்சி எழுந்து தமது மேசையில் மொழி பெயர்ப்பு ஒலிவாங்கி பொறுத்தப்படாமலிருப்பதால் தமிழில் உரையாற்றுவது எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையினால்அவ்உறுப்பினரைசிங்கமொழியில்உரையாற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தமிழ் மொழியினாலான உரையை எம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனால் தமிழ் மொழியில் உரையாற்றுவதை தவிர்க்கவும், என்றார்.

எம்.சச்சிதானந்தன், 13ஆவது திருத்தச் சட்டப் பிரகாரம் தமிழ் மொழியில் எம்மால் தீர்மான வரைவு சமர்ப்பிக்க முடியும். இதற்கு எவராலும் எதிர்ப்பு தெரிவிக்க முடியாது. கடந்த மூன்றரை வருடகாலமாக இது போன்ற நிலை தொடர்ந்த வண்ணமுள்ளது. தமிழ் உறுப்பினர்கள் இது விடயத்தில் எதிர்ப்பு தெரிவிக்கும் போது எமக்கு பட்டர் பூசப்படுகின்றது. எமக்கு கற்பித்து கொடுக்க முன்வரவேண்டாம். எம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இந்தச் சபையில் தீர்மான வரைவாகக் கொண்டு வந்து அவற்றினை நிவர்த்தி செய்ய வேண்டியது எமது கடமை. எமக்கு ஏற்படுகின்ற புறக்கணிப்பினால் இந்தச் சபையின் நிர்வாகக் குழு உறுப்பினர் பதவியிலிருந்தும் விலகுகின்றேன் என்று கூறினார்.

இதனையடுத்து சபை அமர்வில் குழப்பம் ஏற்பட்டு சில மணித்தியாலங்கள் சபை ஒத்திவைக்கப்பட்டது. (5)

## அரசியல்...

வாடும் தம்மை குறுகிய கால மறுவாழ்வு வழங்கியாவது விடுவிக்குமாறு கோரி தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 14ஆம்'திகதி உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 8 கைதிகள் மாத்திரமே போராட்டத்தில் ஈடுபட்டனர். மகசின் சிறைச்சாலையிலிருந்து வழக்குக்காக அநுராதபுரம் கொண்டு வரப்பட்ட 2 கைதிகளும் அவர்களுடன் இணைந்து போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

முன்னரும் பல தடவைகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தமையால் அவர்களது உடல் நிலை மிகப் பலவீனமாக இருப்பதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அரசியல் கைதிகளுக்குச் சேலைனும், மருத்துவமும் வழங்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் நேற்றுக் காலையிலிருந்து மருத்துவ உதவிகளையும், சேலைனையும் பெற்றுக் கொள்வதையும் அவர்கள் தவிர்த்துள்ளனர். அவர்களது உடல் நிலை மோசமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5)


### பெயர் மாற்றம்

நீலன் தர்மலிங்கம் ஆகிய நான் 27.09.2018 முதல் எனது பெயரை **சிவலிங்கம்** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் சிவலிங்கம் என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச ஜனநாயக குடியரசிற்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன். **சிவலிங்கம்.**

### வயற்காணியும் தோட்டக்காணியும் விற்பனைக்கு

வடமராட்சி கிழக்கு, குடத்தனைச் சந்திக்கு அருகில் குடத்தனை வயல், குடத்தனைக் காடு என்னும் நிலப்பரப்பில் 10 ஏக்கர் காணி உடன் விற்பனைக்கு உண்டு. **தொடர்பு :**

**077 956 1525, 021 226 3130, 077 193 0232**

### ஊடகத்துறைச் சான்றிதழ் பயிற்சிநெறி

**இலங்கை ஊடகவியல் கல்லூரியின் சான்றிதழ்**

- வெகுசன ஊடகத்துறையில் பிரகாசிக்க
- வானொலி, தொலைக்காட்சியில் தொகுப்பாளராக, அறிவிப்பாளராக வலம் வர
- ஊடகவியலாளராக வலம் வர
- குறும்பட இயக்குனராவதற்கு
- நவீன ஊடகத்துறையில் மிளிர்வதற்கு






**வீடியோ, ஓடியோ எடிட்டிங், டிசைன் & லேஅவுட், வீடியோ, டிஜிட்டல் கமராக்களை நீங்களே கையாளலாம்.**

- ஆங்கிலம், சிங்களம் கற்கலாம்
- 100% தொழில்சார் களப்பணிப் பயிற்சிகள்

**விரிவுரைகள், பயிற்சிகள்:** வார, வார இறுதி நாட்களில்

info@slcj.lk
jaffnamediastudies27@gmail.com

**அனுமதிகளுக்கு முந்துங்கள்**

விண்ணப்ப முடிவுத் திகதி **10ம் திகதி ஒக்டோபர் 2018**

MRI Media and Research Institute Jaffna — SRI LANKA COLLEGE OF JOURNALISM


27, புகையிரத நிலைய வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் 077 488 9228
96, கிருல வீதி, கொழும்பு 05 071 764 0015


### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்

### ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்.

| | |
|---|---|
| வட்டாரம் | :05 |
| ஆதன இல | :64/1 |
| வீதி | :ஞான வைரவர் கோவில் ஒழுங்கை |
| கிராம சேவையாளர் பிரிவு | :J/151 |

எமது இடாப்பில் வட்டாரம் 05, ஞானவைரவர் கோவில் ஒழுங்கை, ஆதன இல. 64/1 உ.கோ. அந்தோனிப்பிள்ளை எனும் பெயரில் இவ் ஆதனம் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் தென்மேற்கு பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று மாதகலிறை"செம்பிளாச்சி"எனும்பெயருள்ளநிலப்பரப்பு11/2கொண்ட இவ்வாதனம் மாதகலை கோணாவளையைச் சேர்ந்த தம்பிராசா முருகையா ஆகிய இவர்களால் மாதகலை விபுலானந்தர் வீதி, மாதகலைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை இசிதோர் ஆகிய இவருக்கு திரு. இ.த. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 6129ஆம்இலக்க27.01.2017ஆம்திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம்எனத்தெரியப்படுத்திஎமதுபண்டத்தரிப்புகிராமஉபஅலுவலக (மாதகல்) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு. A. சந்தியாப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 2915 ஆம் இலக்க 17.07.2018 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "செம்பிளாச்சி" நிலப்பரப்பு 1 1/2 கொண்ட குறித்த ஆதனத்தின்பெயர்மாற்றம்தொடர்பாகஆட்சேபனைதெரிவிப்பவர்கள் யாராவதுஇருப்பின்உரியஆவணங்களுடன்பிரசுரித்ததிகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அந்தோனிப்பிள்ளை இசிதோர் எனும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன். அத்துடன் இவ் ஆதனத்தின் ஆரம்ப உறுதி வெளிப்படுத்தலாக காணப்படுவதால் இவ் விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகிறது.




**திரு. அ.ஜெபநேசன்**
**தவிசாளர், தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**


**ராசி** அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 28.09.2018 | 2373 | சிவப்பு |

சிம்மம் — வெற்றி இலக்கங்கள்: 34 43 50 60

ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 12, 041, 872/=

2018.09.30ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824834 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**கோடிபதி சனிதா** KOTIPATHI SHANIDA

சீட்டிழுப்பு வாரம்: 347
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.09.28
அடுத்த ஞாயிற்றுக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 96,176,388/-
N 13 15 61 78
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 387
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2018.09.28
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 55,249,140/-
வெற்றி இலக்கங்கள்: 39 51 60 62 — ஆங்கில எழுத்து: S
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>AK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**நியத்த ஜய** Niyatha Jaya

சீட்டிழுப்பு வாரம் : 706
வர்ணம் : நீலம்
திகதி : 2018.09.28
வெற்றி இலக்கங்கள்: 50 52 53 63 — ஆங்கில எழுத்து: D
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 15,906,812/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>NJ என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

**SUPER BALL**

சீட்டிழுப்பு வாரம் 861
சீட்டிழுப்பு திகதி 2018.09.27 வியாழக்கிழமை
K 07 12 19 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,515,020/-
நீல நிற டிக்கட்டுகள் 2018.09.29ம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்


## மரண அறிவித்தல்

பிறப்பு 02 04 1950 — இறப்பு 28 09 2018



### பஞ்சாட்சரம் பிறேமச்சந்திரன்

**(அலங்கார் ஆடையகம் - நவீன சந்தை, யாழ்ப்பாணம்)**

கெக்கிராவையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொழும்பு கல்கிசையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரம் பிறேமச்சந்திரன் கடந்த 28.09.2018 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார். அன்னார், காலஞ்சென்ற பஞ்சாட்சரம் - பார்வதவர்த்தினி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற நவரத்தினம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவராணியின் அன்புக் கணவரும், ஜதுர்ஷன், கிரிசாந்தன், பிரியகீதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் றெபேக்காவின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற அனலிஸ் மற்றும் றைமன் ஆகியோரின் சம்பந்தியும், ரஞ்சிதாதேவி மற்றும் காலஞ்சென்றவர்களான பவளகாந்தன், தனலட்சுமி, சுலோசனா, ஆகியோரின் அன்புச் சகோதரரும், குருராஜரட்ணம், புஸ்பராணி, தேவராசா, தேவநாதன், தேவகி மற்றும் காலஞ்சென்ற தேவா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், தேவமணி, ஞானஜோதி, சிறிரஞ்சன் ஆகியோரின் சகலனும் காலஞ்சென்ற சுரேஸ்குமார், மற்றும் சுரேஜினி, சுபாஜினி, ரமேஸ், சதீஸ்குமார், யமுனா ஆகியோரின் பாசமிகு அன்பு மாமனாரும், கிருஸ்ணகாந்தன், தர்மினி, ரமணகாந்தன் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையாரும் ஆவார். அன்னாரின் திருவுடல் 29.09.2018 சனிக்கிழமை அன்று கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் மு.ப 09.00 மணிமுதல் இரவு 09.00 மணி வரையும், 30.09.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப.09.00 மணிமுதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பி.ப 03.30 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பின்னர் தகனம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:** குடும்பத்தினர்

**தொடர்பு:** 077 005 2425 / 077 943 50 54 / 011 271 09 04

## அரசியல் கைதிகளின்...

யாழ்ப்பாணம் நகரப் பேருந்து நிலையம் முன்பாக நடத்தப்படவுள்ள இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை யாழ்ப்பாணம் மாவட்ட வெகுஜன அமைப்புக்களும், அரசியல் கட்சிகளும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

கடந்த வியாழக்கிழமை கொக்குவிலில் உள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் மண்டபத்தில் நடந்த யாழ்ப்பாண மாவட்ட வெகுஜன அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்கிடையான சந்திப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், சமூக விஞ்ஞான ஆய்வு மையம், புதிய அதிபர்கள் சங்கம் ஆகிய அமைப்புக்களினதும், புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய அரசியல் கட்சிகளினதும் உறுப்பினர்கள் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ் மக்கள் அனைவரும் கலந்து கொண்டு அரசியல் கைதிகளின் விடுதலைக்காகக் கைகோர்க்கவேண்டும் என்று அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது.

**மாத்தளை**

உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளையும், நீண்டகாலமாகச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று நாளை ஞாயிற்றுக்கிழமை மாத்தளையில் கவன்வீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. சமூக நீதிக்கான மலையக வெகுஜன அமைப்பு இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது.

**கிளிநொச்சி**

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கிளிநொச்சியில் நாளைமறுதினம் திங்கட்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் ஏற்பாட்டில் கிளிநொச்சி டிப்போச் சந்திக்கு அண்மையில் காலை 9 மணிக்கு கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**வவுனியா**

அரசியல் கைதிகளின் விடுவிப்பை வலியுறுத்தி எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை வவுனியாவில் உணவு ஒறுப் புப் போராட்டம் நடத்தப்படும் என்று வவுனியா மாவட்ட பொது அமைப்புக்கள் அறிவித்துள்ளன. போராட்டத்தில் தமிழ் உணர்வாளர்கள் கலந்து கொள்ளவேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ந-35,214)

## கோத்தபாய...

ஐ.தே.க. தலைமையகமாக சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவை கொலை செய்ய பிரதிப் பொலிஸ்மா அதிபர் சதித் திட்டம் தீட்டியுள்ளார் என்ற விடயம் தொடர்பில் தற்போது சுயாதீனமான விசாரனைகள் இடம்பெறுகின்றன. விசாரணைகளின் அடிப்படையில் பல விடயங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. ஆனால் எதிர்தரப்பில் உள்ள சிலர் புலனாய்வுத் துறையில் சிறப்புத் தேர்ச்சியடைந்தவர்களைப் போன்று விசாரனையின் அறிக்கைகள் கிடைக்கும் முன்னரே குற்றவாளிகளை அறிவித்து விட்டார்கள்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சுயாதீனமான முறையிலே விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றனர். இவர்களது விசாரணை நடவடிக்கைகளில் சட்ட ஒழுங்கு அமைச்சு எவ்விதமான தலையீடுகளையும் மேற்கொள்ளவில்லை.

முன்னாள் பாதுகாப்புச் செயலரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவரது பாதுகாப்புக்கு மாத்திரம் 70 பேர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். இதற்காக ஒரு நாளைக்கு 35 இலட்சம் செலவாகுகின்றது. இவ்விடயம் தொடர்பில் எதிர்தரப்பினர் இதுவரையில் அறிந்திருக்காமை ஆச்சரியமாக உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பினை விட அதிக பாதுகாப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மகிந்தவின் பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்று இதுரையில் அரசுக்கு எவ்விதமான கோரிக்கைகளும் முன்வைக்கப்படவில்லை. மகிந்தவுக்கு அரசு முழுமையான பாதுகாப்பை வழங்கும். தற்போது அரசு இவர்களுக்கு வழங்குகின்ற சலுகைகள் கடந்த காலத்தில் அவர்களால் பிறருக்கு தம்மால் வழங்கப்பட்டதா என்ற விடயத்தையும் ஒரு முறை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

பொலிஸ் பிரிவில் இருந்து ஸ்னைபர் துப்பாக்கி காணாமல் போயுள்ளது என்றும், இந்தத் துப்பாக்கி யாரைக் கொலை செய்ய காணாமல் ஆக்கப்பட்டது என்றும் எதிர்த்தரப்பினர் கூறி வருகின்றனர். ஆனால் எந்தவொரு ஸ்னைபர் துப்பாக்கியும் காணாமல் போகவில்லை. ஸ்னைபர் துப்பாக்கிகள் அதிரடிப் படையினரிடமும், களுத்துறை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியிலும், பொலிஸ் தலைமையகத்திலும் காணப்படுகின்றன. சில வேளை துப்பாக்கி பயங்கரவாத புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்ற கோணத்திலே விசாரனைகள் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. எவ்வாறு இருப்பினும் இதன் காரணமாக தேசிய பாதுகாப்புக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படாது - என்றார். (5,61)

## புலிகளுக்கு...

சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

போரின் கடைசி இரண்டு வாரங்கள் குறித்து அனைவரைப் பார்க்கிலும் விடயங்களை அறிந்தவன் நான் ஆவேன். கடைசி இரண்டு வாரங்களில் நான் தான் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன். முன்னாள் அரச தலைவர் நாட்டில் இருக்கவில்லை. முன்னாள் தலைமை அமைச்சரும் இருக்கவில்லை. இராணுவத் தளபதியும் இருக்கவில்லை. முன்னாள் பாதுகாப்புச் செயலரும் கடைசி இரண்டு வார காலப்பகுதியில் நாட்டில் இருக்கவில்லை. இது பற்றிப் பெரும்பாலானவர்கள் மறந்துவிட்டார்கள்.

இவர்கள் நாட்டிலிருந்து சென்றது ஏன் என்றும் பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் கொழும்பு நகரத்துக்கு ஆகாயமார்க்கமாகக் குண்டுகளை வீசுகின்ற போது வேறு எங்கு எங்கெல்லாம் குண்டுகள் விழுமோ என்ற பயத்துடன் மக்கள் இருந்தனர்.

நான் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரின் 5 பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு முகங்கொடுத்தவன் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவ்வாறு தாக்குதலுக்காக வந்த தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் தாக்குதல்களில் உயிரிழந்தனர். அமைச்சர்கள் என்ற வகையில் அன்று நாம் காலையில் வீட்டிலிருந்து வெளியே சென்றுவிட்டு மாலையில் வீடு திரும்புவது சந்தேகமாகவே இருந்தது. அவ்வாறான அனுபவங்களைக் கொண்டவன் என்ற வகையில் எமது பாதுகாப்புப் படையினர் எத்தகைய அர்ப்பணிப்புகளைச் செய்தார்கள் என்பதை நான் அறிவேன்.

போரில் ஈடுபட்ட பாதுகாப்புப் படையினர் செய்த பெரிய தியாகங் களை நீங்கள் அறிவீர்கள். எத்தனை பேர் உயிர்நீத்தனர். இன்னும் எத்தனை பேர் அங்கவீனமுற்றனர். அவர்களது குடும்பங்களுக்கு எவ்வளவு பிரச்சினைகள் இருந்தன. தெளிவாகச் சொல்வதாயின் நாட்டின் குடிமக்கள் உள்பட 50 ஆயிரத்துக்கும் 60 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். இந்த எண்ணிக்கை குறித்து யாருக்கும் சரியாக கூற முடியாது.

அரச தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் என்முன் இருந்த முக்கிய பணி பன்னாட்டுச் சமூகத்தை வெற்றிகொள்வதாகும். பல தடைகளுக்கு மத்தியிலும் அந்தப் பொறுப்பை நிறைவேற்றியுள்ளேன். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரிட்ட அனைத்து இராணுவத்தினரும் மூத்த இராணுவத்தினர். எமது அரசின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகச் செயற்பட்ட எந்தவொருவருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போர் செய்தார் என்பதற்காக எந்தவொரு இடத்திலும் குற்றப்பத்திரமும் கிடையாது. அதேபோன்று அவர்களது சேவைகளுக்கு எந்தவொரு இடையூறும் கிடையாது. பதவி உயர்வுகள், வெளிநாட்டுப் பயணம் மற்றும் பயிற்சிகள் போர் இடம்பெற்ற காலத்தைப் போன்றே போருக்குப் பின்னரும் பெற்றுக்கொடுக்கின்றோம்.

அப்போது இந்தப் போருடன் எவ்வித தொடர்புமற்ற வகையில் எத்தனை கொலைகள் இடம்பெற்றுள்ளன. இந்தக் கொலைகளுக்கு யார் காரணம். அதற்குப் பின்னால் இருந்தவர்களை யார் இயக்குவித்தனர். இவைதான் பிரச்சினைகளாகும். 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் எழுந்த முக்கியமான குற்றச்சாட்டு இதுவாகும். லசந்த விக்ரமதுங்கவை யார் கொலை செய்தது? கீத் நொயார் மீது தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் யார்?, தாஜுதீனை கொலை செய்தவர்கள் யார்?, சிரச போன்ற ஊடக நிறுவனங்களுக்குத் தீ வைத்தவர்கள் யார்?, ஊடகவியலாளர்கள் ஏன் நாட்டை விட்டுச் சென்றார்கள். இவ்வாறான பல விடயங்களைக் குறிப்பிட முடியும். தண்டனை பெற்றவர்கள் யாரின் காரணமாகத் தண்டனையைப் பெற்றார்கள். முப்படையினருடன் இருந்த தனிப்பட்ட தொடர்புகளின் அடிப்படையில் எவரேனும் இராணுவ அதிகாரிகளைப் பயன்படுத்தியிருந்தால் அது பெரிய குற்றமாகும்.

அது இராணுவத்தின் நற்பெயருக்கு இழுக்கானதாகும். இராணுவத்தில் போரில் போரிட்டவர்கள் மற்றும் இன்று சேவையில் இருப்பவர்கள் அனைவருடைய கருத்தும் என்னவென்றால் போருக்கு வெளியே போருடன் எந்த வகையிலும் தொடர்பில்லாத வகையில் கொலைகள், தாக்குதல்கள், பயமுறுத்தல்கள் போன்றவற்றுக்கு இராணுவத்தில் எவரேனும் சம்பந்தப்பட்டிருப்பார்களாயின் நாட்டின் பொதுவான சட்டத்துக்கேற்ப அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படவேண்டும் என்பதாகும். இத்தகைய நிகழ்வுகள் குறித்து விசாரணை செய்கின்றபோது சில இடங்களில் அரசியல்வாதிகள் பிரதிவாதிகளாக உள்ளனர். சில இடங்களில் சாதாரண பொதுமக்களுடன் இருப்பவர்கள் பிரதிவாதிகளாக இருக்கின்றனர். சில விசாரணைகளில் இராணுவத்தில்சேவை செய்கின்றவர்கள்பிரதிவாதிகளாகவுள்ளனர். நாட்டின் பொதுச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது அதற்கு அனைவரும் கட்டுப்பட்டவர்கள் என்ற வகையில் போருக்கு வெளியே இத்தகைய நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருப்பார்களாயின் அவர்களுக்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது இராணுவத்தினருக்குச் செய்யும் பெரும் மதிப்பாகும். அந்த மதிப்பைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். அதனைச் சரி செய்வது தான் பன்னாட்டு ரீதியாக எமது இராணுவத்தினருக்கு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுக்கும் முக்கிய விடயமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் படையில் எமது இராணுவத்தினரை இணைத்துக் கொள்வதற்கான காரணம் இந்த விசாரணையை நாம் மேற்கொள்வதன் காரணத்தினாலேயே ஆகும் - என்றார். (5)

## யாழ்...

என்று தெரிவித்தார். யாழ்ப்பாணம் மாநகர சபையின் 6ஆவது அமர்வு மேயர் இ.ஆர்னோல்ட் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதிலேயே இந்தப் பட்டியல் இலஞ்ச ஊழல் விசாரணைக் குழுவின் தலைவர் ராஜீவ்காந்தால் சமர்ப்பிக்கப்பட்டது. பட்டியலைச் சமர்ப்பித்த அவர் தொடர் நடவடிக்கைக்குப் பரிந்துரைக்குமாறும் வலியுறுத்தினார்.

முறையற்ற ஆளணி நியமனம், இலஞ்சம் பெற்றமை, சட்டவிரோத இறைச்சி விற்பனை, முறையற்ற களஞ்சியப் பதிவுகள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் பட்டியலிடப்பட்டன.

நல்லூர் ஆலயத் திருவிழாக் காலங்களுக்காக சபை அனுமதியுடன் தற்காலிக தொழிலாளர்கள் 40 பேர் மாநகர சபையில் உள்ள தொழிலாளர் சங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களின் 12 பேரிடம் சிறு தொகைப் பணம் பெறப்பட்டே அந்தச் சங்கத்தால் பணிக்குச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அந்த 12 பேரிடமும் மாநகர சபையின் தொழிற் சங்கம் பகுதி பகுதியாக 42 ஆயிரம் ரூபாவை நியமனம் பெற்றுக் கொடுத்தமைக்காக இலஞ்சமாகப் பெற்றுள்ளனர். அந்த 12 பேரும் மாநகர பிரதி மேயர் ஈசன் முன்னிலையில் இதை எழுத்து மூலமாக இலஞ்ச ஊழல் குழுவிடம் ஒப்புக் கொண்டு கையப்பமிட்டுள்ளனர்.

மாநகர சபையின் களஞ்சியத்தில் உள்ள பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள கண்டாவளை மண்ணின் அளவுக்கும் அதிகமாக 12 உழவு இயந்திர கண்டாவளை மண் மேலதிகமாகக் காணப்படுகின்றது. அங்குள்ள இருப்புக் குழாய் (பொக்ஸ் பார்) களஞ்சிய இருப்பில் இருந்து 24 குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்படும். குற்றங்கள் நிரூபிக்கப்படும் பட்சத்தில் பாரபட்சம் இன்றி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மேயர் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 132ஆவது அமர்வில், மாகாண சபைக்கு உட்பட்ட ஊழல் மோசடிகளை விசாரிக்க சபை உறுப்பினர்கள் வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ந:5.8)

## மாகாணசபை...

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அடுத்த மாதம் 19ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளமையால், ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதிக்கு முன்னர் வடக்கு அமைச்சரவைப் பிரச்சினை தீர்க்கப்படு வதற்கு வாய்ப்பில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாண அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக பா.டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கு மீதான நீதிமன்றின் இடைக்காலக் கட்டளை ஜூன் மாதம் 29ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டது. வடக்கு மரகாண அமைச்சராக பா.டெனீஸ்வரன் தொடர்வதாகக் கூறப்பட்டிருந்தது.

இந்தக் கட்டளைக்கு எதிராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா இல்லையா என்பது தொடர்பில் நீதிமன்றம் இதுவரை தீர்மானிக்கவில்லை.

டெனீஸ்வரன் மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்த மூல வழக்கை விசாரித்த நீதியரசர்களில் ஒருவர், முதலமைச்சரின் மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கை விசாரிக்கும் நீதியரசர்கள் குழாமில் உள்ளடக்கப்பட்டிருந்தார். டெனீஸ்வரன் தரப்புச் சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றத்தில் அதற்கு ஆட்சேபணை வெளியிட்டிருந்தனர். இதனால் உயர் நீதிமன்றத்தில் வழக்கு இரண்டு தடவைகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

வழக்கு உயர் நீதிமன்றில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இரண்டு நீதியரசர்களே அமர்வில் இருந்தமையால் வழக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. அடுத்த மாதம் 19ஆம் திகதி எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மேன்முறையீட்டு நீதிமன்றின் இடைக்காலக் கட்டளையை நடைமுறைப்படுத்தவில்லை என்று டெனீஸ்வரன் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு அடுத்த மாதம் 16ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. அன்றைய தினமே, அமைச்சர் பதவியிலிருந்து நீக்கியமைக்கு எதிராக டெனீஸ்வரன் தாக்கல் செய்த மூல வழக்கும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## சதீஸின்...

வழக்கு எதிர்வரும் ஒக்ரோபர் 2ஆம் திகதிக்கு யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற நீதிவானினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

ஓம் ஸ்ரீ சிவபார்வதி ஜோதிட நிலையம்
ஓலைச்சுவடிகள் மூலம் காண்டம் வாசிக்கப்படும்.
வட்டுக்கோட்டை, சங்கரத்தை சந்திக்கு அருகில்.
திருமணத்தடை
புத்திரபாக்கியம் /புத்திரபாக்கிய தடை
தொழில் வியாபாரம் தடைகள்
வெளிநாட்டு பயணத்துக்கான பரிகாரம்
முற்பிறப்பு தோசங்கள் விலக போன்றவற்றுக்கான பரிகாரங்கள்.
தொடர்புகளுக்கு - முற்பதிவுகள் 076 328 7119

# வேலணைப் பிரதேச சபையில் தமிழ்க் கூட்டமைப்பு வெளிநடப்பு

தவிசாளர் உறுப்பினர்களுக்கு உரிய மரியாதை கொடுக்கவில்லை. தமது சிறப்புரிமை பாதிக்கப்படுகின்றது என்று தெரிவித்து வேலணைப் பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நேற்று வெளிநடப்புச் செய்தனர்.
வேலணைப்பிரதேசசபையின்மாதாந்த அமர்வு தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. சபையின் கொடுப்பனவுகள் பற்றி ஆராயப்பட்டது. இதன் போது ஏற்பட்ட வாதங்கள் சபையில் அமைதியின்மையை தோற்றுவித்தன.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் நாவலன் செய்யப்பட்ட வேலைகளின் கணக்குகள் தொடர்பில்சிலவிவாதங்களைமுன்வைத்தார். கணக்குகள் மற்றும் சபையின் ஊழியர்களுக்கான மேலதிக கொடுப்பனவுகள் தொடர்பில் அறிக்கை வாசிக்கப்பட்டது. உறுப்பினர் நாவலன் சந்தேகங்களை கேட்க முற்பட்டார். சபையின் உப அலுவலகத்தில் உழவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளன.வாகனங்கள்திருத்துவதற்காக பழுது பார்க்கும் நிலையங்களில் விடப்பட்டபோதும் இன்னமும் அவை சபைக்கு வரவில்லை – என்றார்.
இந்தக் கேள்விகளை அவர் கேட்பதற்கு இருக்கையில் இருந்து எழுகின்ற போது தவிசாளர் அவரை பேசவிடாமல் இருக்குமாறு பணித்தார். மேசையில் பல தடவைகள் கையால் தட்டினார். நாவலன் மற்றும் சில உறுப்பினர்கள் கருத்துக்கள் மற்றும் வாதங்களை முன்வைக்கும் போது தவிசாளர் அவர்களை அமருமாறு பணித்தார். வேறு சில உறுப்பினர்கள் கருத்துக் கூற முற்பட்டனர். இதன்போது விருப்பம் இல்லை என்றால் வெளியே போகுமாறும் தவிசாளர் மற்றும் சிலர் குறிப்பிட்டனர். இதனால் சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.
தவிசாளர் எமது கருத்துக்களைக் கூற விடுவதில்லை. சிலரின் கருத்துக்களை மாத்திரம் கேட்கின்றார். நாம் வெளியேற்றப்படுவது தொடர்பில் தவிசாளர் தான் கூறவேண்டும். ஆனால் அவரின் அருகில் இருப்பவர்கள் கூறுகின்றார்கள். உறுப்பினர்களின் கருத்துக்கு மதிப்பில்லாத சபையில் இருப்பதால் எந்தப் பயனும் இல்லை. தவிசாளர் தனது அதிகாரத்தை மீறிச் செயற்படுகின்றார். சபை அமர்வு ஆரம்பிப்பதற்கு முதல் சபை அலுவலர்களுடனும் முரண்பட்டார். எமது சிறப்புரிமை பாதிக்கப்படுகின்றது என்று தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 7 உறுப்பினர்கள் வெளியேறினர். சபையில் குழப்பம் ஏற்பட்டு இருபது நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டது. அதன் பின்னர் மிகுதியாக உள்ள 13 பேருடன் சபை நடைபெற்றது. (7,5)

# பொய்க் கருத்துக்களை கூறி மூக்குடைபட்ட ஈ.பி.டி.பியினர்

யாழ்ப்பாணம், செப்.29
யாழ்ப்பாணம் பொது நூலகக் கல்வெட்டில் உள்ள தகவல்கள் தொடர்பாகப் பேசப்பட்ட போது உண்மைக்குப் புறம்பான தகவல்களைக் கூறி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்கள் மூக்குடைபட்டனர். அவர்களின் கருத்துக்கள் சபைக் கூட்டப் பதிவேட்டில் இருந்து நீக்கப்பட்டன.
யாழ்ப்பாணம் மாநகர சபையின் 6ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. அதில் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் உள்ள கல்வெட்டில் சீரமைப்புச் செய்து வைக்காத ஒருவரே திறந்து வைத்தார் என்று பொய்யான வரலாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அதைத் திருத்தி உண்மையான வரலாற்றைப் பதிய வேண்டும் என்று யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் நேற்று தீர்மான வரைவு ஒன்றைக் கொண்டு வந்தார்.
உடனே ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர்களான திருமதி ப.யோகேஸ்வரியும், மு.ரெமீடியஸும் முந்திக் கொண்டு கருத்துத் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம் பொது நூலகத்தை எரித்த பிரதான சூத்திரதாரி யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகை நிறுவனத்தின் இயக்குநரின் தந்தையாவார். அவர் இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தில் கடமையாற்றியபோது மதுபோதையில் நூலகத்தை எரித்தார் என்று கூறப்படுகின்றது என்றனர்.
இவர்களின் கருத்துக்கு சபையில் கடும் எதிர்ப்புக் கிளம்பியது. உண்மைக்குப் புறம்பான கருத்துக்களைக் கூறுகின்றனர். கருத்துக்கள் முன்வைக்கப்படும்போது ஆதாரத்துடன் முன்வைக்கப்பட வேண்டும். யாரோ கூறுகின்றனர் என்று பொய்யான கருத்துக்களைச் சபையில் முன்வைக்கக் கூடாது என்று உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.
இந்தக் கருத்துக்கள் சபைக் கூட்டக் குறிப்பேட்டில் இருந்து நீக்கப்படும் என்று சபையின் முதல்வர் அறிவித்தார்.
கொண்டு வரப்பட்ட தீர்மான வரைவு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டு, உண்மையான வரலாற்றைப் பதிவு செய்வதற்கான முழு நடவடிக்கையும் எடுக்கப்படும் என்றும் சபை முதல்வர் தெரிவித்தார். (ற-8)

# திடீரென சிங்கப்பூருக்கு புறப்பட்டுச் சென்றார் மகிந்த

கொழும்பு, செப். 29
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச திடீரென சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். இது அவரது தனிப்பட்ட பயணம் என்று சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.
நான்கு நாள்கள் பயணமாக மகிந்த ராஜபக்சவுடன் அவரது குடும்பத்தினர் மற்றும் கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும், சிங்கப்பூருக்குப் பயணமாகியுள்ளனர். மகிந்த ராஜபக்ச முதலாம் திகதி நாடு திரும்புவார் என்றும் கூறப்படுகிறது. (5)

# மகிந்த குடும்பத்தை அரசு சட்டத்தின் முன் நிறுத்தாது

## சந்தியா எக்னெலிகொட விரக்தி

கொழும்பு, செப்.29
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச குடும்பத்தை இந்த அரசு எப்போதும் சட்டத்தின் முன் நிறுத்தாது என்று தெரிவித்துள்ளார் காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட.
கொழும்பில்நேற்றுநடத்தியசெய்தியாளர்சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் தெரிவித்ததாவது:
பிரகீத் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கை விரைவாக விசாரணை செய்ய வேண்டும். கூட்டரசு இந்த விடயத்தில் பொறுப்புடன் செயற்படுவது கட்டாயம்.
மகிந்த ராஜபக்சவும், கோத்தபாய ராஜபக்சவுமே பிரகீத் காணாமல் ஆக்கப்பட்டமைக்குப் பொறுப்பாளிகள். 12 ஆண்டுகளாகத் தந்தையை இழந்துள்ள எனது பிள்ளைகளுக்கு கூட்டரசு இதுவரை உதவியளிக்கவில்லை. பிரகீத்தின் விசாரணைகளுக்குத் தேவையான இராணுவ ரீதியான ஒத்துழைப்புகளைப் பெற்றுத் தர வேண்டும் என்று கோரியிருந்தேன். அதுவும் நடக்கவில்லை.
இனியும் தீர்வைப் பெறாது இருக்க முடியாது. அடுத்த இரண்டு மாதங்களுக்குத் தொடர்ச்சியான தெய்வ வழிபாடுகளை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளேன். இராணுவத்தால் மறைக்கப்படுகின்ற விடயங்களை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்க அரசு தலையீடு செய்ய வேண்டும். இவ்வாறு செய்யாவிட்டால் எனது சாபம் அரசுக்குப் போய்ச் சேரும். ராஜபக்ச குடும்பத்தை இந்த அரசு எப்போதும் சட்டத்தின் முன் நிறுத்தப் போவதில்லை. அவர்களுக்கும், குற்றத்தை மறைக்கும் நபர்களுக்கும் இயற்கையே தண்டனை வழங்க வேண்டும் - என்றார். (ற)

# ஞானசாரரின் மேன்முறையீட்டை விசாரிப்பதற்கு நீதிமன்று முடிவு

கொழும்பு, செப்.29
சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ஞானசார தேரர் தனது தண்டனைக்கு எதிராகச் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.
இந்த மனு நேற்று நீதியரசர்களான ஈவா வனசுந்தர, விஜித் மலல்கொட ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
இந்த மனு மூன்று நீதியரசர்கள் முன்னிலையில் விசாரிக்கப்பட வேண்டும் என்றும், நேற்று நீதியரசர்கள் குழாம் சரியாக ஒழுங்கமைக்கப்படாமையால் மனு மீதான விசாரணை ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி வரை பிற்போடப்படுகின்றது என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
2016ஆம் ஆண்டு ஊடகவியலாளர் பிரகீத் எக்னலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்கு ஹோமாகம நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் போது, நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொடஅத்தே ஞானசார தேரருக்கு 6 வருடங்களில் அனுபவிக்கும் படியாக 19 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ற)

## அரசியல் கைதிகள்....

கடிதத்தை அரச தலைவர் செயலகத்தில் கையளித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவின் உறுப்பினர்கள் உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள அரசியல்க் கைதிகளை நேரில் சென்று சந்தித்தனர்.
அரச தலைவருக்குக் கடிதம் சமர்பிக்கவுள்ளதை, அரசியல் கைதிகளிடம் தெரிவித்துள்ளனர். அதற்கு அரசியல் கைதிகளின் சம்மதத்தையும் வாங்கியுள்ளனர். அதனடிப்படையில் சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பினர் கடிதத்தைத் தயாரித்துள்ளனர். அவர்கள் அரச தலைவர் செயலகத்தில் சமர்ப்பித்துள்ளனர்.
சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான குழுவின் தலைவரான சேனக பெரேரா இது தொடர்பில் தெரிவித்ததாவது:
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்த் தடுத்து வைக்கப்பட்டுள்ள 107 அரசியல் கைதிகளில் பெரும்பாலானவர்களுக்கு எதிராக வழக்குகள் நடக்கின்றன. சிலருக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சிலர் வழக்குத் தாக்கல் செய்யப்படாமல் ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக, தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். பெரும்பாலான வழக்குகளில் அரசியல் கைதிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலமே ஒரே சான்றாக முன்வைக்கப்பட்டுள்ளது.
அரசியல்வாதிகள் தம்மை ஏமாற்றி வருகின்றனர் என்றும், அதனால் அரசியல் வாக்குறுதிகளில்நம்பிக்கையிழந்து போயுள்ளோம் என்றும் அரசியல் கைதிகள் எம்மிடம் தெரிவித்தனர்.
அரசியல் கைதிகளில் பெரும்பாலானவர்களுக்கு இன்னமும் சிறைத்தண்டனை வழங்கப்படாத போதும் நீண்டகாலம் சிறையில் இருப்பதால் பெரும் தண்டனையை அனுபவித்திருக்கிறார்கள்.
அவர்கள் அரசியல் கைதிகளாக இருக்கிறார்கள். அவர்கள் பெற்றோரை இழந்திருக்கிறார்கள். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் குழந்தைகளைக் கூட இழந்திருக்கிறார்கள். அடிப்படையில் அவர்கள் அனைத்தையும் இழந்து போயுள்ளனர் - என்றார். (ற.5)

## அரசியல்வாதிகள்...

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு எந்தவொரு அச்சுறுத்தலும் காணப்படவில்லை. எதிர்கால அச்சுறுத்தல்களுக்கு இராணுவம் தயாராக இருக்கின்றது. அத்துடன் நாட்டில் உள்ள அனைத்து குடிமக்களும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்புக் காணப்படுகின்றது.
நாட்டில் இராணுவம், கடற்படை மற்றும் வான் படை ஆகியவை வலுவான படைகளாக உள்ளன. நாட்டில் போருக்கு முற்றுப்புள்ளி வைத்த இந்த சக்திகள், நாட்டின் பாதுகாப்புச் சூழ்நிலை தொடர்ப்பிலும் நன்கு அறிந்திருப்பதாகத் தான் நம்புகின்றேன் - என்றார். (5)

## ரணிலைத்...

முயற்சி விவகாரம் கொழும்பு அரசியலில் பெரும் பூதாகாரமாகியுள்ள நிலையில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.
தலைமை அமைச்சரை நோக்கி வேகமாக வந்த உந்துருளியால் இந்த விபத்து ஏற்பட்டது. இதில் ரணில் உயிர் தப்பியுள்ளார். அவரின் பாதுகாவலர்கள் இருவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
கடந்த புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கமவின் நெருக்கமான் உறவினரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக ராஜகிரிய பிரதேசத்துக்குத் தலைமை அமைச்சர் சென்றுள்ளார். அஞ்சலி செலுத்திவிட்டுத் திரும்பி வரும் போது, அந்த வீட்டிற்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தலைமை அமைச்சரின் வாகனத்தில் ஏறும் போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
தலைமை அமைச்சரின் வருகை காரணமாக இறுதிச் சடங்கு உள்ள பிரதேசத்துக்கு பொலிஸார் வருகைத்தந்துள்ளனர். இதன் போது வேகமாக வந்த உந்துருளியை நிறுத்துமாறு பொலிஸார் சமிக்ஞை காட்டியுள்ள போதிலும், நிறுத்தாமல் பாதுகாப்பு அதிகாரிகள் மீது மோதியுள்ளார். தலைமை அமைச்சர் தெய்வாதீனமாக தப்பியுள்ளார் என கூறப்படுகின்றது.
உடனடியாக செயற்பட்ட பொலிஸார், உந்துருளியைச் செலுத்திய சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாத 20 வயது இளைஞரைக் கைது செய்துள்ளனர். (5)






இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கண்டி போகம்பர மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணம் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மாவனல்ல ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

# இன்றைய மோதல்கள்

**சரஸ்வதி சசறி**
**கால்பந்தாட்டம்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் வடக்கின் கில்லாடி வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதியாட்டம் இன்று சனிக்கிழமை அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**ஏபி வி.கழக**
**துடுப்பாட்டம்**

ஏபி விளையாட்டுக் கழகம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஹாட்லியைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யூனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் கழக அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து றைட்ரோன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**நவஜீவன்ஸின்**
**கால்பந்தாட்டம்**

நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கிளிநொச்சி**
**பிறீமியர் லீக்**

கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் கிளிநொச்சி பிறீமியர் லீக் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதய தாரகை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளந்தாரகை விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மகா தீபம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தூயதமிழ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பப்ரிஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)


# நீக்கிலஸ் - மேரிஸ் மீண்டும் மோதல்!

யாழ்ப்பாணம், செப். 29

யாழ்ப்பாணம் நாவாந்துறையில் உள்ள கால்பந்தாட்ட அணிகளான சென். மேரிஸ், நீக்கிலஸ் அணிகள் மீண்டும் ஒன்றையொன்று எதிர்த்துப் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. சுமார் மூன்று வருடங்களின் பின்னர் இந்த இரண்டு அணிகளும் மீண்டும் நேருக்கு நேர் சந்திக்கின்றன.

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் எவ். ஏ. கிண்ணத் தொடரின் ஆட்டத்தில் தான் இந்த இரண்டு அணிகளும் மீண்டும் மோதவுள்ளன. நாளை ஞாயிற்றுக்கிழமை இந்த ஆட்டம் இடம்பெறவுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு இந்த இரண்டு அணிகளும் மோதிய ஆட்டத்தின்போது பெரியதொரு கைகலப்பு ஏற்பட்டது. இந்த விவகாரம் யாழ்ப்பாண மாட்டத்தின் முன்னாள் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. இவ்வாறான மோதல்கள் வருங்காலங்களில் தவிர்க்கும் பொருட்டு இரு அணிகளும் நேருக்குநேர் சந்திக்கும் நிலை ஏற்பட்டால் சென். மேரிஸ், சென். நீக்கிலஸ் அணிகள் சுழற்சி முறையில் ஆட்டத்தில் களமிறங்குவதைத் தவிர்க்க முடிவெடுக்கப்பட்டது. எனினும் இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் எவ்.ஏ. கிண்ணம் தவிர்க்க முடியாதது என்பதால் இரண்டு அணிகளும் இம்முறை மோதியே ஆக வேண்டும் என்ற நிலை உள்ளது. இதன்படி இந்த ஆட்டம் நாளை கொழும்பில் நடைபெறுகிறது. (ம-23)





# கே.ஸி.ஸி.ஸி. — சென்றலைட்ஸ் இறுதியில் நாளை பலப்பரீட்சை!

யாழ்ப்பாணம், செப். 29

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழம் நடத்தும் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழக அணி நாளை மோதவுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நாளை காலை 9.30 மணியளவில் இந்த இறுதியாட்டம் இடம்பெறவுள்ளது. பரிசளிப்பு நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக உள்ளூராட்சி ஆணையாளர் எம்.பற்றிக்டிறஞ்சன் கலந்து கொள்ளவுள்ளார்.

(ம-23)

# காமாட்சி அம்பாள் நேர்செற் வெற்றி

யாழ்ப்பாணம், செப். 29

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானதத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தொண்டமனாறு கலையரசி விளையாட்டுக் கழக அணி மோதியது. 25:15, 25:12 என்ற நேர்செற் கணக்கில் காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

(ம-23)

# இந்து இளைஞர் நேர்செற் வெற்றி

யாழ்ப்பாணம், செப். 29

நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக பி அணி வெற்றிபெற்றது.

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 26:24, 25:21 என்ற நேர்செற் கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# பாடும்மீன் அணி அரையிறுதியில்

யாழ்ப்பாணம், செப். 29

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் வடக்கின் கில்லாடி வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு 7 மணிக்கு இடம்பெற்ற காலிறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழக அணி மோதியது.

5:0 என்ற கோல் கணக்கில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-23)


# மந்தகதி ஓட்டத்தால்தான் மத்தியூஸ் நீக்கப்பட்டார்!

## ஹத்துருசிங்க வெளிப்படைப் பேச்சு

இலங்கை அணியில் இருந்து மத்தியூஸ் நீக்கப்பட்டதற்குக் காரணம் அவரின் ஓட்டம் மந்த கதியில் இருப்பதால்தான் என்று கருத்துத் தெரிவித்தார் இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஹத்துருசிங்க.

ஆசியக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி தொடர் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து மத்தியூஸ் தலைமைப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார். இதையடுத்து "தோல்விக்கு நான்தான் பலிகடாவா?" என்று கேட்டு மத்தியூஸ் இலங்கை கிரிக்கெட் சபைக்குக் கடிதமொன்றை எழுதினார். இது இலங்கை கிரிக்கெட் சபையை தர்ம சங்கடத்தில் ஆழ்த்தியது. இதையடுத்து மத்தியூஸ் அணியில் இருந்தும் தற்போது நீக்கப்பட்டுள்ளார். அவரின் நீக்கத்துக்குக் காரணம் மத்தியூஸ் இலக்குகளுக்கு இடையில் மந்த கதியில் ஓடுவதால்தான் என்று ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

"64 ரன்அவுட்களில் மத்தியூஸுக்குப் பங்குள்ளது. இதில் 49 முறை எதிர்முனை வீரர்கள் இவரால் ரன்அவுட் ஆகியுள்ளார்கள். இது உலக சாதனை. இது போன்ற விடயங்களைத்தான் நாங்கள் பார்க்கிறோம். ஆனால் அவர் விரைவில் இந்தக் குறைகளைச் சரிசெய்து கொண்டு மீண்டும் இலங்கை கிரிக்கெட்டுக்கு சேவை செய்ய வேண்டும் என்றே விரும்புகிறோம்" என்று ஹத்துருசிங்க மேலும் தெரிவித்தார். (ம)







# இந்தியா சம்பியன்




ஆசியக் கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் பங்களாதேஷை வீழ்த்தி கிண்ணம் வென்றது இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. பங்களாதேஷின் ஆரம்ப வீரர்களாக டாஸ் மற்றும் மிராஸ். மிராஸ் நிதானித்து நிற்க மறுமுனையில் வெளுத்துவாங்கினார் டாஸ். இந்தியாவுக்கு கிலியை ஏற்படுத்தக்கூடிய ஆரம்பத்தைக் கண்டது பங்களாதேஷ் அணி. இலங்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைத் தொட்டது மிராஸ் டாஸ் இணை. 17.5 பந்துப் பரிமாற்றங்களில் இலக்குச் சரிவில்லாமல் 100 ஓட்டங்களைப் பெற்றது பங்களாதேஷ் அணி. அணி 120 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மிராஸ். ஆனால் பங்களாதேஷின் மத்திய வரிசை அணியை அப்படியே கைவிட்டது. கையிஸ் 2, ரகிம் 5, மிதுன் 2, மகமதுல்லா 4 என்று அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். டாஸ் 121 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் மின்னல்வேக ஸ்டம்பிங் மூலம் அவரை வெளியேற்றினார் டோனி. ஆரம்ப வீரர்களைத் தவிர சர்க்கர் மட்டும் இரட்டை இலக்கங்களுக்குச் சென்று 33 ஓட்டங்களைப் பெற்றார். முடிவில் பங்களாதேஷ் அணி 222 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

பந்துவீச்சில் குல்தீப் யாதவ் 3 இலக்குகளையும், கேதர் யாதவ் 2 இலக்குகளையும், பும்ரா, சாகல் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்ப வீரர்களாக தவான் மற்றும் ரோகித் சர்மா. இந்தத் தொடரில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய தவான் இறுதியாட்டத்தில் தடுமாறினார். வெறும் 15 ஓட்டங்களுடன் அவர் பவிலியன் திரும்பினார். ராயிடுவால் முடிந்தது இரண்டே ஓட்டங்கள். 48 ஓட்டங்களுடன் ரோகித் சர்மாவை வெளியேற்றினார் ரூபல் ஹொசைன். டோனி, டினேஸ் கார்த்திக் இணைந்து சிறிதுநேரம் தாக்குப் பிடித்தனர். 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் டினேஸ் கார்த்திக். டோனி 36 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். டோனி ஆட்டமிழந்த போது இந்திய அணி 160 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்திருந்தது. உபாதை காரணமாக கேதர் யாதவ் ஆட்டமிழப்பற்ற ஓய்வை அறிவித்துச் சென்றார். இது இந்திய அணிக்கு மேலும் பின்னடை வைக் கொடுத்தது. எனினும் ஜடேயா, புவனேஸ்வர் இணைந்து இந்திய அணியின் பக்கமாக வெற்றியை அழைத்து வந்தனர். ஓரிரு ஓட்டங்களாக இன்னிங்ஸை அவர்கள் நகர்த்திச் சென்றனர். இறுதி மூன்று பந்துப்பரிமாற்றங்களில் 13 ஓட்டங்கள் தேவை என்ற நிலை. 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஜடேயா. எனினும் ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் கேதர் யாதவ். (ம)

## ஆட்டம் சமநிலை

யாழ்ப்பாணம், செப். 28

வட்டக்கச்சி மத்திய கல்லூரியால் நடத்தப்படும் வட்டக்கச்சி பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்று சமநிலையில் முடிவடைந்தது.

வட்டக்கச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.15 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மருதம் கிங்ஸ் அணியை எதிர்த்து வி.சி.சி. பீனிக்ஸ் அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்ததால் ஆட்டம் சமநிலையானது. (ம-23)

## பிரண்ட்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், செப். 28

வட்டக்கச்சி மத்திய கல்லூரியால் நடத்தப்படும் வட்டக்கச்சி பிறீமியர் லீக் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வி.சி.சி. பிரண்ட்ஸ் அணி வெற்றிபெற்றது.

வட்டக்கச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று நண்பகல் 11 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் தமிழ்த் தலைவர்கள் அணியை எதிர்த்து வி.சி.சி பிரண்ட்ஸ் அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் வி.சி.சி. பிரண்ட்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)



## ஆஸி. அணிக்கு இரு துணைத் தலைவர்கள்

ஆஸ்திரேலிய அணிக்கு இரண்டு துணைத்தலைவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மிச்செல் மார்ஷ், ஹசில்வூட் இருவருமே அவ்வாறு துணைத் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுய விவகாரத்தில் வோர்ணர் ஓர் ஆண்டுத் தடைபெற்ற பின்னர் சுமார் ஆறு மாதகாலமாக உபதலைவர் பதவி வெற்றிடமாகவே இருந்தது. இந்த நிலையில் தற்போது அந்த வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளது. (ம)

**The Science Corner**

Clock Tower Lane, Jaffna.

**DAY CLASSES** புதிய பிரிவுகள் ஆரம்பம் - 01.10.2018

★ **Chemistry** : இரசாயன கணிப்புக்கள்
K.Subeesan : 9.30 am - 11.30 am

★ **Physics** : நியூட்டனின் இயக்கவிதிகள்
R.Raakulan : 11.30 am - 1.30 pm
Englishmedium : 2.00 pm - 3.30 pm


★ **Biology** : Unit 1&2
K.Kalaivanan : 1.30 pm - 3.00 pm
Englishmedium : 6.00 am - 7.30 am

2019 & 2020 பிரிவுகளுக்கான வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு - 077 430 7829

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

சமயபாடம் மற்றும் வழிகாட்டல் ஆலோசனை போன்ற ஆசிரியர் தெரிவுப் பரீட்சைகள் உட்பட அனைத்து பரீட்சைகளுக்கும் ஞாயிறு மற்றும் மாலை நேர வகுப்புகள் நடைபெறுகின்றன.
கணக்காய்வு பரீட்சகர் பரீட்சைகளுக்கான விசேட மாதிரி வினாத்தாள் வகுப்புகள் நடைபெறுகின்றன.
சனி, ஞாயிறு 9.30 மணிக்கு

தொடர்புகளுக்கு
076 688 3394



## அதிக பாடங்களைத் தந்த ஆசியக் கிண்ணத் தொடர்

### ரசிட்கான் பெருமிதம்

ஆசியக் கிண்ணத் தொடர் அதிக பாடங்களைக்கற்றுத்தந்துள்ளது என்று தெரிவித்தார் ஆப்கானிஸ்தான் அணியின் சகலதுறை வீரர் ரசிட்கான்.

இந்தத் தொடரில் ஆப்கானிஸ்தான் அணி மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியது. இலங்கை, பங்களாதேஷ் அணிகளை வீழ்த்தி லீக் சுற்றில் தனது பிரிவில் முதலிடம் பிடித்தது. அத்துடன் நான்கு அணிகள் பங்குபற்றும் சுற்றில் பலம்மிக்க இந்தியாவைச் சமன்செய்தது. இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் ரசிட்கான்.

"இந்த ஆசியக் கிண்ணத் தொடர் மறக்க முடியாத பல்வேறு அனுபவங்களைத் தந்துள்ளது. ஆப்கானிஸ்தான் அணியால் எதுவும் சாதிக்க முடியும் என்பதை இந்தத் தொடரில் வெளிப்படுத்தியுள்ளோம். தொடர்ந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவோம். ஓர் அணியாகத் தொடர்ந்து செயற்படுவதே எமது பலம். அதைத் தொடர்ந்து செயற்படுத்துவோம். அடுத்தடுத்த தொடர்களில் அணியை மேலும் வலுப்படுத்தி அடுத்தடுத்த தொடர்களில் இன்னும் பெரிதாகச் சாதிப்போம்" என்று ரசிட்கான் மேலும் தெரிவித்தார். (ம)

**பணிப்பெண் தேவை**

வயது முதிர்ந்த பெண் ஒருவரை **பராமரிப்பதற்கு.** வயது 40 - 55. தங்குமிடவசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும்.

**077 996 7037**

**வீடு விற்பனைக்கு**

நவாலி வடக்கு மானிப்பாய் என்னும் முகவரியிலுள்ள 1 ½ நிலப்பரப்பு அளவு கொண்ட காணியுடன் கூடி வீடு விற்பனைக்குண்டு.

**077 283 5376, 077 495 5841**

**விற்பனைக்கு**

கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு- யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்திருக்கும் இடத்தில் 2 பரப்புக் காணியுடன் கூடிய பெரிய வீடு. விற்பனைக்கு உண்டு. (நல்ல தண்ணீர் கிணறு)

தொடர்புகளுக்கு:- **076 785 1067**

**விற்பனைக்கு**

கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு. யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் 7 3/4 பரப்பு கொண்ட காணியில் திருமண மண்டபம், பின் பகுதியில், கார் தரிப்பிட வசதிகள் கொண்ட கட்டட தொகுதி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:- **076 785 1067**

(CS/20147)(10)

## மரண அறிவித்தல்

### திருமதி இராணிதேவி பொன்னம்பலம்



மண்ணில் 17.01.1946 விண்ணில் 28.09.2018

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் ஆயிலி காரைநகரை நிரந்தர வசிப்பிடமாகவும் நெளுக்குளம் வவுனியாவில் தற்போது வசித்து வந்தவருமான திருமதி இராணிதேவி பொன்னம்பலம் நேற்று (28.09.2018) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை - செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற கந்தையா பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் யசோதா (கொழும்பு), ரவீந்திரன் (ஆசிரியர் வவுனியா இறம்பைக்குளம் ம.வி.), புனிதவதி (சட்டத்தரணி திருகோணமலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான இலங்கநாதன், அன்னபூரணம் மற்றும் அன்னபாக்கியம் (கொழும்பு), பஞ்சநாதன் (மன்னார்), சந்திரசேகரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் கேதீஸ்வரன் (கன்சாட் அறிக்கையாளர் பாராளுமன்றம்), பிரசாந்தி (ஆசிரியர், வ/ தரணிக்குளம் கணேஷ் வித்தியாலயம்), துஷ்யந்தன் (சட்டத்தரணி, திருகோணமலை) ஆகியோரின் அன்புமாமியாரும் பேரம்பலம், விசாலாட்சி, மகேந்திரம், சிவஞானசுந்தரம், சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஹரிகரன், பவித்திரா, டிவ்யஹர்ஷன், டிவ்யலக் ஷன், சியாணி, டிவீநாத் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 16/41, 8ஆம் ஒழுங்கை, மன்னார் வீதி, நெளுக்குளம், வவுனியா (எரிபொருள் நிலையம் அருகில்) நாளை (30.09.2018) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**நெளுக்குளம், வவுனியா.** **077 644 8842, 077 385 0550**

## மரண அறிவித்தல்

### அப்புத்துரை சிவராஜா



கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அப்புத்துரை சிவராஜா கடந்த (27.09.2018) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை லக்ஸ்மி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற செல்வநாயகத்தின் அன்புச்சகோதரரும் நிர்மலா (தாதி யாழ் .போதனா வைத்தியசாலை), நந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் இன்பராஜா (மினிபஸ்உரிமையாளர்), சாமினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் றெனிஷா, தரணிகா, வேணுஷா, நந்துசன், சதுர்ஷன், சஷ்வின் (லண்டன்), றதீஸ்குமார், தனுசன் ஆகி யோரின் அன்புப்பேரனும் ஆருஸ், ஆகஷித் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை (30.09.2018) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் தொந்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புகையிரத வீதி, அருகில் மல்லாகம்.**

**தகவல் : குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா சிவகுரு



மாரீசன் கூடலைப் பிறப்பிட மாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா சிவகுரு நேற்று (28.09.2018) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு சிவகுருவின் அன்பு மனைவியும் சந்திரசேகரம், குணசேகரம், மாலதி, ஞானச்சந்திரன் (பண்டத்தரிப்பு பரிஷ் கூட்டுறவுச் சங்கம்), கலாநிதி, கௌசலா (ஆசிரியர் இளவாலைமெய்கண்டான்), சிவகுமார் (துர்க்கா ரேடர்ஸ்), சறோஜினி (சுவிஸ்), புஷ்பவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தாயும் விஜயபாலன், மங்களராணி, ஜெயகுமாரி, ரதீஸ்வரன், நவநீதன், சிவகுமார், விஜிகலா, தவமணிதேவி ஆகியோரின் அன்புமாமியும் தர்மதன், குகதர்சி, பிரியங்கா, கஜேந்தினி, சாரங்கா, அபிநயன், நமிதா, கீர்த்தனன், சயன், றாகவி, அயன், ஹம்சவர்த்தினி, சாகரி, நதுமிதன், காவியன், ஓவியா காலஞ்சென்ற சயிந்தன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மாரீசன்கூடல், இளவாலை.**
**021 225 1727, 076 802 7770**

**தகவல் : குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.